

# விதைகள்...

## பாகம்–4

# விதைகள் – பகுதி.4

## என்னுரை...

உலகத்தை உருவாக்கியவுடன் உருவாக்கப்படப் போகிற மக்கள் செய்யப் போகிற பாவத்திற்காக பிதாவினால் விதையாக விதைக்கப்பட்ட நம் இரட்சகராம் இயேசுவின் நாமத்தில் இதை வாசிக்கப்போகிற அனைவரையும் வாழ்த்தி விதைகள் பகுதி 4–ஐ ஆரம்பிப்பது கர்த்தருக்குள் எனக்கு நலமாகக் கண்டது.

“அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, ... உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார். (1 பேதுரு.1:20)

உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில்... (வெளி.13:8)”

தொடர்ச்சியாக வேதத்தில் தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் விதைகளைக் குறித்த சத்தியங்களை ஆராய்வது... ஆராய்ந்து கொண்டேயிருப்பது நல்லது. கர்த்தர் இயேசுவின் வருகைக்கு தயாராகவும், தயாராக்கவும் அது பேருதவியாக இருக்கும்.

**உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.**


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**
**நித்தியர் இயேசு ஊழியங்கள்**
5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008
தொலைபேசி: +91-461-23 77 88 9
அலைபேசி: +0-9442466250 & +0-9003456506

Email : sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

**Our Address:**

**Sis. LATHA DAVID**
**SOVEREIGN JESUS MINISTRIES**
**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST)**
**TUTICORIN-628 008**

**Ph.: +91-461-23 77 88 9**
**Mobile: +0-9442466250 & +0-9003456506**

Email : sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

## *விதை கையில் ...*

விதை கையில் ...

ஓர் இடைவெளி ...

அந்தப் பக்கத்தில் பசியுடன் ஒரு மனிதன் ...

உலகமெங்கும் சாதாரணமாகக் காணக்கிடைக்கும் காட்சிகள்.

விதைகளை அதன் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு... அதைப்பற்றி கலந்தாலோசித்துக்கொண்டு, அதன் சிறப்பியல்புகளைப் பற்றி புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பதால் எதுவும் நடக்கப்போவதில்லை. அதை ஒரு நல்ல நிலமாகப் பார்த்து, அல்லது தரிசு நிலத்தை முழுமையாகப் **(Max.)** பண்படுத்தி உடனடியாக அதை விதைக்க வேண்டிய அவசரகாலமல்லவா இது?

காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான். (பிர. 11:4) "பணம்" என்ற வார்த்தை சபையைக் கலக்குவதால்; அதை நேரிடையாகச் சொல்லாமல், வேறுவிதமாகச் சொல்லப் பிரயாசம் எடுத்தேன். அப்போது வேதத்தின் வேறு பல சத்தியங்களையும் சொல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட எல்லாவற்றையுமே அறிவித்துவிட முடிவு செய்தேன்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொள். எரே. 30:2

### கிறிஸ்துவுக்கு முன்:

மரணமே, நீ எனது நிர்ப்பந்தம்,

இன்றைக்கோ, நாளைக்கோ

என்று வேண்டுமானாலும் வா!

உனக்காக என் வாசல்கள் திறந்தே...

### கிறிஸ்துவுக்குப் பின்:

மரணமே உன்னிடம் நான்

மண்டியிட்டு மன்றாடப்போவதில்லை

கிறிஸ்து உன்னை ஜெயித்தார்!

அதனால் நான் சாகாமல் பிழைத்திருந்து

கர்த்தரின் வயல் வேலையைச் செய்வேன்! (சங். 118:17)

## *வறுமைக் கோடு:*

வறுமையை அளவிட ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு அளவுகோல் வைத்திருக்கிறார்கள். அந்த அளவை வறுமைக்கோடு என்று அழைக்கிறார்கள். இதை உணவின் மூலம் கிடைக்கும் கலோரியைக்கொண்டு கணக்கிடுகிறார்கள். அந்த அளவுகோல் **(Scale)** நாட்டுக்கு நாடு வேறுபடும். உதாரணமாக இந்தியாவில் ஒருவனைப் பார்த்து "அவனுக்கென்ன நல்ல வசதியாகத்தான் இருக்கிறான், நல்ல சம்பளம் வாங்குகிறான்" என்று குறிப்பிடப்படும் ஒரு நபரின் அளவில் உள்ளவர் அமெரிக்காவில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவராகக் கருதப்படலாம்!

ஒரு மனிதன் ஆரோக்கியமான உடல் நலத்துடன் வாழத்தேவைப்படும் குறைந்தபட்ச கலோரியின் அளவு கூட கிடைக்காத நிலை “வறுமைக்கோடு” என்று அழைக்கப்படுகிறது. தன்னுடைய உணவின்மூலம் இந்த கலோரியைப் பெருக்குவதற்கு ஒரு தனிமனிதனின் வருமானம் போதுமானதாக இருக்கவில்லையென்றால்; அவர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவராகக் கருதப்படுவார்.

இந்தியாவில் வறுமைக்கோட்டைக் கணக்கிட இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் “சத்துணவுக்குழு” ஒன்று இயங்கி வருகிறது.

ஒரு மனிதன் நலமுடன் வாழ ஒரு நாளைக்கு நகர மக்களுக்கு 2100 கலோரியும், கிராம மக்களுக்கு 2400 கலோரியும் தேவைப்படுகிறது. இந்த வறுமைக்கோட்டைச் சராசரி அளவு (ஆரோக்கிய வாழ்வு), குறைந்தபட்ச அளவு (உயிர் வாழத் தேவையான உணவு) என்று இரண்டாகக் கணக்கீடு செய்கிறார்கள். இந்தக் குறைந்தபட்ச அளவு கலோரிகூட ஒரு மனிதனுக்குக் கிடைக்கவில்லையென்றால் அவன் மரணத்தைச் சந்திக்க வேண்டியதாயிருக்கும்.

வறுமையை ஒழிக்கப் பல வருடங்களாக அரசாங்கம் பல திட்டங்கள் போட்டு செயல்பட்டபோதும் அது ஒழிந்தபாடில்லை. “தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்” என்று வீரமுழக்கமிட்டவர் பாரதி. அதைச் செயல்படுத்தத் தேவையான சூட்சுமத்தை அறியாமலேயே செத்துப்போனார். அவருக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே இயேசுவைத் தெரியும்; ஆனால் அவரை எப்படி தங்கள் எல்லைகளுக்குள் கொண்டு வருவது என்பதுதான் தெரியவில்லை.

அதென்ன சூட்சுமம்? இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும்? அறிந்து கொண்ட சத்தியம் விடுதலையாக்கும். அந்த சத்தியம் என்னவென்றால்; “இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு பொருளாதார நெருக்கடி இருக்கக் கூடாது” அது தேவனுடைய சித்தமல்ல, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு ஏழைகளுக்கு உதவ வேண்டும். ஏழைகள் இல்லாத சமுதாயத்தை, சபையை, நாட்டை, உலகத்தை உருவாக்க வேண்டும். இது தேவனுடைய திட்டம். சாத்தியம்தானா? சாத்தியம்தான், சாத்தியமில்லாத ஒன்றை தேவன் நிச்சயம் கட்டளையிடமாட்டார், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. விதைப்போம், அரசாங்கங்கள் தோல்வியைச் சந்தித்த எல்லைகளில் எல்லாம் நாம் வெற்றிக்கொடி ஏற்றுவோம்! அல்லேலூயா!

## உள்ளான மனிதனின் வறுமைக்கோடு:

இதே கலோரிப் பிரச்சனை உள்ளான ஆவிக்குரிய மனுஷனுக்கும் உண்டு. இயேசு கிறிஸ்து இல்லாத மனிதன் தரித்திரன், அவன் வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருக்கிறான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுகிறவர்கள்தான் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் என்று நாம் விவரம் புரியாமல் நினைத்துக் கொண்டிருந்தோமே, அந்த மாதிரித்தான் இதுவும்.

இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் எடுத்து, அபிஷேகம் பெற்று, ஆவிக்குரிய சபையில் ஆராதித்துக் கொண்டிருப்பவர்கள் கூட வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருக்கக்கூடிய சந்தர்ப்பமுண்டு. தேவையான போஷாக்கு கிடைக்காமல் போவதுதான் இதற்குக் காரணம்.

நாற்றங்காலில் இருந்து பிடுங்கி வயலில் நாட்டப்பட்டபிறகும், தேவையான நீர்ப்பாய்ச்சல் இல்லாமலிருந்தால் பயிர்கள் காய்ந்து, கருகிவிடும். தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தாலும் தேவையான உரம் இல்லாவிட்டால் வளர்ச்சி இருக்காது, கதிர்கள் உருவாகாது.

வருஷக்கணக்கில் தேவனை ஆராதித்தும், எந்த நற்கிரியையும் செய்ய லாயக்கில்லாதவர்களாகவும், கனியில்லாதவர்களாகவும், அன்பில்லாதவர்களாகவும்

விசுவாசிகள் இருப்பதற்கு காரணம் இந்த "கலோரி" பிரச்சனைதான் காரணம். சத்தியம் தெரிவதில்லை, ஏனென்றால் அதைச் சொல்லுபவரில்லை; மறைக்கப்படுகிறது. இன்னொரு பிரச்சனை மூப்பர்களுக்கே சத்தியம் தெரிவதில்லை; சத்துருவினால் மறைக்கப்படுகிறது, முகத்திரை விலக்கப்படாமலிருக்கிறது. இயேசுவாம் திராட்சைச் செடியிலிருந்து அறுக்கப்பட்ட கொடிகள்; தண்டிலிருக்கும் ஈரப்பதத்தில் கனிகொடுக்க முயற்சி எடுக்கின்றன. மிகக் கஷ்டப்பட்டு சில பிஞ்சு காய்கள் காய்க்கின்றது, அதுவும் வெம்பி உதிர்ந்து போகின்றன. கொடி காய்ந்து விழுகிறது, அக்கினிக்கு இரையாகிறது.

சபையின் இந்த வறுமைக்கோட்டை நீக்கும் பொறுப்பை நாம் பெற்றிருக்கிறோம். பாரதியின் வீர முழக்கம் நம் முழக்கமாகட்டும். ஒரு சபையில் 500 விசுவாசிகள் இருந்தால்; அந்த 500 பேர்களுமே ஊழியக்காரர்கள்தான். 500 பேர்களும் சீஷர்கள்தான், கடந்து சென்று சுவிசேஷம் சொல்லி, அநேகரைச் சீஷராக்கி, ஞானஸ்நானம் கொடுத்து, உபதேசம் பண்ண வேண்டும். சாத்தியமாகுமா? சாத்தியமாக்க வேண்டும், இது தேவனுடைய கட்டளை. (மத். 28:19) தேசத்தில் பட்டினியால் ஒரு தனிமனிதன் கூட சாகாமல் இருக்க வேண்டுமானால்; அதைக்குறித்த அக்கறை வறுமைக் கோட்டிற்கு மேலிருக்கும் (2400 கலோரி) ஒவ்வொரு தேச பிரஜைக்கும் தேவை. சபைமத்தியில் ஏழைகள் இல்லாமல் இருக்க வேண்டுமானால் அதைக் குறித்த தரிசனம் வறுமைக்கோட்டிற்கு மேலிருக்கும் ஒவ்வொரு தேவஜனத்திற்கும் தேவை.

சபையின் வறுமைக்கோடு மறையும்போது; தேசத்தின் வறுமைக்கோடும் (ஏழ்மை) மறையும்!

## *முளைக்காத விதை: (மத். 25:14-30)*

ஒரு மனுஷன் 5 தாலந்து, 2 தாலந்து, 1 தாலந்து, (ஆஸ்திகள்) என்று தன் ஊழியக்காரர்களின் திறமைக்குத் தக்கபடி கொடுத்து வெளிநாட்டுக்குப் போய்விடுகிறான். 5, 2 தாலந்துகளைப் பெற்றவர்கள் தங்கள் கைகளினால் வேலை செய்து கஷ்டப்பட்டு பணம் சம்பாத்தியம் பண்ணுகிறார்கள். சோம்பேறியான ஊழியக்காரன் (அது தெரிந்துதான் அந்த மனுஷன் அவனுக்கு 1 தாலந்தைக் கொடுத்திருப்பான் போலும்!) அதைப் புதைத்துவிடுகிறான். தேவன் நமக்குத் தரும் கிருபை வரங்கள், ஊழியங்கள், தரிசனங்கள் போன்ற தாலந்துகளைப் புதைத்து வைத்தால் முளைக்காது என்று வேதம் சொல்லுகிறது. அந்த விதைகள், அதன் பாக்கெட்டுகளில் இருப்பது போலத்தான். செலவு பண்ணப்பட்டு, ஆத்துமாக்களைச் சம்பாத்தியம் பண்ணும்போது, பரலோகத்தில் சந்தோஷம் உண்டாகிறது, தேவனும் மகிழ்கிறார், தன்னுடைய சந்தோஷத்திற்குள் ஊழியக்காரனும் பிரவேசிக்கக் கதவைத் திறக்கிறார்.

"விதைக்கப்படாத இடத்தில் கூட அறுக்க வல்லவர்" என்பதனை "விதைக்காத இடத்தில் அறுக்கிறவர்" என்று மாற்றி ஆண்டவரைப் பற்றிப் பொய் சொல்லும் சாத்தானுடைய ஆலோசனையின்படி புதைத்து வைத்தால்? ஆத்துமாக்கள் பசியால் செத்துப் போகும்... பாதாளத்துக்கு அனுகூலமாகும்... புறம்பான இருளின் வாசல்கள் திறக்கப்படும்.... சாத்தான் காத்திருப்பான்.

இஸ்ரவேல் புத்திரர்; என் ஊழியக்காரர்; அவர்கள் நான் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என் ஊழியக்காரரே;... (லேவி. 25:55) ஆம், இரட்சிக்கப்பட்ட தேவ ஜனங்கள் ஒவ்வொருவரும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியக்காரர்கள்தான்! இரட்சிக்கப்பட்ட அடுத்த வினாடியிலிருந்து நம் வேலை ஆரம்பமாகிறது. விதையே உறங்காதே! **We each must find a place to grow and branch out.** கொஞ்சம் அதிகப்படியான வேகம் அவசியம்; கடிகாரத்தின் பெரிய முள்ளைப் போல! தேவன் அவசரப்படுபவரல்ல சின்ன முள்ளைப் போல மெதுவாக வந்து கொண்டிருக்கிறார்! என்றாலும் பரவாயில்லை, அதுதான் சரி. நாம் வேகமாக சுவிசேஷ வேலைகளைச் செய்வோம்; இயேசு வந்து கொண்டிருக்கிறார் மெதுவாக... குறித்த நேரம் வரும்போது டிங் டாங் டிங் டாங்!

## *சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடி:*

நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் சுமக்கக்கூடாத நுகத்தடியாக இருந்தது. இயேசுவால் அது உடைக்கப்பட்டது.

“இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர்; கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?” (அப். 15:10)

சுயாதீனப்பிரமாணத்தின்படியான தசமபாகம் கண்டிப்பாக்கப்படவில்லை. நம்மை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியம், நமக்கும் பிரியமானால் நம்மை ஆசீர்வதிப்பார். தேவன் நம்மை ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் விதைத்துத்தான் ஆக வேண்டும். 10 % என்பது ஆரம்பம்தான், படிப்படியாக அதிகப்படுத்த வேண்டும். நியாயப்பிரமாணம் நம்மை விசுவாசப் பிரமாணத்துக்குள் நடத்தும் வாத்தியார்தான் **(Teacher).** படித்து முடித்து வெளியேறும்போது எந்த வாத்தியாரையும் யாரும் கூடவே கூட்டிக்கொண்டு வருவதில்லை. அவர்களைக் கூப்பிட்டாலும் வர மாட்டார்கள்.

*“அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.” 2 கொரி. 9:7*

விசனமாகக் கொடுக்க வேண்டாம்; விசனமாகக் கொடுத்தால் அதைத் தேவன் ஏற்றுக் கொள்வாரா, மாட்டாரா என்பது பிரச்சனையல்ல; தேவன் உங்கள்மேல் பிரியமாயிருக்க வேண்டும் என்று ஆசைதானே? அப்படியானால் உற்சாகமாக ஆசையாகக் கொடுங்கள். ஆசை கணக்குப் பார்க்காது, அது 99% கூடக் கொடுக்கும்.

ஆனால் தேவ இராஜ்ஜியத்துக்காக விதைக்க வேண்டும் என்பதைத் தசமபாகம் மூலமாக நமக்குக் கற்றுத் தந்தது நியாயப்பிரமாணம்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆனால் அங்கேயே நின்று கொண்டிருந்தால்; கிருபையை இழக்க வேண்டியதாயிருக்கும், விசுவாசமும் சேதத்திற்குள்ளாகும்.

“மனதின் நியமத்தின்படி” ... முடிவெடுக்க நமக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. 8%, 9% என்றுகூட முடிவெடுக்கலாம். விளைச்சல் அதற்குத்தக்கவாறுதான் இருக்கும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இது நியாயப்பிரமாணத்தைவிட மோசமாக அல்லவா இருக்கிறது? நியாயப்பிரமாணம் கூட 10%ஐ சிபாரிசு **(recommend)** செய்கிறதே.

“பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்”

தசமபாகம் கொடுக்கவில்லையென்பதால் தேவன் கோபித்துக் கொள்ளப்போவதில்லை,

தண்டிக்கப்போவதில்லை, சாபம் கொடுக்கப்போவதுமில்லை, பரலோக பாக்கியத்தைத் தடை செய்யவும் போவதில்லை. பிறகென்ன? இஷ்டப்படி இருப்போம் என்று போகலாம்தான். சரி, உங்கள் விருப்பப்படி தரித்திரத்திலேயே வாழுங்கள்...

“இப்போது உப்பில்லை,
உப்பிருந்தபோது, உலை வைக்க விறகில்லை
விறகிருந்தால், கஞ்சு காய்ச்ச அரிசியில்லை...
குலுங்கி குலுங்கி சிரித்துவிடு
இதுதான் பசியை எதிர்க்கும் நமது போர்முறை!”
என்று புதுக்கவிதை எழுதுங்கள் (இதுக்கு ஒன்றும் குறைவில்லை)

சந்தோஷமாக வயிற்றின்மேல் நனைத்த துணியைப் போட்டுவிட்டுப் படுத்துத் தூங்குங்கள். அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டுசெல்ல காணிக்கை கேட்கும் ஊழியக்காரர்களிடம் இல்லையென்று தர்மசங்கடத்துடன் சொல்ல வேண்டியதாயிருக்கிறதே, இதுதான் கிறிஸ்துவின் அன்பா? எனக்குப் புரியவில்லை. சீரக விதைகள் இருக்கும் பாக்கெட்டின் மேல் அந்த சீரகத்தின் செடியின் படம் இருக்கும். சீரகத்தை விதைத்தால் அது வளர்ந்தபின் இப்படித்தான் இருக்கும் என்று புரிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். சுவிசேஷத்திற்காக என்னென்னவோ காரியங்களை விதைக்கிறோம், தியாகங்கள் செய்கிறோம். ஆனால் அதன் விளைச்சல் இப்படித்தான் இருக்கும் என்பதை நம் வாழ்க்கையில் காண்பிக்காவிட்டால்? யாரும் சீரக விதைகளை வாங்க மாட்டார்கள்! சுவிசேஷத்தைக் கேட்க மாட்டார்கள்; “உன் இயேசுவை நீயே வைத்துக் கொள்” என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். காணிக்கை குறைவுபடக் காரணமும் இதுதான்; பாக்கெட்டின் மீது வரைபடமில்லாத பொருட்களை **(product-ஐ)** யாரும் வாங்க விரும்புவதில்லை (மிகச் சிலர் ஒரு வேளை வாங்கலாம்) ஆனால் லாபம் இருக்காது; சீரகம் விற்காமல் காலாவதியாகி கடையிலேயே இருக்கும்.

“நியூயார்க் மாநிலத்தில் 81 ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான மதுபானங்கள் ஏலத்தில் விடப்பட்டது. இதில் 1,21,92,000 ரூபாய்க்கு மதுபானங்கள் ஏலத்தில் எடுக்கப்பட்டன. இந்த மாநிலத்தில் உள்ள “செரென்டிபிட்டி” என்ற ஹோட்டலில் விற்கப்பட்ட ஒரே ஒரு புட்டிங்கின் விலை 5,00,000 ரூபாய்! பிரான்சு நாட்டை 19—ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சக்கரவர்த்தி நெப்போலியன் போனபர்ட்டின் மனைவி ஜோசப்பைனின் கைக்கடிகாரம் 5 கோடி ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது.” (தினத்தந்தி – நவ. 2007)

*“...பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின்; சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து; இவைகள் எல்லாவற்றின்மேலுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்.” (லூக்கா. 5—7)*

பணம் சாத்தானின் கைகளில் இப்படி படாதபாடு படும் உதாரணங்களை ஆயிரக்கணக்கில் அடுக்கலாம்; இப்போது அதுவல்ல முக்கிய விஷயம், தேவன் தன்னுடைய ஜனங்கள் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்பதற்காக வைத்திருக்கும் காரியங்களைச் சாத்தான் இப்படி சுரண்டாமல் தடுக்க வேண்டும், அதுதான் அதைவிட முக்கிய விஷயம். அதற்குச் செய்ய வேண்டியது? நம்முடைய விதைப்பின் மூலம் சாத்தானைத் திசைதிருப்பி; அவன் திருடி வைத்திருப்பதை மீட்டு; கடைசிக்கால அறுவடை வயல்களில் உரமாக்க வேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு சொல்ல வேண்டியதாயிருக்கிறது. இரண்டு பாதைகள் நம் எதிரில் ... சிந்திப்போம்... சரியான பாதையைத் தெரிவு செய்வோம் ... அதிலே நடப்போம்.

சாத்தான் இயேசுவை மலையின்மேல் கொண்டுபோய் நிறுத்தி விட்டுச் சொன்ன காரியம்; இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன்னதாக நடந்த காரியம். இயேசு மரித்து உயிர்த்து எழுந்த போது உலகத்தின் சூழ்நிலை புதிதாக்கப்பட்டது. உலகத்தை அவர் மீட்டுக் கொண்டார். தேவ ஜனங்களாகிய நாம் இந்த வெளிச்சத்திற்குள் வந்து இந்த சத்தியத்தை விசுவாசித்தால்; சாத்தானிடமிருந்து ஆசீர்வாதங்களை எளிதில் பறிக்கலாம். அவனுக்கு இஷ்டமானவனுக்கு அவனால் கொடுக்க முடியாதபடி தடுத்தும் நிறுத்தலாம். எப்படி வசதி? “நமக்கு என்னத்துக்கு இந்த வம்பெல்லாம்” என்று நினைப்பவர்கள் லூக்கா 5:7—லேயே நின்று கொள்ளுங்கள். “இல்லையில்லை அவனை இப்படியே விடக்கூடாது” என்று நினைப்பவர்கள் தாண்டி வாருங்கள்.

நாம் ஆசீர்வதிக்கப்படவே அழைக்கப்பட்டிருக்கிறோம்; தரித்திரத்தோடு வாழ நாம்

அழைக்கப்படவில்லை. சிலர் அப்படி நினைத்துக் கொண்டார்கள், அவ்வளவுதான். வசனத்தில் இன்னொரு நல்ல விதையும் மறைந்திருக்கிறது, சீக்கிரமாக வாங்க, அதையும் கையிலெடுப்போம்!

*தீமைக்குத் தீமையையும், ... சரிக்கட்டாமல், ... நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். (1 பேதுரு. 3:9)*

பழிவாங்க முயற்சிக்காமல்; நமக்குத் தீமை செய்தவர்களை, சபித்தவர்களை நாம் ஆசீர்வதிக்க வேண்டுமாம்! அப்படி ஆசீர்வதிப்பது கொஞ்சம் கஷ்டம்தான் என்றாலும் (கொஞ்சம் என்ன... ரொம்பவே கஷ்டம்) அந்த நல்ல விதையைக் கஷ்டப்பட்டு விதைத்து விடுங்கள்; ஆசீர்வாதம் கொட்டும், தேவன் நம்மை அழைத்த நோக்கமும் நிறைவேறும்.

## சுயாதீனப் பிரமாணத்தை ஏன் உற்றுப்பார்க்க வேண்டும் ?

*“சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். யாக். 1:25”*

சுயாதீனப்பிரமாணத்தை உற்றுப்பார்க்காவிட்டால் சத்தியம் விளங்காது, விளங்காவிட்டால் அந்த வசனத்துக்குக் கீழ்ப்படிய முடியாது. ஒரு சத்தியம் சரியாகப் புரியாவிட்டால்; அது மறந்தும் போகிறது. மறந்து போன சத்தியம் கிரியையை நம்மில் நடப்பிக்காது; பாக்கியத்தை இழந்து போவோம்.

புதிய ஏற்பாடு வாசிக்கப்படும்போது; இன்னும் “திரை” விலக்கப்படாதிருப்பது அநேகமாயிரம் விசுவாசிகளிடம் காணப்படும் ஒரு பொதுப்படையான காரியமாயிருக்கிறது. இன்னும் ஒரு சில விஷயங்களில் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்து முயற்சிகள் எடுப்பதால் “கிருபை” யில் பாதிப்பு ஏற்படுகிறது.

*“நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். கலா. 5:4”*

இதனால் நம் முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன. பாவம், சாபம், தரித்திரம், வியாதியிலிருந்து விடுதலை கிடைக்காமல்; போராட்டங்கள் நீடிக்கின்றன.

புகைப்படக் காமிராவின் அமைப்பும், நம் கண்ணின் அமைப்பும் ஒன்றுதான். புகைப்படக் காமிரா தரும் காட்சி (**photos**) ஒரு கண்ணினால் (லென்சுக்குப் பதிலாக நமது கண்ணை வைக்கக் கூடுமானால்) கிடைக்கக்கூடிய காட்சிதான். காமிரா படம்பிடித்த அதே காட்சியை தத்ரூபமாகப் பார்க்க வேண்டுமானால்; புகைப்படத்தை “ஒரு கண்ணினால்” மட்டுமே பார்க்க வேண்டும்.

புகைப்படத்தை இரண்டு கண்களினால் பார்க்கும்போது கிடைக்கும் காட்சி தட்டையானதேயன்றி அது புடைப்பியல் (**3-D Effect**) காட்சி அல்ல. (இது நம் பார்வையின் குறைபாடு ஆகும்). ஒரு பொருளைப் பார்க்கும்போது; இரண்டு கண்களின் விழித்திரைகளின் மீது அது உண்டாக்கும் பிம்பங்கள் ஒரே மாதிரியானவை அல்ல. இதனால்தான் நாம் பொருட்களை முப்பரிமாணம் உள்ளவைகளாகப் பார்க்கிறோம். (இந்த இரு வேறு பிம்பங்களை நம் மூளை புடைப்பியல் உடைய ஒரே காட்சியாக இணைத்து நமக்குக் காட்டுகிறது).

இதைப்போலவே நம் ஆவிக்குரிய கண்களினால் நாம் சுயாதீனப்பிரமாணத்தைச் சரியானபடி உற்று நோக்காமல் போகும்போது; சத்தியம் மறைக்கப்படுகிறது. சத்தியம் விளங்காமல் போகிறபடியால்; நாம் பழைய பிரமாணத்தின்படியே முயற்சிக்கிறோம், தோல்வியும் வருகிறது.

புகைப்படத்தை இரண்டு கண்களினால் பார்க்கும்போது; இரண்டு கண்களிலும் ஒரே

மாதிரியான பிம்பங்கள் ஏற்பட்டு; பார்க்கப்படும் பொருள் தட்டையானது என்று மூளைக்குத் தெரியப்படுத்துகிறது. அதனால் புகைப்படம் (photo) தட்டையானது என்று நம்பும்படி நம்மையே கட்டாயப்படுத்திக் கொள்கிறோம். இதனால் புகைப்படம் உண்மையிலேயே காண்பிக்கும் உருவத்தை நாம் பார்க்க முடியாதபடி செய்து; காமிரா திறமையுடன் தோற்றுவிக்கும் காட்சியைக் கெடுத்துக்கொள்கிறோம்.

பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாததினால், அல்லது இருந்தும் அதில் பிரச்சனைகள் இருப்பதால் நியாயப்பிரமாணத்தின் காரியங்களைப் புதிய பிரமாணத்திற்குள் கொண்டு வந்து பார்க்கிறோம். பழைய ரசம் புதிய துருத்தியில் ஊற்றப்படுவதால் துருத்தி கிழிந்து; ரசமும் சிந்திப்போகிறது. இப்படியாகத் தேவனுடைய கிருபைவரங்கள் வீணாகிப் போகின்றன.

புகைப்படம் தரக்கூடிய மகிழ்ச்சியை நாம் அனுபவிக்க முடியாமல் போவதற்குக் காரணம் நமது அறியாமைதான் என்பது இப்போது புரிந்திருக்கும். அதனிடம் உயிர்க்களை இல்லையென்று குறை கூறுவது நியாயமில்லை என்பதும் தெரிந்திருக்கும்.

சுயாதீனப்பிரமாணத்தை உற்று பார்க்காமல்; எவ்வளவோ ஜெபித்தும் ஆசீர்வாதம் வரவில்லையே என்று புலம்புவது சரியில்லையென்பதும் இப்போது தெரியவந்திருக்கும்.

பிரகாசமுள்ள மனக்கண்களைத் தாரும் என்று ஜெபித்து வேதம் வாசிக்க ஆரம்பிப்போம்; வசனங்கள் ஜீவ வார்த்தைகளாக நம்மை நோக்கி நகர்ந்து வரும்! (அப். 5:20)

## *சுயாதீனப்பிரமாணத்தை எப்படி உற்று நோக்குவது ? ஓர் உதாரணம்:*

*அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களா? மணவாளன் தங்களுடனே இருக்கும் வரைக்கும் உபவாசிக்கமாட்டார்களே. மாற்கு. 2:19*

அதாவது புதிய ஏற்பாட்டின் காலத்தில் உபவாசம் கட்டாயமாக்கப்படவில்லை. அப்படியானால் உபவாசிக்க வேண்டாமா? யார் சொன்னது, கண்டிப்பாக. அதற்கு முன்பாக உபவாசம் என்றால் என்னவென்று பார்ப்போம். புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது இந்த சத்தியத்தைக் கண்டுபிடிக்கலாம்.

> *அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உம் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். (ஏசா. 58:6,7)*

> *அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். (ஏசா. 58:8)*

நம் சுகவாழ்வு துளிர்க்க வேண்டுமானால்; நம்முடைய உபவாசம் விதையாக வேண்டும். ஒரு நேரம் சாப்பிடாமல் இருக்கிற உபவாசம் அல்ல; மேற்சொன்ன வசனத்தின்படியான உபவாசம் என்பது தெளிவு.

அப்படியானால் சாப்பாட்டை விலக்குகிற உபவாசம் தேவையில்லையா?

*மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள். (மாற். 2:20).* இயேசு நம்மோடு வாசம் செய்யும் போது உபவாசிக்க

வேண்டியதில்லைதான். ஆனால் முள்ளுகளுக்குள்ளும், பாறைகளுக்குள்ளும் விழுந்த விதைகளைப் பெற்ற விசுவாசிகள் நாளடைவில் செயலிழந்து பின்மாறிப் போவதால், இயேசுவை இழந்து போகவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் உபவாசித்து தான் ஆக வேண்டும். அப்படிச் செய்யும்போது, இயேசுவையும் அவருடைய ஜீவனையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

அப்போஸ்தலர் உபதேசத்தில் எப்பொழுதெல்லாம், எதற்கெல்லாம் உபவாசிக்க வேண்டும் என்பதற்கான ஆலோசனைகள் உள்ளன.

*தரிசனத்தைப் பெற்றுக் கொள்ள... (அப். 10:30)*

*ஊழியர்களைத் தெரிவு செய்ய... (அப். 13:2)*

*தேசத்துக்காக ... (எஸ்றா. 4:16)*

ஆனால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள விதைக்கத்தான் வேண்டும், உபவாசிக்கக்கூடாது.

***சிந்தனைக்கு:*** பசியுடன் ஒரு மனிதன் (பிச்சைக்காரன்) தெருவோரம் உட்கார்ந்திருக்கிறான். நாலு இட்டிலிகளால் அவனுடைய பசியைத் தீர்க்க முடியும். என் கையில் நான்கு இட்டிலி வாங்குவதற்குத் தேவையான 10 ரூபாய் இருக்கிறது. இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? "அந்த மனிதனின் பசியை ஆற்றும் தேவனே!" என்று உபவாசித்து ஜெபிக்க வேண்டுமா? அல்லது கடையில் நான்கு இட்டிலிகள் வாங்கிக் கொடுத்து அவனுடைய பசியைத் தீர்க்க வேண்டுமா? எது சரி? எது தேவனுக்கு விருப்பமானது? பதில் உங்களுக்கே தெரியும்.

அந்த மனிதனின் தேவையைக் கொடுக்காமல் ஜெபிப்பது மாய்மாலம் அல்லவா? அவனுக்குத் தேவை சாப்பாடு, அதை நாம் கொடுத்தபிறகு அவனுக்காக ஜெபிக்க வேண்டியதில்லையே!

அதெப்படி ஜெபிக்க வேண்டாம் என்று சொல்வது? அது சரியாகத் தெரியவில்லையே, என்று சண்டைக்கு வந்தால்? ஒன்று செய்யலாம், அவன் சாப்பிட்ட பிறகு, அவனுக்குச் சுவிசேஷம் சொல்லி, அந்த விதை முளைக்க ஜெபிக்கலாம்.

என்ன ஏது என்று பாராமல், உணராமல், என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ளாமல் பொதுப்படையாக எதற்கெடுத்தாலும் ஒரே விதமாக, ஜெபிப்பது, ஜெபித்துவிட்டு கிரியை எதுவும் செய்யாமல் தப்பித்து ஓடுவது... இது எப்படி இருக்கிறது தெரியுமா? "குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்தது" போல இருக்கிறது!

19ஆம் நூற்றாண்டில் நம் முன்னோர்கள் புகைப்படம் இல்லாமல் சமாளித்த விதம் ஆச்சரியமானது. தேவையான நபரின் உருவத்தைக் குறிப்பெடுப்பதன் மூலமாக சமாளித்தனர். தேவையான மனிதனை உட்காரச் சொல்லுவார்கள். அவனைப் பதிவு செய்ய வந்திருக்கும் புகைப்படக் கலைஞர் **(Photographer!)** அந்த மனிதனை நெடுநேரம் உற்றுப் பார்ப்பார். பிறகு இரண்டு பேர் சேர்ந்து மிக அருகில் வந்து இன்னும் உன்னிப்பாக "உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுமாக" கவனிப்பார்கள்! மனிதன் பொறுமையிழந்து இருப்புக் கொள்ளாதவராக நெளிய ஆரம்பிப்பார். (ஆளுக்கு நாலு உதை விட்டால் என்ன என்று கூட நினைக்கலாம்!) ஒரு வழியாக உருவப்படம் தயார். **ready!**

"குட்டையான உருவம், பெரிய தோள்கள், வலதுகை முழங்கை பக்கம் லேசாக வளைந்திருக்கும், சிவப்புக் கலந்த கண்கள், நெற்றியில் மூன்று சுருக்கங்கள், இடது கன்னத்தில் இரண்டு மருக்கள், நாடிப்பகுதியில் ஒரு சின்ன தழும்பு" இதுதான்! அக்கால உருவப்பதிவு என்பது "அங்க லட்சணங்களின்" பட்டியலாகவே இருந்தது. இதை "எழுத்து புகைப்படம்" என்று வர்ணிக்கலாம்.

புகைப்படக்கலை ரஷ்யாவுக்கு 1840ஆம் ஆண்டுகளில் வந்தது. அதற்கு முன்னதாக "டகேர்" என்பவர் கண்டுபிடித்த உலோகத்தகடுகளில் உருவத்தைப் பதிவு செய்யும் முறை (டகேரோடைப்) வழக்கத்தில் இருந்தது. இது "எழுத்துப்புகைப்படத்தைவிடச்" சிறந்தது என்றாலும், அதில் ஒரு தொல்லை இருந்தது. 15 நிமிடங்களுக்கு மேல் காமிராவுக்கு முன்பாக உட்கார்ந்திருக்க வேண்டியதாயிருந்ததால் பொறுமையிழக்க வைத்தது. இந்த பிரதியிலிருந்து வேறு பிரதி எடுக்கவும் முடியாது. ஓவியரின் உதவியின்றி ஒருவரது உருவத்தைப் பதிவு செய்வது அக்கால மக்களுக்குப் புதுமையாக இருந்ததால்; அதற்குப் பழக்கமாவதற்குச் சிறிது காலம் ஆயிற்று.

இன்று நாம் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதில்லை, ஒரே ஒரு புகைப்படம் போதும். ஒரே ஒரு நிமிடம் போதும்.

பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது; மனிதர்கள் செய்யும் பாவங்களுக்குத் தேவன் நீதி சரிக்கட்டுவதையும், தனது கோபாக்கினையை ஊற்றுவதும், அக்கிரமக்காரர்களுக்குத் தண்டனை கொடுப்பதும், பயத்தில் உறைந்து போகும் அளவில் இருந்தது.

> *"அன்றியும், தொடக்கூடியதும், அக்கினி பற்றியெரிகிறதுமான மலையினிடத்திற்கும், மந்தாரம் இருள் பெருங்காற்று ஆகிய இவைகளினிடத்திற்கும், எக்காளமுழக்கத்தினிடத்திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும், நீங்கள் வந்து சேரவில்லை; அந்த சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள். ஏனெனில் ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால், அது கல்லெறியுண்டு, அல்லது அம்பினால் எய்யுண்டு சாகவேண்டுமென்று சொல்லப்பட்ட கட்டளையைச் சகிக்கமாட்டாதிருந்தார்கள். மோசேயும் நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது. (எபி. 12:18–21) )"*

ஆனால் இன்று நம் நிலைமையை அற்புதமாக உயர்த்தி, நம் வேலையை மிக எளிதாக்கிவிட்டார் நம் தேவன் இயேசு. கிருபைக்குள் எல்லாவற்றையும் அடக்கி; கீழே வரும் வசனங்களுக்கு நம்மைச் சொந்தக்காரர்கள் ஆக்கியிருக்கிறார்.

> *நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். (எபி. 12:22–24)*

நியாயப்பிரமாணத்தினால் நடத்தப்பட்டுவந்த நம் முற்பிதாக்களுக்கு; அது கஷ்டமாக இருந்தாலும், பல வசதிக்குறைவுகள் இருந்தாலும், அதுவே பழக்கமாகிப் போயிருந்தது. கிறிஸ்துவின் கிருபை சார்ந்த எளிய விசுவாச முறைமைகள் நம்புவதற்குக் கஷ்டமானதாயும், ஏற்றுக்கொள்ள தயங்கக்கூடியதாகவும் இருந்தது. இன்றளவும் புதிய ஏற்பாட்டின் சுயாதீனப்பிரமாண விசுவாசிகள் கூட இரண்டுக்கும் நடுவாக திண்டாடித் திணறித் தவிப்பதைப் பார்க்க முடிகிறது. இயேசுவின் "கிருபையைச் சார்ந்திருத்தல்" மிகவும் எளிதாகத் தோன்றுவதால் அதை நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கிறது! கிரியை செய்தால்தான் ஏதாவது நடக்கும் என்ற பழைய பழக்கம் இன்னும் இழுக்கிறது. பிறகென்ன... "கிருபை மா கிருபை, என்னை மீட்க வந்த தேவ கிருபை..." என்று பாடல் மட்டும் பாடி கிருபைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடுகிறார்கள். கிரியையினால் மலையைப் புரட்ட முயற்சிகள் எடுக்கிறார்கள், விசுவாசத்தில் பல கறும்புள்ளிகள் (**black dots**) விழுகிறது; அது மெதுவாக விரிந்து பரவி அவிசுவாசமாக மாறுகிறது.

நம் நீதியில் பிரச்சனை (ரோமர். 3:20), இடறி விழ ஏதுவுண்டாக்குகிறது (ரோமர். 9:32), அபிஷேகத்திலும் பாதிப்பு (கலா. 3:2), அற்புதங்கள் தடைபடுகிறது (கலா. 3:5), சாபம் தொடர்கிறது (கலா. 3:10), "பெருமை" என்ற பெரிய பாவம் உள்ளே நுழைகிறது (எபே. 2:9), இரட்சிப்பில் பாதிப்பு (2 தீமோத். 1:9), பிதாவையும், குமாரனையும் அறிந்து கொள்ள முடியாதபடி செய்கிறது (எபி. 6:1).

அப்படியானால் "கிரியை" தேவையில்லை என்று தள்ளிவிடலாமா? என்றால், அதுவும் இல்லையென்பதை அறிய வேண்டும். கிருபையைச் சார்ந்த கிரியை அவசியம், அதாவது விசுவாசக் கிரியைகள் இல்லாமல் பரலோகம் செல்ல முடியாது. நன்மை செய்வது, ஏழைகளுக்கு உதவி செய்வது, கனிகள் இவையெல்லாம் கிரியைக்குள் அடங்குவதால்; இவைகளைச் செய்யாமல் இருந்தால் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியாது என்பதையும் அறியலாம்.

**(Ref: அப். 26:20, ரோம. 2:6, 1 கொரி. 9:1, 2 கொரி. 10:11, கலா. 5:6, பி—. 1:22, கொலோ. 3:17, 1 தெச. 1:2, 2 தெச. 1:12, எபி. 6:10, யாக். 1:25, 1 யோ. 3:12, வெளி. 2:5)**

## *வேதனையின் விதைகள்:*

தன்னுடைய தற்கால துன்மார்க்கமான வாழ்க்கைக்குத் தன் பழைய கால வேதனைகள்தான் காரணம் என்று சாக்குப்போக்குச் சொல்லித் தங்களுடைய தவறுக்கு நியாயம் கற்பிப்பவர்களை எங்கும் பார்க்கலாம். இதன்மூலம் "பழிவாங்குதலையும்" நியாயப்படுத்துகிறார்கள். மருமகளைக் கொடுமைப்படுத்தும் மாமியார் "கொடுமைக்கார மாமியார்" என்ற தலைப்பில் மிகப் பிரபலமாக இருக்கிறார்கள் நம் நாட்டில்! "மாமியார் கொடுமையால்" கண்ணீர் விடும் மருமகள்களின் கண்ணீரைக் கதையாக்கி, காவியமாக்கி, சினிமாவாக்கி... இப்படி என்னவென்னவெல்லாமோ ஆக்கி... அதிருக்கட்டும்... இது ஏன் நடக்கிறது?

பதில் அநேகமாக எல்லோருக்குமே தெரிந்த ஒன்று. இக்கால மாமியார் தன்னுடைய அக்கால மாமியாரிடமிருந்து "வேதனை விதை" களைத்தான் வாங்கிச் சேர்த்து வைத்திருந்தாள்! என்ன செய்வது தன்னிடம் இருப்பதைத்தானே அவள் கொடுக்க முடியும்? ஆனால் இது சரியாகுமா? நிச்சயமாக இல்லை, தான் பெற்ற வேதனைகளையே திரும்ப விதைத்தால் பதிலுக்குச் சந்தோஷம் விளையாதே? அதே வேதனை தானே விளையும்?

அப்படியானால் எங்கேதான் முடிவு இருக்கிறது? இந்த விஷ விதைகளை ஒரேயடியாக பிடுங்கி அழிக்க வழியே இல்லையா? அவர்களின் வேதனையை இன்னும் அதிகரிக்கச் செய்யாமல், வேதனைகள் நீங்கும் அளவில் அந்த விதைகளைச் சுற்றிலுமாக அதிகமதிகமாக நெருக்கமாக சந்தோஷம், சமாதானம், நற்குணம், சாந்தம், அன்பு வார்த்தைகள், ஆறுதல் சொற்கள், அழகான சிரிப்பு! (அதற்கு நீங்கள் அழகாக இருக்க வேண்டியதில்லை!) போன்ற பரிசுத்தாவியானவர் தந்த விதைகளை விதையுங்கள். களை முளைக்கத் தேவையான சத்து கிடைக்காமல் செத்து மடியும்.

இதே பிரச்சனைக்கு இன்னொரு உதாரணம். நான் கிறிஸ்துவுக்கு வெளியில் இருந்த முன்னாட்களில் (தேவனில்லாமல் இருந்த நாட்களில்) சினிமா பார்ப்பதுண்டு. (சிவப்பு ரோஜாக்கள்) **'Red Roses'** என்ற ஒரு **Hindi Cinima-**வின் கதாநாயகன்; தன் இளவயதில் ஒரு பெண்ணினால் பாதிப்புக்குள்ளாகிறான். அதனால் அவனுடைய வாழ்க்கை சிதைக்கப்படுகிறது. அதனால் அவனுடைய மனசு முழுவதுமாக வெறுப்பு, வேதனை, விரக்தி, கோபம், வெறி, ஆக்ரோஷம், பழிவாங்கும் உணர்வு என்ற விதைகள் ஆக்கிரமிக்கிறது. அதையே விதைக்க ஆரம்பிக்கிறான். 1 ... 2 .... 3 .... இப்படியாக நூற்றுக்கணக்கான பெண்களின் வாழ்க்கையைச் சிதைத்து, அவர்களைக் கொலை செய்து, புதைத்து அந்த இடத்தில் ஒரு சிவப்பு ரோஜா செடியை நடுகிறான்... இப்படியாக உதாரணங்களை அடுக்கலாம் என்றாலும் இது போதும்...

இப்படி... நொண்டிச் சமாதானம் சொல்லி, கடந்த காலத்தை வம்புக்கு இழுத்து; அதைப் போர்வையாக்கி நம்முடைய நிகழ்கால பாவங்களின் மேல் போர்த்தி விடுவது...

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, அது நல்லதற்கல்ல. நம்முடைய முன்னாட்களில் நாம் நம்முடைய தேவனுக்குத் துரோகம் செய்து; அவருடைய கண்களுக்கு முன்னதாகவே சாத்தானோடு சுற்றினோமே, அந்தக் கோபத்தை மனதில் வைத்து தன்னுடைய குமாரனை அனுப்ப மறுத்திருந்தால் நம் நிலைமை என்ன? புதிய ஏற்பாடே எழுதப்படாமல் போயிருக்கும். தேவாலயங்களின் ஆராதனைக் குரல்களின் குரல்வளைகள் நெறிக்கப்பட்டிருக்கும். பாவநிவர்த்தி செய்ய முடியாத ஆடுமாடுகளின் வேதனைக் குரல்கள் கேட்டுக்கொண்டே இருந்திருக்கும். முக்காடு நீக்கப்படாமல், பூரணப்படாத பிரமாணங்களிலேயே இருந்திருப்போம். இரட்சிப்பு இல்லை, பரலோகம் இல்லை, நித்திய ஜீவன் இல்லை, எதுவுமே இல்லை ... இல்லை ... இல்லை ... சூனியத்தில் முடிந்திருப்போம்; இல்லாவிட்டால் சூனியத்தை விட இன்னும் மோசமான எதுவோ ஒன்று ...

வேண்டவே வேண்டாம்... வேண்டாத விதைகளைத் தூக்கியெறிவோம். "புதியதோர் உலகம் செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்" என்றான் ஆண்டவரை அறியாத ஓர் உலகக் கவிஞன்! அந்த வேகம் நமக்கு இல்லையே, வெட்கம்! வேதனை விதைகளை விதைக்காமல் ஒழித்துக் கட்டி இந்தப் பிரச்சனையில் இருந்து விடுதலையாக என்ன வழி?

... சத்தியம் உங்களை விடுதலையாக்கும்... (யோவா.8:32) சத்தியத்தை அறிந்து கொள்வோம். அந்த சத்தியம் என்ன? தேவன் சிலுவையில் "முடித்து" வைத்த விஷயங்களில் இந்த வேதனையின் விதைகளும் ஒன்று.

## *வசனங்களைத் தியானியுங்கள்:*

*பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, ... நீங்கள் பழிவாங்காமல், ... (ரோம.12:19) நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது. (யாக். 3:18)*

*உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. (லூக். 6:35)*

## *விளம்பர இரகசியம்:*

சுவிசேஷகர்களுக்குக் குறைவில்லை, இந்தியாவின் எல்லையெங்கும் திறந்தவாசல்கள், மூடிக்கிடக்கும் வாசல்கள் கூட தாவீதின் திறவுகோல்களால் திறக்கப்படுகின்றன. என்றாலும், எதிர்பார்த்திருந்த அளவில் விளைச்சல் இல்லையே! (???????)

சுவிசேஷ ஊழியர்கள் மோசமான விளம்பரங்களாக மாறிவிட்டதுதான் காரணம். பற்பசையை (Toothpaste) எடுத்து, டூத் பிரஸ் (Toothbrush) மேல் வைக்கும் போதே பல் மின்னல் போல் வெண்மையாவதாக காட்டப்படும் விளம்பரத்தைப் பார்த்து விட்டு அந்த பற்பசையை வாங்கும் ஒரு மனிதன் ... அதை உபயோகிக்க ஆரம்பிக்கிறான். சில நாட்களில் பற்கள் காவி நிறமாக (Dark brown) மாறினால் அவனுக்கு எப்படி இருக்கும். இந்தக் காரியம்தான் இன்றைக்குச் சுவிசேஷ வயல்களின் எல்லைகளிலெல்லாம் நடக்கிறது.

"சொல்லுவதைத்தான் செய்வேன்; செய்வதைத்தான் சொல்லுவேன்" என்ற வீராவேச பேச்சுக்களினால் எதுவும் நடக்கப்போவதில்லை. நாம் சொல்லும் விஷயம் (சுவிசேஷம்); நம்முடைய செயல்பாட்டில் இருந்து வெளியே வர வேண்டும். அல்லது குறைந்தபட்சம் ஆரம்பக்கட்ட முயற்சியளவிலாவது இருக்க வேண்டும்; பூரணப்படுத்துகிறவர் கர்த்தர். "சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்!". வெறும் பேச்சளவில் இருக்கும் சுவிசேஷம்,

கேட்பவர்களின் இருதயத்தில் எழுப்புதலை உருவாக்காது; அது வெறும் சட்டியில் இருந்து பரிமாறுவதைப் போலிருக்கும் இல்லையா?

சுவிசேஷத்தை அறிவிக்கும் முன்னதாக ஒரு சில நல்லவிதைகள் விதைக்கப்பட வேண்டும். அது என்னவெல்லாம்? "நம்முடைய ஜெபம், நாம் சுவிசேஷம் சொல்ல குறிவைத்திருக்கும் நபருடன் தொடர்பை ஏற்படுத்துதல், தேவைக்கேற்ற சிறிய உதவிகளால் நல்லுறவை ஏற்படுத்துதல், கடைசிக் கட்டமாக இயேசுவை அறிவித்தல்!" இந்த முயற்சிகள் அந்த நபருக்கும் நமக்கும் நடுவாக பாலம் அமைக்கும்; அதன் மீது இயேசு நடப்பார், அல்லேலூயா!

*"...விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்"* **(மத். 13:3).** புறப்படுவோம், நம் ஜெபத்தை, உழைப்பை, பணத்தை, விதைப்போம். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துவோம்; அப்போதுதான் அவர் வருவார். இல்லாவிட்டால் அவரால் வரமுடியாதா அவர்தான் தேவனாச்சே? என்று நினைக்கலாம். உண்மைதான், ஆனால் அவருக்கு அவர் நடந்து வர பாதை போடச் சொல்லி கட்டளை இருக்கும்போது; அதற்குக் கீழ்ப்படியாமல்; ரோட்டை அடைத்துக் கொண்டு நிற்கும் முட்புதர்களைக் கூட வெட்டிப் போடாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்களிடத்தில் அவர் எதற்காக வர வேண்டும்? வரமாட்டார்!

## இயேசுவே ஆண்டவர்:

இதைத்தான் நாம் அறிவிக்கிறோம். இந்த உண்மை புறஜாதியாருக்கு இன்னமும் தெரியாமலா இருக்கிறது? கண்டிப்பாக அவர்களுக்குத் தெரியும். முக்கியமான விஷயம் என்னவென்றால்; இயேசுதான் ஆண்டவர் என்பது பிசாசுக்கும் தெரியும். ஆனால் அவன் கிறிஸ்தவனில்லையே! இந்த உண்மை தெரிவதனால் மட்டும் ஒருவன் கிறிஸ்தவனாவதில்லை. காரணம் இது விதையைக் கண்களினால் காண்பது மாத்திரம்தான். நல்ல நிலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் அல்லது தரிசு நிலம் பண்படுத்தப்பட்டிருக்க வேண்டும், விதை அதில் விழ வேண்டும், அதை மண்மூட வேண்டும். இயேசுவை விசுவாசித்து, இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அவரில் நிலைத்திருந்து, கனி கொடுத்து, அது உதிர்ந்து விழாதபடி பாதுகாத்து... இப்படி எவ்வளவோ இருக்கிறது.

அப்படியானால் சுவிசேஷ வயல் வாடி செம்பழுப்பு நிறமாக மாறிப்போனதற்கு என்ன காரணம்? யார் காரணம்? சுவிசேஷகர்கள் ஒரு காரணம்; ஆனால் அதைத்தவிர வேறு காரணங்களே இல்லையென்றும் சொல்லிவிட முடியாது. "பத்துக் கட்டளைகளைப் பழைய ஏற்பாடு என்று சொல்லி ஒரேயடியாக ஒதுக்கிவிட்டு; கிருபையைச் சார்ந்த சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதால்; மாய்மால கிறிஸ்தவர்கள் சபையில் பெருகிவிட்டார்கள்" என்று சமீபத்திய ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

* என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
* என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.
* ... கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; ...
* ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக;
* ... உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.
* கொலை செய்யாதிருப்பாயாக.
* விபசாரம் செய்யாதிருப்பாயாக.

* களவு செய்யாதிருப்பாயாக.

* பிறனுக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

* ... பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக..

புதிதாக இரட்சிக்கப்பட்ட இளம் கிறிஸ்தவர்களுக்கு மேலே உள்ள 10 கட்டளைகள் தெரியாததினால் என்ன நடக்கிறது? எனது அனுபவத்தில், நான் பார்த்ததில் இருந்து சில காரியங்களைச் சொல்கிறேன்.

* இரட்சிக்கப்பட்டபிறகும் ஏறக்குறைய ஒரு வருஷம் வரைக்கும் விக்கிரகத்தை வீட்டுக்குள்ளேயே வைத்துக்கொண்டிருந்தார் ஒருவர்!
* மிகக்குறைவான வேத வாசிப்பு.
* "இயேசு" என்ற வார்த்தையைத் தேவையில்லாத இடங்களில் அர்த்தமில்லாமல் உபயோகிப்பது. (தும்மல் வரும்போது கூட...)
* ஞாயிறு ஆராதனைக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்காமலிருப்பது.
* கொலை செய்கிறார்கள்! **No!** "இருக்க முடியாது" என்று நினைப்போம். (1 யோ.3:15—ஐ வாசிப்போம்)
* விபச்சாரம்? சிந்தனையளவில் இருந்தாலும் தேவனுடைய பார்வையில் "=" தான்!
* களவு? (லஞ்சம் என்ற போர்வையில்)
* பொய்? வாடிக்கை (Casual) ஆக்கிவிட்டார்கள்.
* அதோ அந்த அழகான பூனைக்குட்டி; தூக்கிட்டு வந்தால் நன்றாயிருக்கும்! அது அடுத்தவீட்டுப் பூனை; அப்படி நினைத்தாலே அது தவறுதான்.
* விதையைத் தூவிவிட்டால் போதாது; இப்படிப்பட்ட விதை சார்ந்த காரியங்களையும் கவனிக்க வேண்டும்.

## *விசுவாச விதை Vs அவிசுவாச விதை:*

விசுவாசம் நல்ல விதைகளைத் தூவுகிறது; வாக்குத்தத்த விளைச்சலுக்குள் நடத்துகிறது. அவிசுவாசம் களை விதைக்கிறது; இஸ்மவேல்களைப் பிறப்பிக்கிறது! ஈசாக்கு என்ற வாக்குத்தத்தம் காத்திருந்தபோதும்; சாராயின் பொறுமையின்மை அவசர அவசரமாக இஸ்மவேலைப் பிறக்க வைக்கிறது. அவசரத்துக்குப் பின்னணியத்தில் (Background) அமானுஷ்யமாகச் செயல்படுகிறது இந்த அவிசுவாசம்.

சாராய் ஆபிராமை நோக்கி; நான் பிள்ளைபெறாதபடிக்கு, கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப்பெண்ணோடே சேரும்; ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள்... (ஆதி. 16:2). ஆபிரகாமின் விசுவாசத்தை சாராயின் அவிசுவாசம் மழுங்கச் (overtake) செய்தபோது ஆபிரகாமினால் எதுவும் செய்ய முடியவில்லை. களை ஓங்கி வளர்ந்து பயிரை நெருக்கியபோது; விளைச்சல் கெட்டுப்போனது, மகசூல் குறைந்தது. களைச் செடிகளுக்கு யாரும் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. அது தானாகவே ஓகோ என்று வளருகிறது. இப்படியாக விசுவாச ஓட்டத்தில் நம் வேகம் குறையும்போது; அவிசுவாசத்திற்கு அது வசதியாகப் போய்விடுகிறது, முன்னுரிமை (advantage) எடுத்துக் கொள்கிறது.

வாக்குத்தத்தம் செய்தவர்; அதைச் செய்து முடிக்கும் வல்லமையுள்ளவர் என்பதை நம்பி சாராள் சற்றுப்பொறுமையுடன் இருந்திருப்பாளேயானால்; விசுவாசம் ஜெயித்திருக்கும். வாக்குத்தத்தம் சீக்கிரமாக நிறைவேறியிருக்கும். பயிர் நிலத்தைக் களைகள் முளைத்து

பாழாக்காமலும் இருந்திருக்கும். இந்தப் பொல்லாத அவிசுவாசத்தினால் இவ்வளவு கேடு நடந்துவிட்டதே!

தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தைக் கெடுத்து, குறைத்து, முடிவில் இல்லாமல் போகச் செய்வதே அவிசுவாசத்தின் வேலை. அதனால் விசுவாசிகள் தங்கள் எல்லைகளுக்குள்; களை விதைகளை அனுமதிக்கக் கூடாது. விசுவாசத்திற்குப் புறம்பான ஆலோசனைகளுக்குச் செவிகொடுக்கும் போது; ஒரு அவிசுவாசக் கரு முட்டைக்குள் வைக்கப்படுகிறது.

ஆபிரகாம் வாக்குத்தத்தத்தின்படி ஈசாக்கைப் பெற்றான்தான்; என்றாலும் எவ்வளவு காலதாமதம் (**Too late!**) வயசுக்காலத்தில் நடக்க வேண்டியது; வயதான காலத்தில் நடக்கிறது! (ஆதி. 17:17). களைகளின் நெருக்கடியால் பயிர் விளைய அதிகக் காலதாமதம் ஆகிப்போனது. சத்துரு களைவிதைக்கும் காட்சி "தூக்கக்கலக்க நேரங்களில்" நடக்கிற ஒன்று. இது ஜெபக்குறைவைக் காட்டுகிறது. நல்லவிதைகள் ஊன்றப்பட வேண்டுமானால் ஜெபவேளையை அதிகரிப்போம். அவிசுவாசத்திற்கு சவாலிடுவோம், விசுவாசத்துடன் கைகோர்ப்போம். தேவன் இயேசு உதவி செய்வார்; அவரே விசுவாசத்தைத் துவக்கி வைத்தார், கூடவே ஓடி வந்து கொண்டிருக்கிறார், நித்தியஜீவனுக்குள் சென்ற பிறகு முடித்து வைப்பார். (அங்கே விசுவாசம் தேவையில்லை, ஏனென்றால் அங்கே நாம் அவரை முகமுகமாகத் தரிசித்தபடி அவருடனிருப்போம்; காணாததை நம்புவதற்காகத்தான் விசுவாசம் ஏற்படுத்தப்பட்டது)

கண்காணாத உலகத்தில் நடப்பதைக் காண்பதற்காகத்தான் இயேசு நமக்குள் விசுவாசத்தைத் துவக்கி வைக்கிறார். சாத்தானும் அவன் தூவும் களை விதைகளும் கூட கண்களுக்குத் தெரியாதவைகள்தான். அதனால் மாமிசக் கண்களால் காணக்கூடிய இந்த உலகத்தில், மனுஷர்களிடத்தில் தன்னுடைய விதைகளைத் தூவி; அவர்களைத் தோற்கடிப்பது அவனுக்கு எளிதாக இருக்கிறது.

"வெல்ஸ்" என்பவர் எழுதிய ஒரு கதையில் கண்களால் காண முடியாத ஒரு மனிதன் எவ்வளவாக பலசாலியாக இருப்பான் என்பதைச் சொல்கிறார்... பார்ப்போம்: கண்களால் காணமுடியாத தன்னுடைய நிலையின் காரணமாக பயமில்லாமல் எங்கு வேண்டுமானாலும் செல்ல, திருட, பெருங்கூட்டத்தினரைக் கூடத் தாக்கி ஜெயிக்க அவனால் முடிகிறது. இப்படியாக ஒருவன் ஓர் ஊரிலுள்ள அனைவரையும் அடிமைப்படுத்தி அடக்கி வைக்கிறான்.

திமிராகப் பேசுகிறான்: "மக்களே கவனியுங்கள், பர்டாக் துறைமுகத்துக்கு நான்தான் அரசன். இன்றைக்கு கெம்ப் என்பவனுடைய மரணதண்டனை நிறைவேறப்போகிறது. அவன் தன்னை எங்கேயாவது வைத்துப் பூட்டிக்கொள்ளலாம் அல்லது ஒளிந்து கொள்ளலாம், போலீஸ் பாதுகாப்புப் போட்டுக்கொள்ளலாம். கண்காணா மரணம் வந்து கொண்டிருக்கிறது. அவனுக்கு உதவி செய்யாதீர்கள், செய்தால் உங்களுக்கும் மரணம் நிச்சயம்!" சிங்கமாகக் கெர்ச்சித்த அந்த மாய மனிதன் ஆரம்பத்தில் வெற்றியடைகிறான்தான். என்றாலும் மக்கள் பல நூதனமான ஆலோசனைகளுடன் செயற்களத்தில் இறங்கி அந்தக் கொடியவனை ஒழித்துக்கட்டுகின்றனர்.

களைகள் ஓங்கி பயிரைவிட உயரமாக வளரலாம், என்றாலும் அம்பாரத்தில் சேர்க்கப்படுவது கோதுமை மணிகள்தான், களைகள் அல்ல; சுட்டெரிக்கப்படுவதே அதன் முடிவு. ...முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள்... (மத்.13:30) அவிசுவாசத்திற்கும் விசுவாசத்திற்கும் சம்பந்தமில்லை, இஸ்மவேலுக்கும் ஈசாக்குக்கும் சம்பந்தமில்லை, பயிர்விதைக்கும் களைவிதைக்கும் சம்பந்தமில்லை. பிசாசே உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை; எனக்குப் பின்னாகப்போ சாத்தானே என்று சொல்லுவோம்!

கண்காணா மனிதனின் நாவலாசிரியர் வெல்ஸ் ஒரு முக்கியமான விவரத்தைக்

கவனிக்கத் தவறிவிட்டார். அதாவது அந்தக் கண்காணா மனிதனுக்குக் கண் தெரியாது! ஏன்? எப்படி?

கண்காணா மனிதனுடைய கண்களுடன் சேர்த்து அவனுடைய முழு உடம்பும் ஒளிபுகக் கூடியதாக மாற்றப்பட்டு, காற்றைப்போல ஒளி விலகு விகிதமுடையதாக்கப்பட்டிருந்ததால்தான் அவனை யாராலும் பார்க்க முடியவில்லை. கண்ணிலுள்ள படிகவில்லையும், கண்திரவமும், இன்னும் ஒருசில பகுதிகளும் அதில் விழும் பிம்பம் விழித்திரையின்மீது உருவாகும்படி ஒளியை விலகச் செய்கின்றன. ஆனால் கண்ணின் விலகு விகிதமும், காற்றின் விலகு விகிதமும் ஒன்றாக இருந்தால்; ஒளிவிலகல் உருவாக சந்தர்ப்பமில்லை. அதனால் ஒளிக்கதிர்கள் ஒரு புள்ளியில் குவிவதில்லை. கண்காணா மனிதனின் கண்களில் நிறம் இல்லாததினால் ஒளி தடையில்லாமல் ஊடுருவிச் செல்லும். அதனால் இந்தக்கண்களினால் இந்த மனிதனின் மனதில் எந்த பிம்பத்தையும் உருவாக்க முடியாது.

அதனால் என்ன? (So what?) கண்காணா மனிதனுக்குக் கண் தெரியாது! அதனால் அவனுக்குக் கிடைத்துள்ள சாகசங்களினால் அவனுக்கு எந்தப் பிரயோஜனமும் கிடையாது. ஆதரவின்றி ரோட்டில் தட்டுத்தடுமாற வேண்டும். யாரும் அவனுக்குப் பிச்சைகூடப் போட முடியாது; ஏனென்றால் அவன் யார் கண்ணுக்கும் தெரியாதவன்! நாம் நம்முடைய விசுவாச விதைகளை விதைப்பதன் மூலமாகச் சாத்தானை இப்படிப்பட்ட நிர்க்கதியான அவலநிலைக்குத் தள்ளிவிட முடியும்!

கடுகளவுக்குத்தானே இருக்கிறது இந்த விசுவாசம் என்ற தயக்கமா? யோசிக்க வேண்டியதில்லை; தூக்கிக்கொண்டு வருவோம் அதை இயேசுவிடம்! அதை மலையைவிடப் பிரமாண்டமாக்குவார்! பிறகு, அந்த இராட்சத கடுகு, மலையை நோக்கி உருண்டு போய்...

...கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது... (மத். 17:20)

விசுவாசம் பொறுமையோடிருக்கும்; ஈசாக்கைப் பெற்றெடுக்கும்; அவிசுவாசமோ இஸ்மவேலுக்கு அவசரப்படும். சீக்கிரமாகப் பணக்காரனாகிவிட வேண்டும் என்று துடிக்கும். பொறுமையோடிருந்திருந்தால் ஒருவேளை ஈசாக்கைக் கொஞ்சம் சீக்கிரமாகப் பெற்றெடுத்திருந்திருக்கலாம். உலக சரித்திரத்தில் கூடச் சற்று வித்தியாசம் வந்திருக்கும். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்; நிறைவேற்றும் ஆற்றல் உள்ளவர், நிறைவேற்றச் சீக்கிரம் வருவார்; அதனால் கையிலுள்ள கெட்ட விதைகளைத் தூர எறிந்து விடுங்கள். அவிசுவாசத்தை எப்படித் தூர எறிவது? கீழே வரும் வசனத்தின்படி; ...

"உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான். (மாற். 9:24)"

இயேசுவே அதற்கு உதவி செய்வார். கண்ணீரின் ஜெபம் தேவை. (கெம்பீரத்தோடு விதைத்த கெட்ட விதைகளைக் கண்ணீரோடுதான் அறுக்க வேண்டும்.) கெட்ட விதைகளைத் தேவனே **replace** (மாற்றம்) செய்துவிட்டு; நல்ல விதைகளைப் போட்டு வளர வைப்பார்.

## *உண்மை கசக்கிறது:*

சத்தியத்தை வசனத்தின்படி போதிப்பவர்களை (அதாவது தேவனுக்காக உண்மையாக வேலை செய்யும் பிரசங்கியார்களை) யாருக்கும் அவ்வளவாகப் பிடிப்பதில்லை. காரணம் அதில் பரிசுத்தாவியானவரின் கண்டிப்பு வெளிப்படுவதால்; அது அவர்களுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது.

மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது. (அப். 13:39)

இது நியாயப்பிரமாணக் காலமல்ல; சுயாதீனப்பிரமாணத்தின்படி நாம் “கிறிஸ்துவுக்குள் யார்” என்று விளக்கிச் சொன்னால் நம்புவதற்குத் திராணியில்லை; காரணம் அவைகள் கண்காணாத உலகத்தில் இருப்பதால்!

வெகு காலத்துக்கு முன்னதாக (சுமார் 50 வருஷத்திற்கு முன்னதாக இருக்கலாம்) பாரீஸ் செய்தித்தாள் ஒன்றில் “25 பைசாவுக்கு ஒரு விரைவான பயணம்; ஒரு வினாடிக்கு 30 கி.மீ. வேகத்தில் ஒரு விரைவுப் பயணம்” என்ற ஒரு விளம்பரம் வெளியாகியிருந்தது. அதைப்பார்த்துவிட்டுப் பலர் பணம் அனுப்பினார்கள். பிறகு, செய்தித்தாளில் அதற்கான பதில் வெளியாகி இருந்தது. “படுக்கையில் அமைதியாகப் படுத்திருங்கள், பாரிஸ் இருக்கும் 49ஆவது அட்சரேகையில் நீங்கள் ஒரு நாளில் 25,000 கி.மீ.க்கும் அதிகமாகப் பயணம் செய்கிறீர்கள். நேரம் போகாவிட்டால் ஜன்னல் திரையை விலக்கிவிட்டு நட்சத்திரங்களை வேடிக்கை பாருங்கள்.”

இந்த விளம்பரத்தை வெளியிட்டவன் மோசடிக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டான்; தண்டனைத் தீர்ப்பின்படி அபராதம் (Fine-ஐ) கட்டிவிட்டு; கலிலியோவைப் போல “நிச்சயமாகவே பூமி சுழலவே செய்கிறது” என்றானாம். அவனுடைய விளம்பரத்தில் தவறு எதுவும் இல்லை, மக்கள்தான் புரிந்து கொள்ளவில்லை அவ்வளவுதான். பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும் சுற்றி வரும்போது அதன் மீது வசிக்கும் ஒவ்வொரு மனிதனும் வினாடிக்கு 30 கி.மீ. வேகத்தில் அண்டவெளியில் எடுத்துச் செல்லப்படுகிறான். இப்படியாக சூரியனைச் சுற்றி வருகிறோம். (சூரியனுக்கும் சுழல் பாதையுண்டு, அதுமட்டுமல்ல சூரியன் இருக்கும் galaxy-க்கும் சுற்றுவட்டப் பாதையுண்டு. அதையெல்லாம் கணக்குப் பார்த்தால்; நாம் அண்டவெளியையே சுற்றிக் கொண்டிருக்கிறோம்). இந்த வேகத்தையும் கணக்குப்பார்த்து விளம்பரம் செய்திருந்தால் ... அவனுடைய உயிருக்கே ஆபத்தாக முடிந்திருக்கும்.

– நாம் அதிகாரத்தோடு தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்!
  (யோவான். 1:12)
– இயேசு நம்முடைய சிநேகிதர்!! (யோ. 15:15)
– நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறோம்! (எபேசி. 1:1)
– நம்முடைய சரீரத்தைப் பரிசுத்தாவியானவர் ஆலயமாக்கி; அதில் தங்கியிருக்கிறார்! (1 கொரி.6:19,20)
– நாம் “புது சிருஷ்டிப்பாயிருக்கிறோம்” (2 கொரி. 5:17)

இந்த வசனங்களின் (reality) உண்மை நிலை திரை விலக்கப்பட்ட, மறுரூப அனுபவம் பெற்ற, தேவனை அறிந்து கொண்டவர்களுக்குத்தான் புரியும். மேலே குறிப்பிட்ட பாரிஸ் நகர விளம்பரத்தில் வந்திருந்த விளம்பரம் உண்மை. ஆனால் ஒருவன் அதை விவரித்துச் சொன்னாலும் யாரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லையே! ஏன்? அதாவது அந்த உண்மையை நம்பினார்கள்தான், ஆனால் ஏற்றுக் கொள்ளவில்லை! அதுதான் ஆச்சரியம். அதாவது விளம்பரப்படுத்தப்பட்ட காரியம் தங்கள் கண்கள் காண்கிற அளவில்; தங்கள் வாழ்க்கையினூடாக ஊடுருவும் ஒரு காரியமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். அது நடக்காததினால் ஏமாற்றம், அதுமட்டுமல்லாமல் அவன் தங்களைக் கிண்டல் செய்வதாக நினைத்தார்கள்.

–“உங்களுடைய அப்பாவின் பெயர் என்ன?” என்ற கேள்விக்கு நாம் “பிதாவாகிய தேவன் (யெகோவா)” என்று பதில் சொன்னால்?

–உங்கள் சகோதரனின் பெயர் என்னவென்று கேட்டால்; அதற்கு நாம் “கர்த்தராகிய இயேசு” என்றால்?

–நீங்கள் என்ன ஜாதி? என்ற கேள்விக்கு “பரிசுத்த ஜாதி” என்றால்?

நம் பதில் உண்மையானதாக இருந்தாலும் (ஒரு வேளை அது அவர்களுக்குத் தெரிந்தே இருந்தாலும்) நாம் அவர்களைக் கிண்டல் செய்வதைப் போல் அவர்களுக்குத் தோன்றுமில்லையா? அது போல்தான் இதுவும்.

நம்முடைய நிலைமை கிறிஸ்துவுக்குள் மிக ஆச்சரியமான முறையில் இருந்தாலும் (e.g. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதே அதிசயம் இல்லையா?) அந்த விஷயம் இயேசுவால் மிக மிக எளிதாக்கப்பட்டிருக்கும் விதம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இவ்வுலகில் எதுவுமே சிக்கல் நிறைந்ததாக, கஷ்டமானதாக (complication) இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள், அதுதான் அவர்களுக்குப் பிரியம்.

அடுத்ததாக விசுவாசிப்பார்கள்; ஆனால் விசுவாசித்த அந்த வசனத்தைத் தங்கள் வாழ்க்கைக்குள் கொண்டுவர மனசு வராது. (நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை விசுவாசிப்பார்கள், ஆனால் அந்த சத்தியத்தைத் தங்கள் வாழ்க்கைக்குள் நுழைய விட மனமிருக்காது. ஏனென்றால் இன்னமும் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுடன் தங்களை ஒப்பிட்டுக் கொள்வதால்...)

இப்படிப்பட்டவர்களுக்காகவே இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது.

அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்... (அப். 13:41)

வசனத்தின்படி யாருக்கும் நடந்துவிடாதபடி எச்சரிக்கையாய் இருப்போம். சத்தியத்தை அறிந்தவர்கள் விவரித்துச் சொன்னால்; ஏற்றுக் கொள்வோம். நாம் தவறான போதனைகளை நம்பிவிடாமல் இருக்கத் தேவன் நமக்குத் தன் ஆவியானவர் மூலமாக உதவி செய்வார். மீண்டும் மீண்டும் ஒரு காரியத்தைச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. வேத தியான நேரத்தையும், ஜெப நேரத்தையும் அதிகப்படுத்துங்கள். (அதிகப்படுத்துவோம்) ஏனென்றால் நாம் எழுதும் காரியங்களெல்லாம் எனக்கும் சேர்த்துத்தான். நான் எழுத எழுத புதியதான காரியங்களைக் கற்றுக்கொண்டே வருகிறேன்.

## *சுவிசேஷத்தின் இரகசியம்:*

“பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.” என்பது ஒரு வார்த்தையில் முடிகிற காரியமல்ல. இந்தச் சுவிசேஷ விதைப்பின் இரகசியம் பெரியது!

“...புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாய் இருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். (எபே. 3:3)”

“இயேசுவே ஆண்டவர்” என்ற சுவிசேஷம் சுவிசேஷகனுடைய கரங்களில் விதையுருவில் ஏராளமாக இருக்கின்றன. அந்த விதைகளுக்காக ஏங்கி புறஜாதியாருடைய இருதயங்கள் காத்திருக்கிறதாம். அவர்களும் உலகத்தோற்றத்திற்கு முன்பே முன் குறிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். சமாதானத்தைத் தேடி “எங்கே நிம்மதி” என்று அலைமோதுகிறார்கள். கரை காணாத அலைகளாக ஓடி ஓடி தவிக்கிறார்கள், நுரைகளாகிறார்கள். சிருஷ்டிகரைத் தெரியாததால்; சிருஷ்டிகளிடம் தேவனைத் தேடுகிறார்கள். அவைகளிடமிருந்து மௌனத்தைப் பதிலாக வாங்கிக் கொண்டு திரும்பி வருகிறார்கள்.

அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; ... கண்களிருந்தும் காணாது. ... காதுகளிருந்தும் கேளாது; ... மூக்கிருந்தும் முகராது. ... கைகளிருந்தும் தொடாது; ... கால்களிருந்தும் நடவாது; ... சத்தமிடவும் மாட்டாது. ... அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போலவே இருக்கிறார்கள். (சங். 115:5–9)

நமக்கோ இலக்கு தெரியவில்லை.

“அந்திக் கருக்கலில் திசை மாறிய பெண் பறவை

தன் குஞ்சுக்காய், தன் கூட்டுக்காய்

அலைமோதிக் கரைகிறது.

எனக்கதன் கூடும் தெரியும், குஞ்சும் தெரியும்

இருந்தும் ... ?

எனக்கதன் பாஷை புரியவில்லை”

என்று தடுமாறுகிறோம்.

தோளில் விதைகள் நிறைந்த பை, நெஞ்சில் சுமை, என்றாலும் இறக்கி வைக்க வகை தெரியவில்லை. இயேசுவை அறிவிக்கப் போனால் சொற்களில் தடுமாற்றம். ரயில் போன பிறகு ஓடி வந்து, தண்டவாளத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறோம். காடெங்கும் சிங்கத்தின் கெர்ச்சிப்பின் எதிரொலிகள்; நாமோ கொட்டாவியை சொடக்கடித்து விரட்டிவிட்டு சாவகாசமாக நடந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய குறட்டைச் சத்தத்தால்தான் குருவிகள் அதிகாலையிலேயே விழித்துக் கொள்கிறதோ என்னவோ?

இந்தப் பிரச்சனை பொதுவாக அநேகத் தேவப்பிள்ளைகளுக்கு இருப்பதற்குக் காரணமென்ன? தரிசனம் இல்லாத இருதயத்தில் ஆத்தும பாரம் இருக்காது. பள்ளத்தில் விழுந்து கிடக்கும் ஒருவன் தன்னுடைய ஒரு கையினால் தன்னுடைய அடுத்த கையைப் பிடித்துத் தூக்கினால் வெளியே வர முடியுமா? புறஜாதியார் தேவனையடைய இப்படித்தான் முயற்சிக்கிறார்கள். அவர்களைப் பார்த்து மனதுருகி, கையைப் பிடித்து வெளியே தூக்கிவிட நாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம்.

தேசத்தில் வெள்ளம் ஏற்படும்போது, புயல் அடிக்கும்போது, காட்டுத்தீ பரவும்போது, கொள்ளை நோய் ஏற்படும்போது எந்த அளவில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதோ; அந்த அளவில், அதைவிட அதிக அளவில் சுவிசேஷ விதை தூவலில் வேகம் வேண்டும். அரசாங்கத்தின் அதிரடி நடவடிக்கைகளால் உயிர்கள்தான் காப்பாற்றப்படுகின்றன; ஆத்துமாக்களின் நிலைமை என்ன? அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும் ஏராளமான உயிர்கள் பலியாகின்றன; அந்த ஆத்துமாக்களின் நிலை என்ன? நம்முடைய பிள்ளைகள், நண்பர்கள், உறவினர்களின் நிலவரங்களும் இந்த வட்டத்திற்குள்தான் சிக்கிக்கொண்டிருக்கிறது என்பதை சிந்திப்போம். நிலாவில் நடப்பதைப் போல நடந்தால்? தேவனுடைய வேலையை அசதியாக செய்யாதிருப்போம்.

அசைவ தாவரங்கள் (Cornivorus) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். (Darlingdonnia Galifornia, Dirasira Canpensis, Nepenthus miraphilis, Heleambora Cimandensis Reducta) கெட்டித்தன்மையில்லாத, சத்துக்கள் குறைந்த, குறிப்பாக நைட்ரஜன் சத்துக் குறைந்த நிலங்களில், அமிலத்தன்மை நிறைந்த சதுப்பு நிலப்பகுதிகளில் இந்தவகைத் தாவரங்கள் வளர்கின்றன.

இந்த வகைத் தாவரங்கள் சிறு பூச்சிகள், வண்ணத்துப்பூச்சிகள், எறும்புகள், வண்டுகள், புழுக்கள், சிலந்திகள், ஏன் சிறு தவளைகளைக் கூட விழுங்கி ஏப்பம் விடுகின்றன.

(மனிதனை விழுங்கும் ஒரு இராட்சத தாவரத்தைப் பற்றிய ஒரு கற்பனை ஆங்கில திரைப்படம் கூட வெளியானது). தாங்கள் பிடித்துத் தின்னும் பூச்சிகளிலிருந்து தேவையான சத்துகளைப் பெற்றுக்கொள்கின்றன.

உயிரினங்களைக் கவரும் விதத்தில் இவற்றின் மேல் பசை, பொறி போன்ற அமைப்புகள், பனித்துளி போன்ற பகுதிகள், கூம்பு வடிவப் பகுதிகள், கைகளைப் போன்ற உருவ அமைப்புள்ள இலைகள் போன்றவை இவைகளில் காணப்படுகின்றன. மொத்தம் 5 குடும்பங்களைச் சேர்ந்த 625 வகைகளில் இந்த தாவர வகைகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு சில தன்மைகளை மட்டும் கொண்ட மேலும் 300 அசைவ தாவரங்களும் உள்ளன.

இவற்றின் தோற்றம், பூச்சிகளைப் பிடிக்கும் விதத்தில் மாறுபாடுகள் காணப்பட்டாலும்; உணவுக்காகச் சிறு உயிரினங்களைச் சார்ந்திருப்பதில் ஒன்றுபட்டிருக்கின்றன. கவர்ச்சிகரமான தோற்றமுடையவைகளாகவும் இந்த தாவரங்களின் பகுதிகள் உள்ளன.

வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. (1 கொரி. 12:4,5,6)

5 வகையான ஊழியங்கள், 9 வகையான வரங்களின் வழியாக ஊழியர்கள் செயல்பட்டாலும்; எல்லோருடைய உள்நோக்கமும் எப்படியாவது ஆத்துமாக்களைப் பிடிக்க வேண்டும் என்பதுதான்.

1. **அப்போஸ்தர்கள்**
2. **தீர்க்கதரிசிகள்**
3. **போதகர்கள் (சபையின் மேய்ப்பர்கள்)**
4. **அற்புதங்கள் (பல)**
5. **குணமாக்கும் வரங்கள் (பல)**
6. **ஊழியங்கள் (பல – முக்கியமாக ஐந்து)**
7. **ஆளுகைகள் (சபைகள், ஸ்தாபனங்கள்)**
8. **பலவித பாஷைகளைப் பேசுதல்**

**(உலகத்தில் ஒரு லட்சத்திற்கு மேலான பாஷைகள் உண்டாயிருக்கிறது.)**

மேலே சொல்லப்பட்டிருக்கும் வகைகளில் தேவன் சபையிலே சுவிசேஷம் அறிவிக்க ஒழுங்குகளை ஏற்படுத்தியிருக்கிறார். நம் கர்த்தர் இயேசுவால் கொடுக்கப் பட்டிருக்கும் ஊழியங்கள், பரிசுத்தாவியானவரால் அருளப்பட்டிருக்கும் வரங்கள் ஊடாகப் பிதாவாகிய தேவனுடைய கிரியைகள் கடந்து சென்று நம் மூளையறிவிற்கு எட்டாத அளவில் ஊழியங்கள் நடைபெறுகிறது. **(5 X 9 = 45), (45 X 8 = 360), (360 X 1000 = 360000)!**

ஊழியர்கள் ஒருவரையொருவர் குற்றம் கண்டுபிடிப்பதற்கும், போட்டி போடுவதற்கும், ஒருவரையொருவர் பட்சித்து அழிந்து போவதற்கும் காரணம் புரிந்திருக்கும். ஆக கடைசியில் ஆத்துமாக்கள் இல்லாமல் சபைகள் பசியில் வாடிக்கொண்டிருக்கின்றன. "தாகமாயிருக்கிறேன்" என்று சிலுவையில் கதறிய இரட்சகர் இயேசுவின் குரலின் எதிரொலிப்புகள் நிற்கவில்லை; 2000 வருஷங்களாக தொடர்ச்சியாக கேட்டுக்கொண்டேயிருக்கிறது.

அசைவத் தாவரங்களின் ஒற்றுமை ஊழியர்களுக்குள் வர வேண்டும்; அதே நேரத்தில் அந்திகிறிஸ்துவின் வல்லமைகள் ஊடுருவாமலும் இருக்க வேண்டும். அசைவத்தாவரங்களின் கவர்ந்திழுக்கும் தன்மைகளும் வேண்டும்.

*...அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். ... யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப்போல ... நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போல ... பலவீனனைப்போல ... எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன். (1 கொரி. 9:19–22)*

என்று பவுல் சொல்லுகிறார். இந்த உத்“வேகம்” நமக்கும் வேண்டும்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 44 வயதான விலங்கியல் நிபுணர் “பிராடி பார்” என்பவர் ஒரு முதலை ஆராய்ச்சி நிபுணர். முதலைகளை மிக நெருங்கி ஆராய்ச்சி நடத்துவதற்காக “முதலைத் தோல் போர்த்திய மனிதனாக” மாற முடிவெடுத்தார். ஸ்பெஷல் முதலை உடை தயாரானது. இவர் நுழையும் அளவுக்கு ஒரு உலோகக் கூண்டு, அதன் மேல் முதலையின் தோல் போல தோன்றும் முரட்டுத்துணி, கண்ணாடி இழைகளால் தயாரிக்கப்பட்ட அச்சு அசலான முதலையின் வாய்ப் பகுதி. இதில் புகுந்துகொண்டு சானியா நாட்டில் 20 அடி நீளத்தில் திரியும் பிரமாண்டமான நைல் முதலைகளின் நடுவில் உலாவுகிறார் பிராடி. “மனித வாசனை” தெரியாமலிருப்பதற்காக நீர்யானையின் சாணத்தை இந்த உடையின் மீது பூசிக்கொள்கிறார்.

முதலைகளின் இயற்கை இருப்பிடமான காட்டுப்பகுதி நீர்நிலைகளுக்குச் சென்று 23 வகையான முதலையினங்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்தியுள்ளார். ஆறுகள் வறண்டுவிடும் போது முதலைகள் கரையோரமாக நீளமாக பொந்துகளைப் பறித்துப் படுக்கின்றன. இந்த பொந்துகளின் வெப்பநிலையைத் தெரிந்து கொள்ளவும் மேலும் பல விபரங்களை அறியவும் ‘**chip**’ (சிப்) உபகரணங்களை முதலையின் உடலில் பதிக்கிறார். “முதலையினம் 1/3 பகுதி அழியும் நிலையில் உள்ளது; எப்படியாவது அவற்றைக் காப்பாற்றியாக வேண்டும்” என்று ஆதங்கத்தோடு கூறுகிறார்.

“முதலைக்காக முதலையாக மாறிய மனிதனை”க் கவனியுங்கள். அவைகளுக்கு ஆத்தும இரட்சிப்பும் இல்லை, அவை மனந்திரும்புவதும் இல்லை. அவைகளுக்குப் பரலோகமும் இல்லை, நித்திய ஜீவனும் இல்லை. என்றாலும் மாயையாக தன் காலத்தை முடிக்கும் அந்த ஜீவ ஜந்துக்காக ஒரு மனிதன் எடுக்கும் பிரயாசத்தைக் கவனியுங்கள். “எல்லோருக்காகவும் எல்லாமுமாக மாறிய பவுலின்” தரிசனச் சங்கிலியில் நமது தரிசனச் சங்கிலியின் அடுத்த கொக்கியை (**hook**) இணைப்போம்.

***சிந்தனைக்கு:*** ஒரு (**hook**): ஒரு சொட்டுத் தேனைச் சேகரிக்கச் சில நேரங்களில் ஒரு தேனீ 16 கி.மீட்டர் தூரம் வரைப் பறந்து செல்லுமாம்! சுவிசேஷகர்களுக்குக் கால் வலிக்கிறதாம்; 2 **wheeler, 4 wheeler**-ல் பறக்கிறார்கள். வழியில் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் மின்னலாய் மறைகிறார்கள். **Car, Bike** தவறில்லை; அதற்காக... கால்களையே ஒரேயடியாக மறந்துவிட்டோமே, என்ன அநியாயம் இது?!

## தேவன் தரும் விளைச்சலின் பயங்கரம்:

*... நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார். (1 நாளா 28:9)*

*புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர். (சங். 18:26)*

*... நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன். (ஓசி. 4:6)*

"உராய்வு!" உராய்வைப் பற்றி எதுவுமே தெரியாதவர்களின் வாழ்க்கையிலும் இது முக்கிய பங்கை எடுத்துக் கொள்கிறது. உராய்வு இல்லாத பனி உறைந்த நடைபாதைகளில் நடக்கும் போது வேடிக்கையான அசைவுகளைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது. உராய்வில்லாத வழவழப்பான தார்ச் சாலையில் குதிரை வழுக்கி விழுகிறது. கையிலிருந்து பேனா நழுவாமலிருக்க, மேஜை வழுக்கிச் சென்று மூலையில் மோதி விடாமலிருக்க, மைப் புட்டி **(ink bottle)** நழுவாமலிருக்க, உதவி செய்வது உராய்வுதான். மிக சகஜமாக நமது முயற்சியில்லாமலேயே தானாகவே செயல்படுகிற இந்த அரிய உராய்வு முழுவதுமாக இல்லாமல் போய்விடுவதாக வைத்துக் கொள்வோம்.

**1.** சிறிய மணல் கூட நிலையாக தன் இடத்தில் இருக்காது. காற்று மண்டலம் முழுவதுமாக குப்பை கூளமாகிவிடும். **2.** பூமி வளவளப்பான பந்து போன்ற நீர்த்துளியின் வடிவமுடையதாகிவிடும். **3.** ஆணிகளும், ஸ்குரூக்களும் சுவரிலிருந்து கழன்றுவிடும், எதையும் நம்மால் பிடிக்கவும் முடியாது. **4.** சூறாவளிக் காற்று ஓயவே ஓயாது. **5.** எந்த சத்தமும் வலுக்குறையாத முடிவற்ற எதிரொலியாக தடைகளில் பட்டு மீண்டும் திரும்ப வந்து கொண்டேயிருக்கும். **6.** ரோட்டில் வாகனங்கள் ஒன்றோடொன்று மோதி குவியலாவிடும். இப்படியாக **7. 8. 19. 245. 2789. 4555006.** என்று இலக்கமிட்டு எழுதிக்கொண்டே போகலாம்.

தேவனுக்கு எதிராக நாம் விதைக்கும் சில விதைகள்; இந்த பயங்கரங்களையே நமக்கு விளைச்சலாகத் தருகிறது.

நாம் தேவனை "விட்டுவிட்டால்"; அவர் நம்மைக் "கை விட்டுவிடுவது" என்ற சகிக்க முடியாத விளைச்சலை நாம் அறுக்க நேரிடுகிறது. மாறுபாடுள்ளவனுக்கு தேவன் மாறுபாடானவராகத் தோன்றுவதும் இதைப் போன்றதுதான். இதில் மிக மோசமான விஷயம் எதுவென்றால் வேதம் வாசித்து; அதன்படி நடக்காமலிருக்கும்போது, ஒரு பாவமுமறியாத நம் பிள்ளைகளைத் தேவன் மறந்து விடுகிறாராம்! வேண்டவே வேண்டாம் இந்த பயங்கரம்.

இயேசுவை ஆராதித்துக் கொண்டிருப்பார்கள், இயேசுவுடன் இருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பார்கள், ஆனால் அவரைத் தொலைத்துவிட்டு வந்து கொண்டிருப்பார்கள். தொலைதூரப் பயணத்தில் அவரை எங்கே விட்டோம் என்பதும் தெரியாது; திண்டாட்டமாகிவிடும்!

தேவன் நம்மை அழைக்கிறார், தெரிந்து கொள்ளுகிறார், எதற்காக? அவர் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்த, அவர் துதியைச் சொல்லி வர. ஆனால் இரட்சிக்கப்பட்ட ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் கொஞ்ச நாட்களில் காணாமல் போய்விடுகிறது.

சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் கொடுத்த **'Bypassing God'** (கடந்து சென்று விடும் கர்த்தர்) என்ற செய்தியிலிருந்து சில பகுதிகள்: ஆரம்பத்தில் போக்குவரத்து நெரிசல் இல்லாத ஒரு சாலையில் நாளடைவில் "சாலையோர ஆக்கிரமிப்புகள்" (வீடுகள், கடைகள்,) தோன்றுகின்றன. அதுமட்டுமல்ல, முக்கியமான ஊர்வலங்கள், போராட்டங்களும் அந்த ரோட்டின் வழியாகவே நடக்கின்றன. ஆக, போக்குவரத்து நெரிசலும் அதிகரிக்க; பத்து நிமிடத்தில் கடக்க வேண்டிய சாலையைக் கடக்க இப்போது இரண்டு மணி நேரம் பிடிக்கிறது. போக்குவரத்து அதிகாரிகள் யோசிக்கின்றனர்; ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துகின்றனர். மீண்டும் சில மாதங்களில் அதே பிரச்சனை; சாலையோர வியாபாரிகள் சங்கம் வேறு முளைத்திருந்தது. விஷயம் முதல்மந்திரிக்குப் போகிறது; அவர் யோசிக்கிறார்; அவர்களை எதிர்த்தால் தேர்தலில் ஓட்டுப் போட மாட்டார்கள்; அதனால் ஒரு முடிவெடுக்கிறார். நகரத்தின்

வெளிப்புறமாகப் போக்குவரத்து அதிகமில்லாத இடத்தினூடே கடந்து செல்லும்படியாக ஒரு சாலை அமைக்கப்படுகிறது; இப்படியாக உருவானது தான் **Bypass Roads!**

நம் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் இதே பிரச்சனை! ஆக்கிரமிப்புகள்!! தேவன் நம்மை ஒரு உன்னத நோக்கத்தோடு; தன்னுடைய ஊழியத்திற்கென்று அழைத்திருக்கலாம். அதற்கென்று நம்மைத் தெரிந்து கொண்டு; நம்மை அதற்குத் தகுதியானவர்களாகும்படி ஸ்திரப்படுத்தி வரும் காலகட்டத்தில் நமது வாழ்க்கையில் மாம்சீகமான உலக சிற்றின்பங்கள் தலைகாட்ட ஆரம்பிக்கின்றன. நாளடைவில் அது நம் வாழ்க்கையை முழுவதுமாக ஆக்கிரமித்து; தேவன் அழைத்த நோக்கத்தைத் தவிர மற்ற காரியங்கள் எல்லாவற்றையும் நம் வாழ்க்கையின் எல்லைகளுக்குள் கொண்டு வந்து விடுகின்றன. தன்னுடைய நோக்கம் நிறைவேறாத பட்சத்தில் தேவன் அந்த தனிப்பட்ட நபரைவிட்டுக் கடந்து போய்விடுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

இந்த விளைச்சலை அறுவடை செய்து, கட்டாகக் கட்டி, சுட்டெரிக்க வழியேதும் இல்லையா? இருக்கவே இருக்கிறது!

எங்கே அவரைத் தொலைத்தோம்? விளக்கைக் கொளுத்தி, (வேதமே வெளிச்சம்) வீட்டைப் பெருக்கி தேடிப்பாருங்கள். (லூக். 15:8) தென்படுவார்; (1 நாளா. 28:9) மீண்டுமாக தொழுவத்தில் கட்டி பராமரிப்பார்.

உள்ளான ஆவிக்குரிய மனிதன் குளிரில் நடுங்க ஆரம்பிக்கிறான் என்று தெரிந்த மாத்திரத்திலேயே அவனுக்கு அனலோட்டம் கொடுங்கள். உங்கள் ஆவிக்குரிய போதகரையோ, ஊழியரையோ பார்த்து ஜெபிக்கச் சொல்லலாம்.

... நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி ...(2 தீமோத். 1:6) தாவீது ஜெபித்தது போல "... நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பியும்" (சங். 51:10) என்று ஜெபிப்போம். குளிர்விட்டுப் போனவர்களைப் பார்க்கும்போது; "தேவனே இவரைவிட்டு கடந்து போய்விடாதிரும்" என்றும் ஜெபிப்போம்.

## *ஏன் இந்த பயம் ? தயக்கம் ? சந்தேகம் ?*

சுவிசேஷத்தை அறிவித்தால், துண்டுப் பிரதிகள் கொடுத்தால், புறஜாதியார் ஏன் தயங்கியபடி வாங்குகிறார்கள்? ஏன் ஒரு மாதிரியாக முழிக்கிறார்கள்? திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு போகிறார்கள்? சுவிசேஷகர்களுக்குச் சரியானபடி விதைக்கத் தெரியாதது ஒரு காரணம், சாட்சி இல்லாத ஜீவியம் அடுத்த காரணம். இருளில் மூழ்கியிருக்கும் ஆத்துமாக்களின் பயத்தை நீக்கிச் சுவிசேஷம் அறிவிப்பது மிக முக்கியம்.

"கடல் கன்னி"களைக் குறித்த கதைகள் படித்திருப்பீர்கள், அல்லது கேள்விப் பட்டிருப்பீர்கள். உண்மையில் கடல் கன்னி என்று யாரும் கிடையாது; ஆனால் ஏறக்குறைய அந்த உருவ ஒற்றுமையுள்ள (மனித முகத்தின் சாயலுள்ள மீன் இனம்) கடல் விலங்கினம் இருக்கலாம். மானிடன் ஒருவன் கடற்கரையோரமாக நடந்து போய்க் கொண்டிருக்கும்போது; ஒரு கடல் கன்னியைச் சந்திக்கிறான். ஆனால் அவனுக்கு அது கடல் கன்னிதான் என்று தெரியாது. (காரணம் கடல் கன்னி கடலினுள் இருக்கும்போது மாத்திரம்தான் இடுப்புக்குக் கீழ் மீனின் சாயலுடையதாக இருக்கும். வெளியே வந்தால் சாதாரண மனித கால்கள் முளைத்துவிடும் – கற்பனை கதைதானே தாராளமாக முளைக்கும்). அவனுக்கு அவளைப் பிடித்துப்போய் விடுகிறது, தன் விருப்பத்தையும் சொல்கிறான். ஆனால் அவளுக்குப் பேசத் தெரியவில்லை. (மீன் எப்படி பேசும்?). அவனுக்கு இருட்டில் ஒளிவீசக் கூடிய ஓர் அழகான விலையுயர்ந்த முத்தைப் (pearl) பரிசாகக் கொடுக்கிறாள். அவன் அதை மேஜையின் மீதுதான் எப்போதும் வைத்திருப்பான்.

(ஒரு சுவிசேஷகன் ஒரு மனிதனுக்குச் சுவிசேஷம் சொல்லுகிறான். அவன் விசுவாசித்து இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறான். தன்னைக் கிறிஸ்துவுக்குள் நடத்திய தேவ மனிதனுக்குத் தன்னால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கிறான்.)

சரி, கதையில் அடுத்ததாக என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். அந்த மனிதன் ஒரு மீனவக் குடும்பத்தைச் சார்ந்தவன். அவனுடைய தகப்பனாரும் மீன்பிடிக்கும் தொழிலைச் செய்து வந்தபடியினால் அவருக்குக் கடல் பற்றிய சமாச்சாரங்கள் ஓரளவுக்குத் தெரியும். அந்த முத்தைப் பார்த்த அவர் அது கடல்கன்னிகளிடம் காணப்படும் முத்து என்று கண்டுபிடித்து விடுகிறார். மனசுக்குள்ளாக ஒரு அதிர்வு! மகனைப் பற்றிய பயம் அவரின் மனசு முழுவதும் பரவுகிறது. தன்னுடைய மகனுக்கு அந்தக் கடல் கன்னியால் ஆபத்து எதுவும் வந்து விடக்கூடாது என்று பயந்து தன் மனைவியிடம் சொல்லுகிறார்.

காரணம் இந்த கடல் கன்னிகள் கடலை விட்டு வெளியேறி தனிமையான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வாலிபர்களை ஏமாற்றிக் கடலுக்குள் கூட்டிச் சென்று தங்கள் இனத்தை போலவே மாற்றி விடுவதாக (கடல் மனிதர்களாக) ஒரு செய்தி சில மாதங்களாக கடற்கரை சிற்றூர்களில் பரவி எல்லோருடைய வாயிலும் அது பரப்பரப்பான பேச்சாக இருந்தது.

(அந்த மனிதன் தான் இயேசுவை ஏற்றுக் கொண்டதை இரகசியமாகத்தான் வைத்திருந்தான். என்றாலும் அவன் மறைத்து வைத்திருந்த வேதாகமம், கிறிஸ்தவ புத்தகங்கள், சிடிக்கள் போன்றவற்றை வீட்டினர் எதிர்பாராமல் ஒரு நாள் பார்க்கும்படி ஆகிவிட்டது. அவன் இரகசியமாக ஞானஸ்நானம் எடுக்க பாஸ்டருடன் ஆற்றங்கரைக்குப் போனதை வேறு யாரோ "போட்டுக் கொடுத்து" விடுகிறார்கள்.)

கதையில் என்ன நடக்கிறது? கவனிப்போம். அவனிடம் பேச்சுக் கொடுத்தார்கள், உண்மையை ஒப்புக் கொண்டான், கண்டித்தார்கள், அவன் கேட்கவில்லை. அவள் கடல்கன்னிதான் என்று எனக்குத் தெரியாது; அப்படியே கடல் கன்னியாக இருந்தாலும் அவளைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான். சுற்றியுள்ளவர்களின் ஆலோசனைகளும் வீணாகி மண்ணில் விழுந்தன.

(அவனுடைய வீட்டார் – அது அம்மா, மனைவி அல்லது முக்கியமான வேறு யாரோ – அவனைக் கிறிஸ்தவனாக மாறக்கூடாது என்கிறார்கள். சபைக்குப் போகத் தடை போடுகிறார்கள்.)

மத்தியான வேளை, கொதிக்கும் வெயிலில் வேகமாக நடந்து கொண்டிருந்த ஒரு மீனவன் ஒரு வினோதமான காட்சியைக் கண்டு நடையின் வேகத்தைக் குறைத்தான். அவன் கண்ட காட்சி அவனை வாயடைக்க வைத்தது. கடலில் இருந்து கரையேறிய இடுப்புக்கு கீழ் மீன் போல் காட்சியளித்த ஒரு கடல் கன்னி உட்கார்ந்திருந்தாள். வெயில் பட்டதும் மெதுவாக அவளுடைய கால்கள் மானிடரின் கால்கள் போல மாறின, எழும்பி ஊருக்குள் நடக்க ஆரம்பித்தாள்.

அவன் ஓடி இந்த செய்தியை ஊருக்குள் அறிவித்து கலக்குகிறான். எல்லோருமாக சுற்றி வளைத்து அந்தப் பெண்ணை பிடித்து விடுகின்றனர். அவளைப் பார்த்த மனிதன் அவளைக் கடல்கன்னிதான் என்று சாதிக்கிறான்; ஆனால் அவளுடைய தோற்றம் மனித உருவில் இருந்ததால்; அவன் பேச்சை நம்பவும் முடியவில்லை. அவளை விரும்பிய மனிதன் ஓட்டைப் பிரித்து வெளியே குதித்து ஓடி வருகிறான். அவனுடைய பேச்சுக்கு எப்போதும்போல் அவளால் பதில் சொல்ல முடியவில்லை. அவளைக் காட்டிக் கொடுத்த மனிதன் ஒரு குடத்தில் தண்ணீர் கொண்டு வந்து அவளுடைய காலில் ஊற்றுகிறான். அதிர்ச்சியில் கீழே விழுந்த அவள் கால்கள் நடுங்குகின்றன, மெல்ல மெல்ல அவை மீனின் வால் பகுதி போல் துடுப்பு உள்ளதாக மாறுகின்றன.

எல்லோரும் சேர்ந்து அவளைக் கொல்ல முயற்சிக்கின்றனர். அவளை விரும்பிய மனிதன் அவளைக் காப்பாற்றித் தூக்கிக் கொண்டு போய் கடலில் விட்டுவிட்டு வந்துவிடுகிறான். அவளை மறக்க முடியாத அவன் சில நாட்களில் யாருக்கும் தெரியாமல் அவளைத் தேடிப் போகிறான். அவளைக் கண்டு பிடிக்க முடியாததினால் விரக்தியடைந்து கடலில் மூழ்க ஆரம்பிக்கிறான்; செத்துப் போய்விடலாம் என்ற எண்ணத்துடன். ஆனால் எங்கிருந்தோ வந்த அந்தக் கடல் கன்னி அவனைக் காப்பாற்றி தன்னுடைய இருப்பிடத்திற்கு கூட்டிக் கொண்டு போகிறாள்.

காலங்கள் கடந்தோடுகின்றன. "பல வருஷங்களுக்கு முன்னதாகக் காணாமல் போன அந்த மீனவ மனிதன் கடல் கன்னியுடன் கடல் மனிதனாக மாறி கடலில் நீந்திச் சென்றதை நான் என் கண்ணால் பார்த்தேன்" ஒரு மீனவன் தன் நண்பனிடம் சொல்லிக் கொண்டிருந்தான். கடலாவது கன்னியாவது யாருக்கு காது குத்தறே? என்றான் அவனின் நண்பன்!

அவன் தொடர்ந்து இயேசுவோடு நடக்கிறான்; அக்கம்பக்கத்திலுள்ளவர்களும் எதிர்க்கின்றனர். அவனைச் சத்தியத்திற்குள் நடத்திய ஊழியக்காரருக்கும் பிரச்சனை. இந்தப் பிரச்சனையால் ஒரு சிலர் வீட்டைவிட்டுக் கூட வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. காலப்போக்கில் அவனை மறந்து விடுகின்றனர். ஒரு சிலர் அவனைக் கண்டாலும் அவனை நம்புவதில்லை, அவனிடமிருக்கும் இயேசுவையும் நம்புவதில்லை.

மக்களுக்குக் கிறிஸ்தவர்களைத் தெரிகிறது, அவர்கள் சரியான வழியில்தான் போகிறார்கள் என்று தெரிந்தும் இருக்கிறது. இன்னும் சிலருக்கு அதுதான் சரியான வழி என்றும் தெரிந்திருக்கிறது! பிறகு ஏன் ஏற்றுக் கொள்வதில்லை? எதிர்க்கிறார்கள்?

பயம் தான், அந்தப் பயம்தான் என்ன? அரசாங்க சலுகைகள் கிடைக்காது, கல்லறை கட்ட இடம் கிடைக்காது, சொந்தபந்தங்கள் புறக்கணித்து விடுவார்கள், நண்பர்களின் கேலிப் பேச்சுக்கு ஆளாக வேண்டியதாயிருக்கும். இது மட்டுமா? பெயர்க்கிறிஸ்தவர்களால் இவர்கள் குழப்பப்படுகிறார்கள், நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிற பாரம்பரிய கிறிஸ்தவர்கள் ஒரு பக்கம், தங்களுடைய பரிசுத்தத்தின் பெருமை பாராட்டும் கூட்டத்தார் ஒரு பக்கம். எது சரி என்று புரியவில்லை. கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் ஆராதிக்கும் இடத்திலேயே விக்கிரகங்கள் காணப்பட்டால்? இவர்கள் என்ன நினைப்பார்கள்? உபதேசக் குழப்பங்கள் பெரும்பாலும் சுவிசேஷத்திற்குத் தடையாக இருக்கின்றது. கேள்வி கேட்பவர்களின் சந்தேகங்களைச் சரியாகத் தீர்க்க முடியாததினால் அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள யோசிக்கிறார்கள்.

வெள்ளை சட்டை போட்டுக்கிட்டு ஒரு அம்மா கிழக்காலப் போறாங்க, கலர் சட்டையில ஒரு அய்யா மேக்கால போறாங்க, நீங்க நகையே போட்டுக்கல்ல, ஒங்கள மாதிரியே ஒரு அம்மா "யோவான்" என்ற புஸ்தகம் கொடுத்தாங்க, அவங்க நகை போட்டிருந்தாங்களே? என்ன வித்தியாசம்? என்று ஒரு கடைக்காரர் கேட்டார். கடைசியில் "எனக்கு நீங்க எதுவும் சொல்லவே வேண்டாம் அக்கா, நான் புளியம்பட்டி அந்தோணியார் கோவிலுக்கு ஒரு நாள் போயிருக்கேன், அதுக்குப் பிறகுதான் நான் குடியை விட்டேன்" என்றாரே பார்க்கலாம்!

ஒரு நோக்கத்துடன் விதைக்கப்படும் சுவிசேஷம் வேறு என்னவாகவோ மாறிப் போனது. இந்தியாவை, தேசங்களைச் சுவிசேஷமயமாக்குவது சாத்தியம்தானா என்ற "?" வந்தது. கண்டிப்பாகச் சாத்தியம், ஜெபிப்போம், நம் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம், கர்த்தர் உதவி செய்வாராக.

## Old is Gold!:

... ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார். (லூக்.5:39)

**'Old is Gold'** என்ற அறிவிப்புடன் பழைய சினிமா பாடல்களை ரெக்கார்ட் செய்து தன்னுடைய வியாபாரத்தை வெற்றிகரமாக சாத்தான் நடத்திக்கொண்டிருக்கிறான். "அந்தக் காலத்தில் எங்க பாட்டி விறகு அடுப்பில், மண் சட்டியில், அம்மியில் மசாலை அரைத்து மீன் குழம்பு வைப்பாங்க பாக்கணுமே, வாசம் மூக்கைப் பிச்சிக்கிட்டுப் போகும்" இது வீட்டிலுள்ள பெரியவர்களின் அங்கலாய்ப்பு. (உண்மைதான், யார் இல்லையென்று சொன்னது? நானும் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறேன்) ஆனால் இது சாப்பாட்டு விஷயத்துடன் நின்றால் பரவாயில்லை; பிரமாணம் என்று வரும்போதும் அநேகர் இன்னும் பழைய பிரமாணத்திலேயே நின்று விட்டதுதான் பிரச்சனையாகிப் போனது. தங்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தைத் தாங்களே கெடுத்துக் கொண்டார்கள்.

"யானை தன் தலை மேலேயே மண் அள்ளிப் போட்ட" கதையாய், "தன் கையே தன் கண்ணைக் குத்தின" கதையாய், இப்படி ஏகப்பட்ட கதையாகி கடைசியில் விஷயம் "சோகக் கதையாய்" ஆகிப் போனது.

தன்னுடைய பிரச்சனைகளைத்; தேவனிடம் கொண்டு போகாமல்; மனிதர்களிடம் சொல்லி கண்ணீர் வடிப்பது, (வடித்தது முதலைக் கண்ணீர் என்று அவர் இன்னொரு "அவரிடம்"போய் சொல்லுவார்!) அடுத்தவரின் அனுதாபத்தைச் சம்பாதிக்க முயற்சிப்பது, விடுதலை பெற வழி தெரியாமல் தாவீதின் உபத்திரவங்களைக் காரணம் காட்டுவது, இதுவெல்லாம் இன்னும் "பழைய நுகத்தடி உடைத்தெறியப்படாமல் இருப்பதையே" காட்டுகிறது.

பழைய பிரமாணமே போதுமென்றால் இயேசுவைப் பிதா அனுப்பியிருக்க வேண்டிய அவசியமே இல்லையே!

ஸிரனோடி என்ற ஒரு வேடிக்கை எழுத்தாளரின் நூலில் "பறக்கும் காந்தப் பொறி" என்ற ஒரு சம்பவத்தை விவரிக்கிறார். பூமியிலிருந்து சந்திரனுக்குச் செல்ல இரும்பினால் ஒரு எடை குறைவான வண்டி செய்யப்படுகிறது. வசதியாக அதில் உட்கார்ந்துக் கொண்டு; காந்த இரும்புக் குண்டை மேல் நோக்கி எறிகிறார்; அதை தொடர்ந்து, அந்த காந்த குண்டின் ஈர்ப்பினால் வண்டி உயர எழும்புகிறது. குண்டுக்குப் பக்கத்தில் வண்டி சென்றவுடன் மீண்டும் அடுத்த குண்டை எறிகிறார். இப்படியாக பல கோடிமுறைகள் எறிந்து சந்திரனுக்கு மேலாக ஓரிடத்திற்குச் செல்கிறார்; பிறகு மெதுவாக சந்திரனை நோக்கி இறங்கத் துவங்குகிறார். குண்டை இறுக பிடித்தபடி இருந்ததால் வண்டியும் அவரை இறுகப் பிடித்தபடி இருந்தது. இறங்குகையில் கழுத்தை முறித்துக் கொள்ளாமல் இருப்பதற்காக, குண்டை மேலே எறிந்து கவர்ச்சியினால் வண்டி கீழே விழுவதை தாமதப்படுத்துகிறார்.

சந்திரனின் மேற்பரப்பிலிருந்து சுமார் 700 மீ. தூரத்தில், இறங்கும் திசைக்கு செங்கோணத்தில் குண்டைத் தொடர்ச்சியாக மேலே எறிகிறார். வண்டி மேற்பரப்பின் அருகில் வந்தவுடன் கீழே குதிக்கிறார்!

இந்த அண்டப்புளுகு, ஆகாசப்புளுகு கதை பயங்கரமான பிளேடு **(blade)** தான். அதுமட்டுமல்ல... இது சாத்தியமற்றது என்று ஒண்ணாங்கிளாஸ் பிள்ளைக்குக் கூடத் தெரியுமே! ஆனால் ஏன் சாத்தியமற்றது என்பது எல்லோருக்கும் தெரியுமா? என்பது சந்தேகம்தான்!

வண்டியில் இருந்தபடி காந்தத்தை எறிய முடியும். போதிய அளவிற்குச் சக்தி வாய்ந்த காந்தமாயிருந்தால் அது வண்டியை கவர்ந்திழுக்கவும் செய்யும். என்றாலும் பறக்கும் வண்டி ஒரு இஞ்ச் கூட உயரே போகாது.

படகில் இருந்தபடி அதிக எடையுள்ள ஒரு பொருளைக் கரையை நோக்கி எறிந்தால் என்ன நடக்கும்? நீங்கள் எறிந்து கொண்டிருக்கும் பொருளுக்கு உந்துவிசை அளிக்கையில் உங்கள் தசைநார்கள் உங்கள் உடலோடு படகையும் எதிர்த் திசையில் நகரச் செய்வதனால், படகு கரையில் இருந்து விலகிச் செல்வதைப் பார்க்கலாம். இது எதிர்ச்செயல் சமத்துவ விதியால் ஏற்படும் விளைவு. காந்தக்குண்டை உயர எறியும்போதும் இதுதான் நடக்கும்.

வண்டியும் அதைக் கவர்ந்திழுக்குமாதலால் அதிகக் கஷ்டப்பட்டுதான் எறிய வேண்டியதாயிருந்திருக்கும்.

வண்டி இறகு போல இலேசானதாக இருந்தால் கூட பரஸ்பரக் கவர்ச்சி காரணமாக வண்டியும், குண்டும் தங்களது தொடக்க நிலைக்கே மறுபடியும் வந்துவிடும். அதனால் வண்டியை இடம்பெயரச் செய்ய முடியாது.

(17ம் நூற்றாண்டில் எதிர்ச்செயல் விதி கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் இந்தக் கதையை எழுதிய நையாண்டி எழுத்தாளரால் **(comedy writer)** இந்த வேடிக்கையான திட்டத்தை ஏன் செயல்படுத்த முடியாது என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கவும் முடியவில்லை !

*... நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், ... ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. (எபி.10:1)*

பூரணப்படுத்தமுடியாத ஒரு பிரமாணத்தின்படி ஓடி, பவுலைப் போல் எப்படி ஒரு பூரணமான ஓட்டத்தை ஓடி முடிக்க முடியும்? கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. ஆசீர்வதிக்கப்பட ஆசை, ஆனால் நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து வெளியே வரமாட்டேன், அதனுள்ளேயே இருந்து கொண்டே ஆசீர்வதிக்கப்படுவோம் என்கிறோம்.

*நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; ... (கலா.3:10)*

*... கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். (நீதி.28:25)* இது வாக்குத்தத்தம், விசுவாசிக்கிறோம்... அறிக்கையிடுகிறோம்... சுவரில் மாட்டுகிறோம்... ஆனால் "செழிப்பைப் பிரசங்கிக்கிறாரே இந்த பிரசங்கியார், மாறுபாடான உபதேசமாக இருக்குமோ?" சந்தேகம், பயம் மனதைக் கவ்வுகிறது.

இப்படியாகப் பழைய ரசத்தையும், புதிய ரசத்தையும் மாற்றி மாற்றிக் குடித்து, வயிற்றுக்கு ஒத்துக் கொள்ளாமல் அலர்ஜி ஆகிவிட்டது.

கவலை, கண்ணீர், துக்கம், சோக முகம், இவற்றில் ஒரு சுகம் இருப்பதாக, சந்தோஷம் இருப்பதாக சாத்தான் ஆண்டாண்டு காலமாக மக்களை ஏமாற்றி வருவதும்; தேவஜனங்களின் தொடர்ச்சியானத் தோல்விகளுக்குக் காரணம். பல வருஷங்களுக்கு முன்பாக ஒரு "காதல் தோல்வி" கவிதைத் தொகுப்பைப் புத்தகமாக வெளியிட்டு, விழா நடத்தினார் ஒருவர். "எனக்குக் காதல் தோல்வி வராமல் இருந்திருந்தால் இந்தப் புத்தகத்தை என்னால் வெளியிட்டிருக்க முடியாது" என்று பெருமை வேறு அடித்துக் கொண்டார். அடடா, என்னே ஒரு மகத்தான சாதனை! இவருடைய கவிதைத் தொகுப்பால் யாருக்கு என்ன லாபம்? கணக்கிலடங்காத இளைஞர்களின் சிந்தனையைக் கெடுத்து; அவர்களைப் படுகுழியில் தள்ளியதைத் தவிர இவர் என்னத்தைச் சாதித்தார்? மனிதன் தன்னுடைய அறியாமையை உணரமுடியாத அளவில் சாத்தானின் திரைமயக்கங்கள். இருதயங்கள் உணர்வடையட்டும்... முக்காடு விலகட்டும் என்று ஜெபிப்போம்.

மேற்சொன்ன காரியத்தைக் குறித்து நான் இப்படியாக எழுதினாலும்; அதை ஆணித்தரமாகச் சொல்ல முடியாமல் இருப்பதற்கும் சில காரணங்கள் இருக்கின்றன. இயேசுவை ஏற்றுக் கொண்டு தங்களை "விசுவாசிகள்" என்று அழைத்துக் கொள்ளும் யாவருக்கும் இது பொருந்தி வராது. காரணம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு **stage** (காலகட்டத்தில் – வளர்ச்சி விகிதத்தில்) இருப்பார்கள். சிலர் தான் இன்னும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? என்ற சந்தேகத்தில் ஓடிக் கொண்டிருப்பார்கள். சிலர் ஆரம்பக்கட்ட குழந்தை விசுவாசியாக இருப்பார்கள். இன்னும் சிலர் பரிசுத்தமாக்கப்படுதற்கென்று அழைக்கப்பட்டிருப்பார்கள். சிலரோ பெயர்க்கிறிஸ்தவர்கள்;

சபைமூப்பர் இவர்களை **point to point** கிறிஸ்தவர்கள் என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார். (அதாவது **Sunday to Sunday, Christmas service to** அடுத்த **Christmas service!** (கேட்டால்; **Christmas comes; but once in a year** என்பார்!) ஒரு சில விசுவாசிகள் விசுவாசத்தைத் துவக்கிய இயேசுவை நோக்கி ஓடி வந்து கொண்டே இருப்பார்கள்; 1%, 2%, 5%, 16%, 39% 58%, ... 62%, 64%, ... 80%, 91%, 95%, ... (100% ஐ இன்னும் ஒருவர் கூட எட்டவில்லை). இவர்களின் விசுவாச அளவின்படி, ஆவிக்குரிய உள்ளான மனிதனின் வளர்ச்சிக்கேற்ப, முதிர்ச்சிக்கேற்ப உபதேசங்கள் தேவைப்படுகின்றன. சபைக்குள்ளாக இருக்கும் இரட்சிக்கப்படாத நபர்கள் & இரட்சிப்பின் எல்லைக்குள் கால் வைத்து கொஞ்சம் நாட்களே ஆனவர்கள் கண்டிப்பாக நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்படுவதுதான் நல்லது; இல்லாவிட்டால் சாத்தான் அவர்களைத் திருடிக்கொண்டு போய்விடுவான்!

கிறிஸ்துவுக்குள் வளர்ந்து கொண்டிருப்பவர்களில் சிலர் இன்னும் குழந்தைகளாகவே இருப்பார்கள்; அவர்களுக்கு "அ, ஆ" சொல்லிக் கொடுக்க வாத்தியார் தேவை. அவர்களை கிருபை சார்ந்த விசுவாசப்பிரமாணத்திற்குள் நடத்தக் கண்டிப்பாக **teacher** (உபாத்தியாயர்) தேவை.

பரிசுத்தாவியானவர் அருளப்பட்ட பிறகு; அவர் சகல சத்தியத்திற்குள் நடத்துவார். அதனால் எது பாவம், எது சரியானது என்று அவரே உணர்த்துவதால் நியாயப்பிரமாணம் தேவையில்லைதான். ஆனால் இன்னும் சரியான இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வராத ஒரு சபையின் அங்கத்தினருக்கு எது பாவம் என்று சொல்லிக் கொடுக்கப்படாவிட்டால்; மிக ஆபத்தாச்சே! சரியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டே புதைகுழிக்குள் (சகதி நிறைந்த பள்ளம்; இதனுள் மூழ்க ஆரம்பித்தால், யாராவது காப்பாற்றினாலன்றி வெளியே வர முடியாது) மூழ்கிப் போவான். அதனால் இங்கே நியாயப்பிரமாண வாத்தியார் தேவைப்படுகிறார்.

எகிப்திய ஜனங்களை வனாந்திரத்தில் வழிநடத்தியபோது அவர்களுக்காக இயேசுகிறிஸ்து யுத்தம் செய்தார், செங்கடலைப் பிளந்தார், உலர்ந்த தரைவழியாக க(ந)டக்கப் பண்ணினார், பார்வோனின் சேனையைக் கவிழ்த்தார். ஏன்? அக்காலங்களில் இயேசு மரித்திருக்கவில்லை, பரிசுத்தாவியானவர் அருளப்பட்டிருக்கவில்லை, சர்வாயுதவர்க்கமும் இல்லை. ஆனால் இந்த சுயாதீனப்பிரமாணக் காலத்தில்; பரிசுத்தாவியானவர் போராயுதங்களை நமக்குத் தந்திருக்க; இப்போதும் இயேசுவே யுத்தம் செய்வார்; நாம் வேடிக்கை பார்ப்போம் என்றிருப்பது? தகப்பனாருக்குத் தோள்கொடுக்க வேண்டிய 25 வயது வாலிபன் இன்னும் பாட்டிலில் பாலைக்குடித்துக் கொண்டிருப்பதைப் போலிருக்குமல்லவா? அதனால் நாம் தான் யுத்தம் செய்ய வேண்டும் (பரிசுத்தாவியானவர் யுத்தக்கலைகளைச் சொல்லித் தருவார், விரல்களை யுத்தத்திற்கு பழக்குவிப்பார்; சேனைகளின் அதிபதி இயேசு முன்னே செல்லுவார்)

ஆனால் இன்னும் அபிஷேகம் பெறாதவனை; அவனே யுத்தத்தை நடத்தட்டும் என்று விட்டுவிடுவது ஆபத்தானது. 5 வயது குழந்தையின் கையில் துப்பாக்கியைக் கொடுத்தால்?

அதனால் இன்னும் நியாயப்பிரமாணம் தேவைப்படும் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள் என்பதை அறியலாம். எல்லாத்தரப்பினருக்கும் ஒரு ஊழியக்காரரே **message** (உபதேசம்) கொடுக்க முடியாது என்பதால் பலதரப்பட்ட வரங்களேந்திய பலதரப்பட்ட ஊழியர்கள் சபை வட்டாரத்தில் இயங்கி வருகிறார்கள். உபதேசங்களும் அப்படியே நபருக்கு நபர் வேறுபடுகிறது. கேட்கிற விசுவாசியின் உள்ளான மனிதனின் வளர்ச்சிக்கேற்ப; அவனுடைய ஆவியின் கூரும் செய்தியை உள்வாங்குகிறது. இதில் அடுத்தவரைச் சுட்டிக்காட்டிக் குறைசொல்ல, கோள்சொல்ல, வதந்தியைக் கிளப்ப என்ன இருக்கிறது.

அந்திகிறிஸ்துவின் வல்லமைகள் சபை நடுவே ஊடுருவி இருப்பதை இங்கே சொல்லவில்லை; அது வேறு விஷயம். கிறிஸ்துவின் ஊழியர்களை, வசனத்தைப்

போதிப்பவர்களை, வசனத்தின்படி போதிப்பவர்களை எதிர்த்து நிற்கவேண்டாம் என்று தான் சொல்லுகிறோம். தேவனோடு போர் செய்கிறவர்களாய் இராதபடி இருக்கப் பாருங்கள்.

## *தேவனுடைய வித்து:*

நாம் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வரும்போது; தேவனால் பிறக்கிறோம். பிதாவாகிய தேவன் தன் குமாரன் இயேசு கிறிஸ்துவை ஒரு விதையைப் போல நம் இருதயத்தில் புதைத்து வைக்கும் உன்னத அனுபவம் அது.

*"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். 1 யோவான் 3:9*

விதை வளர ஆரம்பிக்கிறது. நாம் கிறிஸ்துவில் வளர வளர நாம் அவரைப் போலவே மாற வேண்டும்; அதாவது அவரைப் போலவே பாவமில்லாமல் வாழ்ந்துகாட்ட வேண்டும், அதுதான் தேவனுடைய வித்தின் விளைச்சல். ஆனால் அப்படி வாழமுடியாமல்; தேவனால் பிறந்திருக்கிறோம் என்று சொல்பவர்களும் பாவத்திலேயே வாழ்கிற காரணம் என்ன? விதையில் பிரச்சனை இல்லை; ஏனென்றால் அது தேவனுடைய வித்து (இயேசு). ஆனால் வளர விடாதபடி நெருக்கியடிக்கும் உலகக்கவலை, ஐசுவரியத்தின் மயக்கம் என்ற முட்செடிகள் (மத். 13:22).

ஐசுவரியத்தின் மயக்கம் (அதாவது பண ஆசை) ஏன் வருகிறதென்றால்; பொருளாதார பிரச்சனை (வறுமை) தான் காரணம். கூட்டிக் கழித்துப் பார்த்தால் கடைசியில் வறுமையே நாம் பாவம் செய்வதற்கான மூலகாரணமாகிவிடுவதைப் பார்க்கிறோம்.

இதனால்தான் நாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் பாவமில்லாமல் பரிசுத்த ஜீவியம் செய்ய வேண்டுமானால் நாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும். இயேசு (ஜீவனுள்ள தேவவசனமாகிய அழிவில்லாத வித்து) நம்மில் வளர முடியாதபடி தடை செய்யும் முட்செடிகளை வெட்டிப் போடுவோம்.

*அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. 1 பேதுரு 1:23.*

"ஜெனிப்பித்தல்" என்ற வார்த்தையைக் கவனிக்கும்போது; பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனாகிய இயேசுவைப் பெற்றெடுக்கும்போது (ஜெனிப்பிக்கும்போது) உபயோகித்த **(formula)** சூத்திரத்தையே நம்மை இரட்சிப்பின் அனுபவத்திற்குள் நடத்தும்போதும் உபயோகிப்பதைப் பார்க்கலாம். அதாவது நாம் தன் குமாரன் இயேசுவைப் போலவே பாவமில்லாமல் வாழ வேண்டும் என்பதற்காகவே நம்மைத் தன்னுடைய வார்த்தையினால் (வார்த்தைதான் வசனம் – வசனம்தான் இயேசு) ஜெனிப்பிக்கிறார். அதாவது நம்மைப் பெற்றெடுக்கிறார். அதனால் நாம் தைரியமாக அவரை அப்பா(ம்மா!) என்று கூப்பிடுவோம்.

*நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, அப். 13:32.*

*உன்னை ஜெநிப்பித்தக் கன்மலையை நீ நினையாமற் போனாய்; உன்னைப் பெற்ற தேவனை மறந்தாய். உபா. 32:18.*

நம் தேவன் பெரியவர் என்று மிக எளிதாகச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறோம். அவர் எவ்வளவு பெரியவர் என்பதை அளந்து பார்க்க ஏதாவது அளவுகோல் **'scale'** இருக்கிறதா? இருக்கிறது, கொண்டு வருகிறேன் பார்த்துக்கொள்ளுங்கள்.

*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. ... அறிவைத் தெரிவிக்கிறது ... அவைகளின் சத்தம்*

*பூமியெங்கும் ... செல்லுகிறது... (சங். 19:1,2,4)*

வேதத்தில் உள்ள வசனங்கள் அனைத்தும் (ஆதி. 1:1 முதல் வெளி. 22:21 வரை) கோதுமை மணிகள்தான். அதில் எந்த வசனத்தை எடுத்து விதைத்தாலும் அது முளைக்கும், முளைப்பதுடன் நிற்காது வளர்ந்து பயிராகும். அதை விளையச் செய்யும் நிலம் மனிதர்களின் இருதயம் (ஆவியை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் ஆத்துமா). அந்தப்படியே சங். 19:1,2,4 ஐ எடுத்து விதைத்த போது...

தேவனுடைய பார்வையில் தூசி போன்றதான நாம் வாழும் உலகத்திற்கு ஒரு சூரியன், சந்திரன், சில (100 Nos.) நட்சத்திரங்கள் இருந்தாலே போதும். அப்படியிருக்க தேவன் கணக்கில்லாத மணலத்தனையான நட்சத்திரங்களை ஏன் படைக்க வேண்டும்? (22 Sextillion - 22க்குப் பிறகு 40 சைபர்கள் போட வேண்டும். – இது முதல் கட்ட கணக்கீடுதான்; நட்சத்திரங்களின் எண்ணிக்கையைக் கணக்கிடவே முடியாது என்று முடிவில் அறிவித்து விட்டார்கள்.)

தான் எவ்வளவு பெரியவர் என்பதை மக்களுக்குப் புரிய வைப்பதற்கு வெறும் வார்த்தைகள் போதாது! (எனக்குப் பேச வார்த்தைகளே வரலை என்று சிலர் தங்களுடைய சோக அல்லது சந்தோஷ காலக் கட்டங்களில் புலம்புவார்கள். அதாவது நமக்கே வார்த்தைகள் வராத, வார்த்தைகளே கிடைக்காத சூழ்நிலை வருகிறதென்றால்...) அதனால் அதற்கு ஒரு அளவீட்டுக் குறி போல (Scale) தன்னுடைய மகிமையை, அளவை, தான் எவ்வளவு பெரியவர் என்பதை நமக்குப் புரிய வைக்க, தான் படைத்த அண்டவெளியைச் சுட்டிக் காட்டுகிறார்.

அண்டவெளியின் மகத்துவங்களை ஆராய்ச்சி செய்து உலகத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் பெரும்பான்மையானவர்கள் தேவனை அறியாதவர்கள்தான்! ஆச்சரியம் என்னவென்றால்; தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை நமக்குச் சொல்கிறார்கள், ஆனால் அவர்களோ அவரை அறியாமலிருக்கிறார்கள்! நம்முடைய தேவனுடைய ஞானத்தைக் கவனியுங்கள், தன்னைப் புறக்கணிப்பவர்களை வைத்தே தன்னுடைய மகத்துவங்களைச் சொல்ல வைக்கிறார்!

## *ஆவிக்குரிய கண்களின் கிட்டப்பார்வை:*

தேவனுடைய மகத்துவம் தெரிந்தால்தான்; அவருடைய புதிய உடன்படிக்கையின் மகத்துவமும் புரியும். கண்ணாடியைக் கழற்றிவிட்டால் கிட்டப்பார்வையுள்ள ஆளுக்கு எதுவுமே சரியாகத் தெரிவதில்லை. அவர் எதைப் பார்க்கிறார், எப்படிப் பார்க்கிறார் என்பது பற்றி சரியான பார்வையுள்ளவர்களுக்கு எதுவும் தெரிவதில்லை.

கிட்டப்பார்வையுள்ளவருக்கு எதுவும் தெளிவற்றுப் பூசினாற்போல தெரியும். ஒரு மரத்தில் இலைகள், கொப்புகள் எதுவும் தனித்தனியாகத் தெரியாமல் ஒரே பச்சையாகத் தெரியும். ஆட்களின் முகங்கள் இளமையுடனும் கவர்ச்சியுடனும் தெரியும்; 20 வயது வரை கூட குறைவாகச் சொல்லுவார்! 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ரஷ்ய கவிஞர் “டெல்விக்” இப்படியாக எழுதியிருந்தார்: “லீஸேய் ஸ்கூலில் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ள அனுமதி கிடையாது. பார்ப்பவர்கள் எல்லோரும் மிக அழகாகவும், நேர்த்தியாகவும் காட்சியளித்தார்கள், படிப்பு முடிந்ததும் (மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டதும்) நான் எவ்வளவு அதிர்ச்சியடைந்தேன் தெரியுமா?” பள்ளிக்கூடத்தில் அவருக்குக் கண்ணாடி போட்டுக்கொள்ளும் அனுமதி கிடைத்திருந்தால்; அவரால் இவ்வளவு அழகான கவிதைகள் எழுதியிருந்திருக்க முடியாது! ஒரு பிரபலமான கவிதைத் தொகுப்பு (miss) நழுவிப் போயிருக்கும்.

உங்களுடைய கிட்டப்பார்வை நண்பர் உங்களுடன் பேசும்போது; உங்கள் முகத்தில் அவர் எதைப்பார்ப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களோ அதை அவர் பார்ப்பதில்லை. உங்கள்

பிம்பம் அவருக்குத் தெளிவாகத் தெரியாததினால் ஒரு மணிநேரம் கழித்தும் கூட அவர் உங்களை அடையாளம் கண்டு கொள்ளாமல் பேசிக் கொண்டேயிருப்பார். அப்படியே கண்டுபிடித்தாலும் அது உங்கள் உருவத்தைப் பார்த்து அல்ல, உங்கள் குரலைக் கொண்டுதான்!

இரவில் எப்படிப் பார்ப்பார்? தெருவிளக்குகள் வரிசையாகத் தெரியாமல் இரண்டு மூன்று வெளிச்சத் திட்டுகள் மாத்திரமே தெரியும். அது தெருவின் மற்ற பகுதிகளை மறைத்து விடும். தன்னை நோக்கி வரும் காரைக்கூட அவரால் கண்டுகொள்ள முடியாது. வானத்தில்? சில நூறு நட்சத்திரங்களை மட்டுமே பார்ப்பார்; அதுவும் விளக்குகளைப் போல, பெரிதாகத் தோன்றும். நிலாவோ மிகப் பிரமாண்டமாக, மிக அருகில் இருப்பதாகத் தெரியும்.

காரணம்? இவர்களின் விழிக்கோளம் நீண்டதாகி விடுகிறது. அதனால் மாறுபட்ட ஒளிவிலக்கத் திறனின் காரணமாக, தூரத்தில் உள்ள பொருள்களின் பிம்பங்கள் விழித்திரையை அடையும் முன்னதாகவே குவிந்து விடுகிறது. விரிந்து செல்லும் ஒளிக்கற்றைகளினால் விழித்திரை மீது தெளிவற்ற பிம்பங்கள் உண்டாக்கப்படுகின்றன.

சிறு வயதில் **Sunday School, VBS-ல்** கேட்ட நோவா தாத்தா கதை, தானியேல், யோசேப்பு, தாவீது கதைகள் இன்னும் வேதத்தில் வரும் பல பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் கதைகள் மிகவும் நன்றாக இருப்பதால் மிகவும் பிடித்துப் போக அதை மனதில் பதித்துக் கொள்கிறோம். அப்போது அவற்றின் அர்த்தத்தை நாம் அறிந்திருப்பதில்லை.

எபிரேயர்.11:1–39 வரை வாசித்து அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு ஆச்சரியப்படுகிறோம், மெச்சிக்கொள்கிறோம், அவர்களைப் போலவே விசுவாச முயற்சிகளையும் எடுக்கிறோம், ஓரளவுக்கு அதில் வெற்றியும் கிடைப்பதைப் போலத் தோன்றுகிறது. என்றாலும்...

நம்முடைய விசுவாச ஓட்டப்பாதையில் சரியாக ஓட முடியாமல் விழுந்து எழுந்து, விழுந்து எழுந்து ஓடுவதற்கு என்ன காரணம்? பாரம்பரிய சபை ஆவியானவரின் நடத்துதல் இல்லையென்று எங்கோ ஒரு சுவிசேஷ கூட்டத்திற்குப் பஸ் பிடித்துப் போகிறோம். பெந்தேகோஸ்தே சபையிலும் நாம் எதிர்பார்த்த அக்கினி அனுபவங்கள் கிடைக்காததால் அடுத்த சபைக்கு ஓடுகிறோம், அங்கே மூப்பருடன் ஏதோ பிரச்சனையாகிவிடுகிறது. இனி என்ன செய்வது?

தெளிவான வழி தெரியாததினால் இன்னொரு சபைக்கு, பிறகு? அடுத்த இன்னொரு சபைக்கு, அதற்குப் பிறகு? அதற்கடுத்த இன்னொரு சபைக்கு! இப்படியாக தவளைகளாக மாறி... அந்தோ பரிதாபம்! முதலை வருகிறது என்று கரையேறி வெளியே ஓடி வந்தால் அங்கே கரடி! அதற்குப் பயந்து மரத்தில் ஏறினால் அதன் கிளையில் வேங்கைப் புலி! வேகமாக குதித்து சமவெளியில் ஓட, அங்கேயும் புலி துரத்துகிறது. அதோ தெரிகிறதே ஒரு குகை அதற்குள்ளாக ஒளிந்து கொள்ளலாம் என்று உள்ளே ஓடினால் ... ஒரு மாதமாக சாப்பாடில்லாமல் கிடந்த ஒரு கிழட்டுச் சிங்கம் உறுமியபடி எழுந்து நிற்கிறது!

தவளைகள் இருந்தால் தவளையைப் பிடிப்பவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களுக்கும் வேறு வழி தெரியவில்லை; இவர்கள், அவர்களை மீன்களைப் பிடிக்க (ஆத்துமாக்களை) விட்டால்தானே! இது என்ன, என்னதான் நடக்கிறது இங்கே?

எபிரேயர் 11:40 ஆம் வசனத்தை மட்டும் வாசிக்காமல் விட்டுவிட்டதால்! நமக்கென்று விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று நியமித்திருந்தும் அதைப் பார்த்து, அறிந்து எடுத்துக் கொள்ளாமல் அவர்களைப் பூரணராக முடியாதபடி செய்த அந்த பிரமாணத்துக்குள்ளாகவே பின்னோக்கிச் சென்றோம்; பூரணம் அடையாமல் போனோம்.

அந்த விசேஷித்த நன்மைகள் எதுவெல்லாம்?அதைப் பெற்றுக் கொள்ள என்னவெல்லாம் செய்யலாம்?

எனக்குக் கிடைத்த வெளிச்சத்தில் சில வசனங்களின் சத்தியத்தை எனக்கு

ஆவியானவர் வெளிப்படுத்தியதை மட்டும் சொல்லுகிறேன். மீதியான காரியங்களை இதே அலைவரிசையில் உள்ள வேறு சில ஊழியர்கள் தெரிவிப்பார்கள்.

*தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபே. 1:19)*

அந்த "மகா மேன்மையான மகத்துவம்" தான் "சுயாதீனப்பிரமாணம்" என்று அறிகிறோம்.

*சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். (யாக். 1:25)*

அந்த சுயாதீனப்பிரமாணத்தை உற்றுப்பார்க்க, நம் உள்ளான மனுஷனுக்கு இதுவரை இருந்த கண்களினால் முடியவில்லை. அது பார்வை மங்கிப் போயிருக்கலாம், அல்லது குருடாக்கப்பட்டிருக்கலாம். அதனால் இப்போது "பிரகாசமுள்ள மனக்கண்கள்" தேவைப்படுகிறது. ஜெபிக்கும்போது பிரகாசமுள்ள மனக்கண்கள் கிடைக்கிறது.

அந்தப் பிரகாசமுள்ள மனக்கண்களால் வசனங்களை வாசிக்கும் போது; பூரணப்பிரமாணத்தின் ஆசீர்வாதங்கள் நம் கண்களுக்குத் தெரிகிறது.

*... நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோமர்.8:26)*

நம் ஜெப நேரத்தைப் பரிசுத்தாவியானவரிடம் விட்டுக்கொடுத்துவிட வேண்டும். அவருடைய ஜெபம் மிகச் சரியாக இருக்கும் என்பதால், பிறகு எதைப்பற்றியுமே நாம் யோசிக்க வேண்டியதில்லை.

*...தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபே. 3:19)*

தேவனுடைய பரலோக சொத்து எல்லாமே இயேசுவின் மூலமாக நமக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது. இந்த சத்தியத்தை அறிந்துகொண்டால்தான் அதை நாம் பெற்றுக் கொள்ள முடியும். அதில் ஐசுவரியமும் ஒன்று. நம்மால் அறியப்படாத சத்தியத்தால் நமக்கு எதுவும் செய்ய முடியாது. மறைபொருளாகவே இருக்கும் சத்தியத்தால் யாருக்கு என்ன லாபம்?

ஒரு குடம் நிறைய தங்கக் காசுகள் புதையலாக (சிறுவர்களின் அம்புலிமாமா கதையில்) ஓர் ஏழை விவசாயியின் வயலில் 5 அடிக்குக் கீழாக 100 வருஷங்களாக மறைந்து இருக்கிறது, என்ன பிரயோஜனம்? அதைத் தோண்டி எடுத்து வெளியே கொண்டு வந்தால்தானே அவன் பணக்காரனாகலாம்? சத்தியத்தை அறிந்து கொள்வோம்.

எது சத்தியம்? வேத வசனம்தான்! வசனம் தான் இயேசு!! (யோ.14:6) ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோவான் 1:1)

நம்முடைய கற்பனை கனவுக் கோட்டையையே மிஞ்சிவிடும், தேவன் தரும் ஆசீர்வாதம்!

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, (எபே.3:20) "அந்த வல்லமையை" அவரைவிட்டு வெளியே கொண்டு வரவேண்டும்; நம்முடைய

விசுவாசத்தால். அது எப்படி? பெரும்பாடுள்ள பெண் இயேசுவை விசுவாசத்துடன் தொட்டு சுகம் பெற்றதைப் போல.

தேவன் நம்மை அழைத்தது நம்மைப் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். அப்படி நாம் பெற்றுக்கொண்டோமானால்; அதற்குப் பிறகு தேவனுடைய சித்தம் மாத்திரமே செய்வோம்; நம்முடைய விசுவாசமும் முழுமையடையும், இதற்காகவும் ஜெபிக்க வேண்டும்.

பரிசுத்த பவுல் "வேண்டிக் கொள்ளுகிறோம்" என்று தன்னுடைய நிருபங்களில் பல இடங்களில் ஜெபிப்பார்; அந்த வசனங்களையெல்லாம் தியானிக்கலாம்.

*...சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன். (2கொரி. 11:3)*

சாத்தான் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியாதபடி நம் கண்களை மறைக்கப் பார்ப்பான், அவனுக்கு இடம் கொடாதிருப்போம்.

*புத்தியில்லாத கலாத்தியரே, ...சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. (கலா.3:1)*

சத்தியத்தை மறைத்தது சாத்தான்தான்; அந்த ஊழியக்காரரோ, இந்த ஊழியக்காரரோ இல்லை. தேவனை அறிந்து கொண்டு; அவரோடு அதிக நேரம் தனித்திருக்கும் மனிதனை யாரும் ஏமாற்றிவிட முடியாது.

*நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். (ஏசா. 1:19)*

வசனத்தோடு மனதைப் பொருத்தாவிட்டால்; அந்த வசனம் உங்களுக்குப் பிரயோஜனப்படாது; தேசத்தின் நன்மைகளை நம் கண்களுக்கு முன்பாகவே சாத்தான் சுரண்டுவதைப் பார்த்துக் கொண்டு, ஒன்றும் செய்ய முடியாமல் கையைப் பிசைய வேண்டியதிருக்கும்.

தேவனை அறியாத ஜனங்கள் நன்றாக வாழ்ந்திருப்பதைப் பார்க்கும் தேவ பிள்ளைகளுக்கு ஏகப்பட்ட ("?") வினாக்கள்! "அவனுக்கென்ன நன்றாகத்தானே இருக்கிறான்? நல்லது செய்கிறவர்களுக்குத்தான் காலமில்லை" என்று நினைப்பது, பேசுவது மிகச் சகஜமாக இருக்கிறது. அது ஏன் அப்படி நடக்கிறது என்பது புரிவதில்லை.

தேவனை அறியாத சன்மார்க்கவாதிகள் (பெரிய அளவில் வெளிப்படையான பாவம் எதுவும் செய்யாதவர்கள்) அநியாயத்தில் அக்கிரமத்தில் பாவத்தில் வாழ்பவர்கள்; அப்படிப்பட்ட சுகபோக வாழ்க்கையைப் பெற்றுக்கொண்டதற்கு நாம்தானே மறைமுகக் காரணமாக இருந்தோம்! (?)

பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது, நாம் அவருடைய சொந்தப் பிள்ளைகள், அவருடைய சொத்துக்களுக்கு உரிமையாளர்கள். அறியாமையினால், சத்தியத்தை அறியாததினால், கண்ணாடியைப் போட்டுக் கொள்ளாததினால் தொலைத்துவிட்டு நிற்கிறோம். நம்முடைய அறியாமையைச் சாத்தான் சரியானவிதத்தில் பயன்படுத்தி; தன்னுடைய இராஜ்ஜியத்தின் புத்திரர்களுக்குக் கொடுத்து விட்டான். அவர்களும் அவனைப் பணிந்து கொண்டு ஒழுங்கும் கிரமமுமாக அவனை அவனுடைய சட்டதிட்டங்களுக்குட்பட்டு ஆராதித்து வருவதனால் அவர்களுடைய உலக ஐசுவரிய வாழ்வு கொஞ்சகாலம் நீடிக்கிறது அவ்வளவுதான். அவன் புல்லின் பூவைப்போல வாடிப்போவான் என்றால் அதை யாரும் நம்புவதில்லை.

உலக ஐசுவரியவான்களின் முடிவைப் பற்றி வேதம் எச்சரிக்கும் காரியங்களை அதிகமாகக் கண்களால் காண முடியாமல் போவதற்குக் காரணம் மனிதன் சொற்ப கால ஆயுசுதான் காரணம். ஆரோக்கியமாக இருந்தால் 60, 70 வயசு; பலத்தின் மிகுதியால் 80, 90 வயசு. இந்தக் காலக் கட்டத்தில் யாரும் இவர்களை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருப்பதில்லை. ஆனால் தரிசனம் பெற்றவர்கள் இதைக் கவனித்துவிடுகிறார்கள்!

“கிட்டப்பார்வை” யினால் கஷ்டப்பட்டோம், கண் மருத்துவர் கண்ணைப் பரிசோதித்து, மருத்துவம் பார்த்து, கண்ணாடியையும் கொடுத்திருக்கிறார்! கண்ணாடியைக் கழட்டி மேஜை மேலே வைத்துவிட்டு வேதத்தை வாசித்தால்...? ஒரு சிலர் கண்ணாடியை வாங்கிக் கொள்ளவே இல்லை, சிலர் கண்ணாடியைத் தொலைத்து விட்டார்கள்!

கண்ணாடி போட்டுக்கொண்ட பிறகு கிடைத்த காட்சிகள் அதிர்ச்சிக்குரியவைகள்தான்! அதற்கு என்ன செய்வது? அதுதானே உண்மை!

புதிய ரசம் கிடைத்த பிறகும் “பழைய ரசமே போதும்” என்று திருப்தியோடு ஓடுகிறோம்; நம் ஆசையெல்லாம் நிராசையாகிப் போகிறது. ஏன்? சத்தியத்தை அறியாததினால்.

கானாவூர் கல்யாணவீட்டு அற்புதத்தில் பழைய இரசத்தைவிடப் புதிய ரசம் நன்றாக இருப்பதைப் பார்க்கிறோம். (யோவா. 2:10) பழைய இரசமே பழகிப்போய்விட்டது; அந்த ருசி பிடித்துப்போய்விட்டது. யோபைப் போல அழுகிறார்கள், தாவீதைப் போல பயந்து ஓடிக்கொண்டேயிருக்கிறார்கள், சாலமோனைப் போல (பிரசங்கி) விரக்தியின் உச்சகட்டத்திற்கே போய் விடுகிறார்கள், எரேமியாவைப் போல ஒரே புலம்பல்!, இதெல்லாம் சரியான காரியங்கள் தான் என்று நினைக்கிறார்கள். அதுவே போதுமென்றால்; பழைய உடன்படிக்கையே பரிபூரணப்படுத்துமென்றால், புதிய உடன்படிக்கையை எழுத இயேசு வந்திருக்க வேண்டியதே இல்லையே! “மல்கியா”வுடன் உலகத்தை முடித்து; அல்லது அதையே தொடர்ச்சியாக வைத்திருக்கலாமே! ஆனால் அந்தப் பழைய உடன்படிக்கையின் காரியங்கள் நித்தியஜீவனுக்கான வழியைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதால்தான், புதிய உடன்படிக்கையின் மூலம் பரலோக வாசலாக இயேசுவை ஏற்படுத்த வேண்டியதிருந்தது.

பழைய உடன்படிக்கை உருவழிந்து இல்லாமல் போகும் காலமும் சமீபித்து வருகிறது.

ஒரு செய்தியோ அல்லது பாடலோ பதியப்பட்ட **Video Cassette, CD**-ல் வேறு ஒரு செய்தியைப் பதிவு செய்யும்போது; முன்பு பதிவான செய்திகள் அழிக்கப்பட்டுவிடும், **open** ஆகாது. இவ்விதமாகக் குறைவுகளோடு இருந்த பழைய உடன்படிக்கை மாற்றப்பட்டது.

பூமி உருண்டை என்று அறியப்படாத அக்காலங்களில் மனிதர்கள் பூமியைத் தட்டையாக இருப்பதாக நினைத்திருந்தனர். அதன் முடிவுப்பகுதி ஆபத்தானது என்றும் கற்பனை செய்து வைத்திருந்தனர்.

ஆனால் கலிலியோவின் “உலகம் உருண்டையானது” என்ற திடீர் அறிவிப்பு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மனதில்லை. பூமி சதுரமாக தகடு போல அந்தரத்தில் மிதந்து கொண்டிருக்கிறது; என்று இது வரை நினைத்திருந்த கற்பனையைத் திடீரென்று மாற்றிக்கொள்ள யாரும் தயாராக இல்லை. பிரச்சனை கலிலியோவின் உயிருடன் முடிந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உலகம் உண்மையை (சத்தியத்தை) ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தது, பழையதை மறந்து போனது.

இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பின்பு உண்டான புதிய உடன்படிக்கையின் சத்தியங்களை ஏற்றுக் கொள்வதிலும் இதேவிதமான பிரச்சனைகள் முடியாமல் ஜவ்வாக நீண்டு போய்க்கொண்டே இருக்கிறது.

*... நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று*

*இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது.*

*அசட்டைக்காரரே, ... பிரமித்து அழிந்து போங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் ... விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி ... நேரிடாதபடி எச்சரிக்கையாயிருங்கள். (அப்.13:39,41)*

சத்தியத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று பிடிவாதம் பிடிக்காதபடி எச்சரிக்கையாய் இருப்போம். பழைய காரியங்கள் நன்றாகத்தான் இருந்தது, சதுர சதுரமாக அண்டவெளியில் இராசிகள் பறந்துகொண்டிருப்பதைப் போன்ற கற்பனை **(imagination)** நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அது நிஜமில்லையே!

சத்தியத்திற்குப் புறம்பான காரியங்கள் அல்லது புறம்பாக்கப்பட்ட காரியங்கள் நன்றாக இருக்கிறது என்பதற்காக அந்தக் கனவுலகிலேயே சஞ்சரிப்பது எத்தனை காலத்துக்கு தாக்குப்பிடிக்கும்? கனவுக்கோட்டை மிகப் பலவீனமானது; அது ஒரு நாள் நிச்சயம் சரிந்து விழும், அப்போது நிஜம் நிதர்சனமாக முன்னே நின்று கொண்டிருக்கும்! (இயேசுவின் வருகை) இந்தப் பயங்கரம் நம்மைப் பிடித்துக்கொள்ளுமுன் எச்சரிப்பின் வசனத்திற்குச் செவிகொடுப்போம்!

ஆவிக்குரிய உலகத்தில் நவீன கலிலியோக்கள் கப்பலின் பாய்மரத்தைக் கவனித்து ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களின் ஆராய்ச்சியின் முடிவை அசட்டை பண்ணாதிருப்போம்! கர்த்தர் நிச்சயம் எல்லோரையும் சத்தியத்தை அறியும் அறிவின் பாதையில் நடத்துவார், அல்லேலூயா!

நான் சத்தியத்தை அறிந்து கொள்ள ஆரம்பித்தபோது, அதை ஆணித்தரமாக எழுத முற்பட்டபோது எனக்கு கொஞ்சம் தயக்கமாக, யோசனையாக இருந்தது. ஏனென்றால் விதைகள் புத்தகங்களில் நான் இதுவரை எழுதியிருக்கும் சில விஷயங்கள் மீது தொடர்ச்சியாக நான் எழுதும் காரியங்களே தாக்குதலை ஏற்படுத்தக் கூடும். அதற்காக எனக்கு ஆவியானவர் வெளிப்படுத்தியதை நான் அறிவிக்காமலிருக்கக்கூடாதே!

நான் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவளாகவே எழுதிக்கொண்டே போய்க்கொண்டிருப்பேனானால் நான் தேவனுடைய ஊழியக்காரியாக நிலைத்திருப்பது எப்படி? விதைகள் பகுதி 1—ஐ எழுதி முடித்துவிட்டு, வாசித்துப் பார்த்துவிட்டு எனக்குத் திருப்தியில்லாதிருந்தது. என்றாலும் "பரிசுத்தாவியானவரின் ஆலோசனையின்படி (நியா. 6:14) தொடர்ந்து எழுத ஆரம்பித்தேன்.

அப்போது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து; உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்."

மீதியானியர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிராக என்ன செய்தார்கள்? வசனங்களைக் கவனிப்போம்.

*இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும்போது, மீதியானியரும் ... அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து; நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, ... தேசத்தைக் கெடுத்துவிட அதிலே வருவார்கள். (நியா. 6:3,4,5)*

இப்போது புரிந்திருக்கும். தேவ ஜனங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல்; அவர்களின் விளைச்சலைக் கெடுக்கும் வண்ணமாகச் செயல்படும் சாத்தானின் (மீதியானியர்) வல்லமைகளுக்கு எதிராகவே இந்தத் தரிசனம் டிஜிட்டல் புத்தக உருவத்தில் வந்துகொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் அச்சுப்பிரதியாகவும் வெளிவரும் என கிறிஸ்துவுக்குள் விசுவாசிக்கிறேன்.

எழுத எழுத சத்தியத்தை இன்னும் அதிகமதிகமாக அறிந்து கொள்ள ஆவியானவர் வெளிச்சம் தந்தார். என்னைத் திருத்துவதற்கு இடம் கொடுத்தேன். இன்னும் கூடத் திருத்தங்கள் வரலாம். அது பரிசுத்தாவியானவரின் நடத்துதலின்படி இருக்கும்.

பழைய உடன்படிக்கை உருவழிந்து போனாலும்; அதையும் அழிக்காமல் பரிசுத்தாவியானவர் சேர்த்துத்தான் கையில் கொடுத்திருக்கிறார். புதிய ஏற்பாட்டை மாத்திரம் தரவில்லை; அதைவிட 3 மடங்கு பெரிதான பழைய ஏற்பாடு அதோடு ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது. இந்தக்காரியத்தை மனதில் வைத்துக்கொண்டு நானும், எழுதிய எதையும் (delete) அழித்துவிடவில்லை.

புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டை நாம் வாசிப்பது போலவே இதுவும் இருக்கட்டும். வேத வியாக்கியான புத்தகங்களில் வேதத்தின் சாயல் கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது பரிபூரணப்படும்.

கீழே விழுந்தால் என்ன? மீசையில் மண் ஒட்டினால்தான் என்ன? தூசியை உதறிவிட்டு எழுந்திரு! கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

## *ஆபத்தான எல்லைகள்:*

தேவனுடைய ஜனங்களுக்கு எதிராக; அதிலும் குறிப்பாக வாலிபப்பிள்ளைகளுக்கு எதிராக சாத்தானுடைய தாக்கம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. யாரை விழுங்கலாம்? பாவத்தில் விழ வைக்கலாம்? கொல்லலாம்? என்ற திட்டங்களுடன் சுற்றித்திரிகிறான். ஜெபிக்காமல், தூங்கிவிழும் நேரத்தில் களைகளை விதைத்துவிட்டுப் போய்விடுகிறான். அது வளர்கிறது; நமக்குள் விதைக்கப்பட்டிருக்கும் கோதுமை மணிகளைக் கெடுக்கிறது, விளைச்சலைத் தடுக்கிறது.

சாத்தானுடைய நூதன அணுகுமுறைகளைத் தெரிந்துகொள்ள அவனுடைய எல்லைகளுக்குள்ளேயே கால் வைப்பவர்களைப் பார்த்திருப்போம்; நானும் சிலவேளை அவ்வாறு முயற்சித்ததுண்டு.

*முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை. ... இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே. (பிர. 1:9,10)*

சாத்தானுடைய கோட்டைக்குள் நுழைவதால் அவனைப் பற்றிய புதிய காரியங்களை சேகரிக்கலாம் என்று போகின்றவர்களுக்கு எப்போதும் சூழ்நிலை அனுகூலமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை.

வசனத்தைக் கவனிப்போம்; புதியதாக சாத்தான் எதையும் செய்யப்போவதில்லை. தான் உருவாக்கிய பழைய பாவ பழக்கவழக்கங்களுக்குப் புதிய வர்ணம் (paint) அடிப்பான், பளப்பளப்பாக்குவான். பாவத்தை நடைமுறை (casual) ஆக்கச் சொல்லிக் கொடுப்பான். “இதெல்லாம் பாவமாகாது, பலவீனம்தான்” என்று சொல்லிக்கொடுப்பான். “சிறிய பொய் பாவமாகாது” என்பான். “முன்கோபம் என்பது அவருடைய இயல்பு; அது பாவமல்ல” என்பான்.

சாத்தானின் காரியங்கள் இப்போது எந்த அளவில் இருக்கிறது என்று பார்க்கிறேன் என்று சிலர் தான் விட்டிருந்த விஷயத்திற்குள் திரும்பவும் போவார்கள். சினிமா, சீரியல் (serial) பார்ப்பது, உலக வழக்கில் உள்ள புத்தகங்கள் வாசிப்பது, (இன்றைக்கு செய்தித்தாளைக் கூட முன்னெச்சரிக்கையுடன்தான் வாசிக்க வேண்டியதாயிருக்கிறது), உலகப் பாவங்களில் இருக்கும் பழைய நண்பர்களின் எல்லைகளுக்குள் பிரவேசிப்பது, இப்படிப் பல காரியங்களைச் சொல்லலாம். இப்படிச் சென்றவர்கள் சிலர் சாத்தானின் பிடியில் திரும்ப அகப்பட்டதும் உண்டு. இதுவாவது பரவாயில்லை; சபைக்குள் இருக்கும் சகோதரன் ஒருவன் தவறு செய்துவிட்டால்; அவனைத் திருத்தும் முயற்சியில் கூட அதிக கவனத்துடன் செயல்படச் சொல்லி பவுல் கலாத்திய சபையினருக்கு எச்சரிப்புக் கொடுப்பதைப் பார்க்கமுடிகிறது.

*... ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ... அப்படிப்பட்டவனை சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. (கலா. 6:1)*

பிசாசின் எல்லைகளுக்குள் கால்வைத்துவிட்டு; அவனிடம் மாட்டிக்கொண்டு முழிப்பதைவிட, அவனை நம் பொறிக்குள் சிக்க வைப்பது நல்லது, பாதுகாப்பானதும்கூட.

...அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. (2 கொரி. 2:11). அதாவது சாத்தானின் தந்திரத்தைப் பற்றி வேதமே நமக்குச் சொல்லித் தந்திருக்க, நாம் அவனைத் தேடிப் போய் நேரத்தை வீணடிக்க வேண்டியதில்லை.

*...பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். (1 பேதுரு 5:8,9)*

அக்கால இராணுவத்தினர் பெரிஸ்கோப் **(Periscope)** என்ற கருவியைப் பயன்படுத்தினர். (இக்காலத்தைப் போல அக்காலங்களின் தொலைநோக்கி வசதிகள் இல்லை). என்றாலும் இந்த இயந்திரத்தின் அமைப்பு அதிக சூட்சுமமானது.

இரண்டு சிறிய கண்ணாடிகள் 45 டிகிரி கோணத்தில் சரித்து வைக்கப்பட்டிருக்கும். பொருளிலிருந்து வரும் கதிர்கள் இந்த ஆடிகளின் மீது பட்டு பிரதிபலிக்கச் செய்கிறது. இவ்விதமாக பிரதிபலிக்கப்பட்ட பிம்பம் ஒளி புகாத் தடைகளைக் கடந்து சுற்றிச் செல்லுகின்றன. எதிரியின் தாக்குதலுக்கு இலக்காகாதபடி மறைந்து இருந்துகொண்டு; அதே நேரத்தில் எதிரியின் அசைவுகளைக் கவனிக்க இந்தக் கருவி பேருதவியாக இருந்தது. 20 மீட்டர் உயரம் வரையில் இந்த பெரிஸ்கோப்புகளை அமைக்க முடியும். விஞ்ஞான முன்னேற்றம் இல்லாத அக்காலங்களில் இது பெரிய விஷயம்.

2 கொரி. 2:11 பவுல் சாத்தானாலே மோசம் போகாதபடிக்கு அப்படி என்னதான் செய்தார்? அவனுடைய எல்லைகளுக்கு நுழையாமலேயே அவனைத் தோற்கடிக்க ஒரு ஆலோசனை சொன்னார் சபையினருக்கு. அதாவது சபைக்குள் இருந்த ஒரு விசுவாசி மிக மோசமான ஒரு பாவத்தில் சிக்கிக் கொள்கிறான். பவுல் அவனை சபையைவிட்டு விலக்கி வைக்கும்படி ஆலோசனை கொடுக்கிறார். என்றாலும் அவன் தன்னுடைய வேதனையில் அமிழ்ந்து போகாதபடி அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யும்படி மறு ஆலோசனை கொடுக்கிறார். அந்த மனிதனை மன்னிக்காமல் ஒடிக்கொண்டேயிருந்தோமானால் அது சாத்தானுக்கு வசதியாகிவிடும். மன்னிக்கும் மனதில்லாதவனை தேவன் எப்படி மன்னிப்பார்? தேவன் மன்னிக்காத நபரை சாத்தான் அதிகமாகத் தாக்குவான், பிறகு அவனுடைய நிலைமை மிக மோசமாகப்போய்விடும்.

நீர்மூழ்கிக் கப்பல்களின் கேப்டன்கள் எதிரிக் கப்பல்களை கண்காணிக்க இதே அமைப்புள்ள பெரிஸ்கோப்புகளைப் பயன்படுத்துகின்றனர். கப்பல் நீருக்குள் மூழ்கியிருக்கும்போது, இது நீருக்கு மேலாக வெளியே நீண்டிருக்கும். தூரத்தில் வரும் கப்பல்களைக் கண்காணிக்க இதில் லென்சுகள் பயன்படுத்தப்படுகின்றன.

## *தன்னைத்தானே வஞ்சித்தல்:*

வசனத்தைக் கேட்கிறோம், விசுவாசிக்கிறோம், ஏற்றுக் கொள்கிறோம், குறிப்பெடுக்கிறோம், தியானிக்கிறோம் என்றாலும் அதன்படி செய்யாவிட்டால்? அதனால் பிரயோஜனமென்ன?

அதாவது அந்த வசனத்தைக் குறித்த அறிவு மாத்திரம் நமக்கு இருக்கும்; மற்றபடி நமக்கு எந்தவிதமான நன்மையும் இருக்காது இல்லையா?

... நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள். (யாக். 1:22) (இந்தக் கோதுமை

மணியை எடுத்து விதைக்கிறேன்...)

வடநாட்டில் உள்ள ஒரு குளிர்ப்பிரதேசத்தில் நாம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒரு பரிசோதனை செய்வோம். ஒரே அளவுள்ள கறுப்புத்துணி ஒன்றையும், வெள்ளைத்துணி ஒன்றையும் வெயிலில் பனியின் மீது விரித்துப் போட வேண்டும். சிலமணி நேரங்களில் கறுப்புத் துணி அமுங்கித் தணிந்துபோயிருக்கும். வெள்ளைத்துணி மட்டும் போட்டபடியே கிடக்கும்.

ஏனென்றால் கறுப்பு நிறத் துணி சூரியக்கதிர்களைப் பெருமளவிற்குக் கிரகித்து வெப்பமடைகிறது. அதனால் அதன் அடியிலுள்ள பனி விரைவாக உருகுகிறது. ஆனால் வெள்ளைத்துணி கதிர்களின் பெரும்பகுதியைச் சிதறடித்துவிடுவதால்; வெப்பமடைவதில்லை, அதன் அடியில் உள்ள பனியும் உருகுவதில்லை.

இந்த சோதனை மிக நல்ல சோதனைதான். பௌதிகத்தை அடிப்படையாகக் கொண்ட சோதனையினால் நமக்குக் கிடைத்த அனுபவம் வெறும் மூளையளவில் நின்று போனால் அதனால் நம் வாழ்க்கைக்கு என்ன பிரயோஜனம்? இன்றைக்கும் பெரும்பாலும் வெயிலில் விளையாடப்படக்கூடிய கிரிக்கெட்டில், வீரர்கள் வெயிலின் தாக்கத்தைக் குறைக்க வெள்ளை ஆடைகளை உபயோகிப்பது யாவரும் அறிந்ததே.

இந்தப் பௌதிக அறிவை நாம் எப்படி நம் நடைமுறை வாழ்க்கையின் அனுபவமாக்குவது? கறுப்பு உடைகள் அதிக அளவில் வெப்பமடைகின்றன. அதனால் கோடைக்காலங்களில் கறுப்பு உடைகளை அணிவதைத் தவிர்த்து வெள்ளை உடைகளையே அணிய வேண்டும். அதாவது கருநீலம், கருஞ்சிவப்பு, கரும்பச்சை போன்ற உடைகளையும் அணியக்கூடாது. மாறாக வெளிர்நீலம், இளஞ்சிவப்பு, தளிர்ப்பச்சை போன்ற உடைகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

வெயில் நேரத்தில் கருப்பு உடைகளினால் ஏற்படும் வெப்பத்தால் ஆபத்தான காய்ச்சல்கள் கூட வரலாம்! இதைத் தவிர்க்க **Light Colour** உடைகள் அதிக பிரயோஜனமாக இருக்கும்.

இப்படியாக வசனத்தையும் நம் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

*சுயபாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல் அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். (யாக்.1:25)*

வெயில் தாங்கமுடியாமல் தலைவலி, மயக்கம் கூட சிலருக்கு வருவதுண்டு. வெள்ளைக் கலர் தொப்பி அணிந்துகொண்டால் இந்தப் பிரச்சனையை மட்டுப்படுத்தலாம்.

இப்படியே யோசித்துப் பார்த்துச் செயல்பட்டால் புதிய புதிய ஆலோசனைகளை நம் மூளையே வெளிப்படுத்தும். நம் வாழ்க்கையில் அதையெல்லாம் செயல்படுத்திப் பார்க்கும்போது பல வழிகளில் அது இலாபகரமாக இருக்கும். பழங்கள் வைக்கப்பட்டிருக்கும் அறையின் சுவர்கள் கறுப்பாக இருந்தால் பகலில் அவை கிரகிக்கும் வெப்பம் ஓரளவுக்கு இரவில் பழங்கள் கடுங்குளிரால் கெடாதபடி பாதுகாக்கிறது, அல்லது பழங்கள் சீக்கிரமாகப் பழுக்கப் பிரயோஜனப்படுகிறது.

பிரகாசமுள்ள மனக்கண்கள் வேண்டுமென்று ஜெபித்து; பூரண பிரமாணத்தை ஊன்றிப் படிக்க வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் யார்? நமக்கு என்னென்ன உண்டு? என்பது தெரியவரும். அதை விசுவாசித்து, கிரகித்து அறிக்கை செய்து, கிரியை நடப்பிக்கும் போது பாக்கியம் கிடைக்கிறது.

இன்னொரு உதாரணம். ஜெர்மனியில் 1903இல் **'Hoss'** என்ற கப்பல் தென் துருவத்திற்குப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது கப்பலைச் சுற்றி எல்லாப்

பக்கங்களிலும் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்துவிட்டது. வெடிமருந்து, இரம்பங்களின் வேலைகள் பயனில்லாமல் போனது, பனிக்கட்டியை உடைக்க முடியவில்லை. என்ன செய்வது? சூரியக்கதிர்கள் கருப்பு நிறத்துடன் செயல்படும் பௌதிகத் தொடர்பைக் குறித்த அறிவு இந்நேரத்தில் பயன்பட்டது. இரண்டு கி.மீ. நீளமும், பத்து மீ. அகலமும் உள்ள பரப்புவரை கப்பலைச் சுற்றி கருப்பான சாம்பலும் நிலக்கரியும் தூவப்பட்டது. அண்டார்டிக்காவில் அது கோடைகாலமாக இருந்தபடியினால் பகல்பொழுதில் வெயிலடிக்க ஆரம்பித்தது; ரம்பமும், வெடிமருந்துகளும் செய்யத் தவறியதை வெயிலும் கருப்பு சாம்பலும் சேர்ந்து சாதித்தது. சாம்பல் தூவப்பட்ட பகுதியில் பனிக்கட்டி உருகி கப்பல் வெளிப்பட்டது. கற்றுக் கொண்ட பௌதிக அறிவு, வெறும் பேச்சளவில், மூளையளவில் நின்று போகாமல் சாதித்துக் காட்டியது; விடுதலையும் வந்தது.

விதைத்தால்தான் அறுவடை என்ற சத்தியத்தை 100% நம்புகிறோம். ஆனால் விதைக்காதவரையில் அந்த சத்தியத்தால் நமக்கு எந்தவிதமான பிரயோஜனமுமில்லையே! செயல்படுத்திப் பார்க்க ஆரம்பித்தால்? கைகள் "துருதுரு" வென்று வரும், யாருக்குக் கொடுக்கலாம் என்று! கண்கள் எப்போதும் "நல்ல நிலங்களைத்" தேடிக்கொண்டே இருக்கும். இதைப் போலவே வேதத்தின் பல்வேறு சத்தியங்களைச் செயல்படுத்த அதற்கேற்ற ஆதாரத் தளங்களைத் தேடிக்கொண்டே இருப்போம். மிகவும் உற்சாகமான ஒரு ஆவிக்குரிய அனுபவம் இது, இன்றே தொடங்குவோம்.

இதே உதாரணத்தை வைத்து இன்னொரு சத்தியத்தையும் சொல்லலாம். கறுப்பு – இருளின் அதிகாரம் அல்லது ஆதிக்கம் என்று வைத்துக் கொள்வோம். இருளில் இருக்கும் ஜனங்களைச் சாத்தான் அதிகமாக அழுத்தி, அமுக்கி, தன் ஆளுகைக்குள் வைத்திருக்கிறான். அவர்கள் தேவனை அறியாததினால் அவனை எதிர்க்கமுடியாமல் அவனுடைய குணாதிசயங்களைக் கிரகித்து, வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

வெள்ளை – வெளிச்சம், வெளியே வந்த ஒளியின் பிள்ளைகளின் அனுபவம் அது. இரட்சிக்கப்பட்ட தேவ ஜனங்கள் தேவனை அறிந்திருப்பதனால் சாத்தானின் தாக்குதல்களை எதிர்த்து சமாளிக்கிறார்கள், அல்லது புறக்கணித்து ஜெயிக்கிறார்கள். அவனால் பாதிக்கப்படுவதில்லை, பாபிலோனிலும் அவருடைய சித்தம் செய்கிறார்கள். அல்லேலூயா!

## காண்டாமிருகத்திற்கொத்த பெலன்:

*தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; காண்டாமிருகத்துக்கொத்த பெலன் அவர்களுக்கு உண்டு. (எண்.23:22)*

நம்முடைய பலம் என்னவென்று நமக்கே தெரியவில்லை. எகிப்திலிருந்து வெளியேறிய (பாவத்திலிருந்து விடுதலையாகி இரட்சிக்கப்பட்ட) ஒவ்வொருவருக்கும் காண்டாமிருகத்தின் பெலனை, வேதம் வாக்குப் பண்ணுகிறது.

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. (பிலிப். 4:13) என்று நம்மாலும் பவுலைப் போல தைரியமாகச் சொல்ல முடியும்.

காரணம் இயேசு நம்மைப் பெலப்படுத்துவதால்! நம் புயபலம் செயலிழந்து போவதால்!

"எல்லாவற்றையும் செய்ய" பெலனுண்டு. "ஏதோ ஒரு சில காரியங்களை" என்றல்ல; "சில காரியங்களைத் தவிர மற்ற எல்லாம்" என்றும் அல்ல; உலகத்திலுள்ள எல்லாக் காரியத்தையும் செய்யப் பெலனுண்டு.

நம்முடைய பலம் எவ்வளவு என்று நமக்கே தெரிவதில்லை. ரஷ்ய எழுத்தாளர் எழுதிய "இறந்த ஆத்துமாக்கள்" என்ற நாவலில் வரும் "கிபா மோகியெவிச்" என்ற ஒரு மகா பெரிய அறிவாளி தன் மூளையைக் கசக்கிக்கொண்டு ஒரு விஷயத்தை யோசித்தார். "யானைகள் முட்டையிலிருந்து பிறப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த முட்டையின் கூடு ரொம்ப ரொம்பத் தடிமனாக இருக்க வேண்டும்! பீரங்கிக் குண்டு கூட துளையிட

முடியாத அளவில் இருக்க வேண்டும்". இதுதான் அவருடைய மூளையைத் துளைத்த விஷயம். ஆனால் சாதாரண கோழி முட்டையின் ஓடு கூட அவ்வளவு சுலபமாக உடைத்துவிடக்கூடிய ஒன்றல்ல என்ற உண்மை அந்த மாபெரும் அறிவாளிக்குத் தெரியாமல் போய்விட்டது.

*எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. (2 கொரி.10:4)*

நமக்கிருக்கும் பலம் "தேவபலம்" என்ற உண்மை நிலை **(reality)** பெரும்பாலான விசுவாசிகளுக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் "முன் போல வேலை செய்ய முடியவில்லை, வயசாகிவிட்டது, அதனால் பலவீனமாக இருக்கிறது, முட்டிக்குமுட்டி தட்டி எடுக்கிறது, தலையை சுற்றிக்கொண்டு வருகிறது" என்றெல்லாம் புலம்பமாட்டார்களே!

கோழி முட்டையை நெடுவசத்தில் உள்ளங்கைகளுக்கு இடையில் வைத்து அழுத்தி நொறுக்குவது அவ்வளவு லேசான காரியமல்ல. பளுவான மர மேஜை ஒன்றை நான்கு பச்சை முட்டைகள் மேல் அவை உடையாதபடி நிறுத்த முடியும். (முட்டை உருண்டு விடாமல் இருக்க ஒட்டிக்கொள்ளும் பிளாஸ்டர் பயன்படுத்தலாம்). அடைகாக்கும் பெட்டைக்கோழி முட்டைகள் உடைந்துவிடுமோ என்று பயப்படாது. ஏன் பயப்படத் தேவையில்லை என்பது கீழே கொடுத்துள்ள விபரத்தால் விளங்கும்.)

முட்டை ஓடு இவ்வளவு வலுவுள்ளதாக இருப்பதற்கு அதன் ஓடல்ல காரணம்; அதன் வளைவான வடிவம்தான் காரணம்; வெளியிலிருந்து செயல்படும் அழுத்தம்தான் காரணம்!

"கவிகை மாடங்கள்" (கல்லினால் கட்டப்பட்ட வளைவு சன்னல் – பண்டை அரசர்கள் மாளிகைகள், கோவில்களில் காணப்படும்) இவற்றின் வலுவுக்குக் காரணம் கற்கள் அல்ல அதன் வடிவம் தான்!

வளைவு ஜன்னலின் நடுவிலுள்ள ஆப்புவடிவமான கல்லின் மீது **(M)** அதற்கு மேலாக இருக்கும் சுவரின் எடை **(S)** **'A'** என்ற விசையுடன் அழுத்துகிறது. என்றாலும் அந்த நடுக்கல் ஆப்பு வடிவமாக (முக்கோணம் போல) இருப்பதால் கீழே விழாமல் தனக்கு இரண்டு பக்கத்திலுமுள்ள கற்களை அழுத்துகிறது. இவ்வாறு **'A'** என்னும் விசை இணைகர விதிப்படி **'C' 'A'** என இரண்டு விசைகளாக பகுக்கப் படுகிறது. இந்த இரண்டு விசைகளும் பக்கத்திலுள்ள கற்களின் எதிர்ப்பு விசையால் ரத்தாகி விடுகின்றன. பக்கத்துக் கற்கள் அடுத்த அடுத்த கற்களுக்கிடையே அழுந்தி அமைந்துள்ளன. அதனால் வளைவுப் பகுதியின் மேலிருந்து கீழ்நோக்கி அழுத்தும் விசையால் அதை நொறுக்க முடியாது.




முட்டை ஓடும் ஒரு வளைவுதான். அதன் எல்லாப் பக்கங்களும் வளைந்த வடிவிலுள்ளன. வெளிப்புறத்திலிருந்து செயல்படுத்தும் அழுத்தம் நாம் நினைப்பதைப் போல அவ்வளவு சுலபமாய் முட்டை ஓட்டை உடைத்துவிட முடியாது.

நம்முடைய (தேவனால் மீட்கப்பட்ட ஜனங்களுக்கு மட்டும்தான் இது பொருந்தும்) பலமும் எவ்வளவு என்றே தெரியாமல்தான் இவ்வளவு காலமாக இருந்து விட்டோம். ஆராய்ந்த போதுதான் (வசனத்தை நிதானித்துப் பார்த்தபோது) உண்மை தெரிந்தது.

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. (2 கொரி. 10:4)

சாதாரண உலக ஜனங்களுக்கு இருப்பதைப் போன்ற சாதாரண பலமல்ல அது. ஒரு வேளை நம் வெளித்தோற்றம் மிக அற்பமானதாக இருக்கலாம். ஆனால் நம்முடைய பலத்துக்கு நம் உடல் அல்ல காரணம்; தேவனே காரணம், தேவன் தரும் பலமே காரணம்! அல்லேலூயா!!

உலக மக்களுக்கு மாம்ச பலமிருக்கலாம்; கடினமான வேலைகளைச் சளைக்காமல் செய்வார்கள், அதிக பளுவானதைத் தூக்குவார்கள், மிகுந்த பலசாலியையும் சண்டையிட்டுக் கீழே சாய்ப்பார்கள், செங்கற்களை உடைப்பார்கள், **(black belt)** கறுப்பு பெல்ட் வாங்குவார்கள், பல்லில் கயிற்றைக் கட்டி **(bus)** பேருந்தை இழுப்பார்கள். **(aeroplane-** ஆகாய விமானத்தைக்கூட இழுத்த செய்தியை வாசித்திருக்கிறேன்).

ஆனால் நமக்குத் தேவபலம் நிறைந்த ஆவிக்குரிய போராயுதங்களை பரிசுத்தாவியானவர் கொடுத்திருப்பதால்; அது மக்களை சாத்தான் சிறைப்படுத்தி வைத்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத அரண்களை **(Safe Guard)** உடைக்கும் வல்லமை வாய்ந்தது. அரணை உடைக்க இன்னொரு ஊழியக்காரரிடம்தான் போக வேண்டும் என்றல்ல (ஒரு வேளை அறியாமையின் காலத்தில் தேவன் அதை அனுமதிக்கலாம்) நாமே அந்தக் காரியத்தை நம் விசுவாசத்தால், அறிக்கையால் செய்து சாதிக்கலாம்! (எபே. 6:13)

மிக மெல்லியதான கண்ணாடியமைப்புள்ள மின்சார பல்பு (முட்டை பல்பு) எப்படி அவ்வளவு வலுவுள்ளதாக இருக்கிறது என்பதும் புரிந்திருக்கும். முட்டைக்குள்ளே முட்டைக்கரு உண்டு; ஆனால் காற்றின் கணிசமான அழுத்தத்தைத் தாக்குப்பிடிக்க இந்த பல்புக்குள் எதுவுமில்லை என்பது இன்னும் அதிசயம். 10 செ.மீ. விட்டமுள்ள ஒரு ஆளின் எடையை (75 கிலோ) எதிர்த்து நிற்கிறது; இதைக்காட்டிலும் இரண்டரை மடங்கு அழுத்தத்தைக் கூடச் சமாளிக்க இதனால் முடியும் என்பதையும் சோதனைகள் நிரூபித்துள்ளது.

நாம் **'0'** வாக இருந்தோம் தான் (தேவனை அறியாத நாட்களில்); ஆனால் இப்போதோ அப்படியல்ல "இயேசுவும் நானும்" (இயேசு + லதா = எல்லாவற்றையும், எதை வேண்டுமானாலும் செய்யப் பெலனுண்டு) இப்படி அவரவர் பெயரைப் போட்டு எழுதிக் கூட்டிப் பாருங்கள்; புதுக் கணக்குக் கிடைக்கும்! (யோவான். 14:23)

பல்பு, முட்டை, கவிகை மாடம் ஆகியவற்றின் பலத்துக்கு அவற்றின் அமைப்பும், வெளியிலிருந்து செயல்படும் அழுத்தமும் **(pressure)** காரணமாக இருப்பது போல; நம்முடைய பலத்துக்கு நம் ஆவியின் வடிவமைப்பும், (ஆதி. 1:26) பரிசுத்தாவியானவரின் வல்லமையும்தான் காரணம்!

நம்முடைய பலம் இவ்வளவாக இருக்க; "நீ ஒரு புழு, பூச்சி, குப்பை, சாம்பல், செத்த நாய்" என்றெல்லாம் இதுவரையில் சாத்தான் அறிக்கையிட வைத்திருந்தான்; மேற்பரப்பில் கிடந்த விதைகள் நாளாக ஆக விதை உள்வாங்கியது; முளைத்தும் விட்டது!

### *வசனத்தால் மனதை மறுரூபப்படுத்துவோம்; எப்படி ? இப்படி...*

இயேசு கிறிஸ்து சிலுவையில் சாபத்தை முறியடித்தார், முற்றுப்புள்ளி வைத்தார், சாவு மணியடித்தார். இனி பூமி முள்ளையும் குருக்கையும் முளைப்பிப்பதில்லை! (ஆதி. 3:18)

### *ஏன் ? ஏன் ?*

ஓராயிரம் கேள்விகள் உள்ளான ஆவிக்குரிய மனிதனுக்கு! இந்தக் கேள்விகளுக்கு ஓய்வு ஒழிவே கிடையாதா? யார் சொன்னது, முடிவு உண்டு; சத்தியத்தை அறிந்து கொண்டால்! ஒரே நாளில் முடியாது என்றாலும் சத்தியத்தை அறியத் தொடங்கிவிட்டால், தொடருவோம், முடிக்கவும் செய்வோம். "...சத்தியம் உங்களை விடுதலையாக்கும் ... (யோவா. 8:2)"

"மனம் போன போக்கிலே மனிதனும் போகிறான்" என்ற புத்தகத்தை (ஜாய்ஸ் மேயர்) நான் இன்னும் வாசிக்கவில்லை; என்றாலும் தலைப்பிலேயே கருவையும் கண்டு பிடிக்க முடிந்தது. சாத்தான் ஆத்துமாவைத்தான் (நினைவுகள் சார்ந்த பகுதியை) குறி வைக்கிறான். காரணம், மனிதன் மனதின் யோசனைகளின்படிதான் நடப்பான் என்பது சாத்தானுக்குத் தெரியும். அதனால் மனதைக் குறி வைத்துத் தாக்குகிறான்; கெடுக்கிறான். கெடுக்கப்பட்ட மனதால் மனிதனைச் சரியான (நல்ல) வழிகளில் நடத்த முடியாது.

*“...இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, ... (எரே.17:9)”*

தேவனை அறியாத ஜனங்களுடைய மனதைப் பற்றி இப்போது பிரச்சனையில்லை; தேவனை அறிந்த ஜனங்களின் இருதயம் இப்படி சாத்தானால் கெடுக்கப்படும்போது என்ன நடக்கிறது?

வேதத்தை வாசிக்கும் போது ஆத்துமாவின் உட்கூறுகள் சத்தியத்தை இழுத்துக் கொள்ளும். ஆனால் கெடுக்கப்பட்ட ஆத்துமா சத்தியத்தைக் கேட்டாலும் அதைச் சரியானபடி கிரகிக்கமுடியாமல் **(absorbtion)** திண்டாடுகிறது. மிகக் கொஞ்சமாக, எதையுமே அது கிரகிக்காமல் (சாப்பிட்ட உணவு இரைப்பையில் ஜீரணம் ஆகி கீழே இறங்கும்போது; பெருங்குடலில் உள்ள குடலுறிஞ்சிகள் உணவின் சத்தை உறிஞ்சுவதைப் போல **(absorb)** பசிமயக்கத்துடனேயே காலத்தை ஒட்டுகிறது.

*“... கண்களால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே. மத். 13:15”*

“ஒலியற்ற ஓசைகள்” பற்றி பேசினால் புருவத்தை உயர்த்துபவர்கள் அநேகர். சில்லு வண்டின் முரவல், வௌவாலின் கீச்சுக்குரல் போன்ற உயர்ந்த சுருதியுள்ள ஒலிகளைச் சிலரால் கேட்க முடிவதில்லை; (குறைபாடுகள் இல்லாத செவியுறுப்புகள் உள்ளவர்களாக இருந்தாலும்). அதற்காக அவைகள் ஓசையெழுப்புவதில்லை என்று வாதாடுவது எப்படிச் சரியாகும். இதைப்பற்றி எதுவும் தெரியாவிட்டால் “மீஒலியியல்”சம்பந்தப்பட்டப் புத்தகங்களைப் படிக்க வேண்டும். அப்போது உண்மை (சத்தியம்) புரியும்.

ஒலியலைகளைப் போன்ற ஆனால் நம் காதுகளுக்குக் கேட்காத, அதிக அதிர்வு கொண்ட சப்தம் “மீஒலி” என்று சொல்லப்படுகிறது. இதை ஆராய்ச்சி செய்யும் துறை “மீஒலியியல்”(மிகையொலி) ஆகும். வசனங்கள் தெரியாவிட்டால், புரியாவிட்டால் பரிசுத்தாவியானவரின் உதவியுடன் ஆழ்ந்து, அதிக நேரம், திரும்பத்திரும்ப வாசிக்க வேண்டும். ஞானஸ்நானத்தைக் குறித்த சத்தியம் தெரியாதவர்கள்; அது தேவையில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், அது எப்படி சரியாகும். அதனால் யாருக்கு நஷ்டம்?

போதிய சத்துணவு இல்லாததால் எதிர்ப்பு சக்தியை **(resistance)** இழந்த பலவீனமான உடம்பை நோய்க்கிருமிகள் எளிதில் தாக்குவதைப்போன்ற ஒரு காரியம் இங்கே நடக்கிறது. இப்படிப்பட்ட ஆத்துமாக்களை வஞ்சக ஆவிகள் தாக்கி அவர்களை சத்தியத்திற்கு புறம்பான இருளுக்குள் தள்ளிக் கதவைப் பூட்டிவிடுகிறது. பிறகு நடப்பதெல்லாம் மிக மோசமானதாக இருக்கும். தாங்கள் சத்தியத்தின்படி சரியாகத்தான் நடந்துகொண்டிருப்பதாக நினைத்துக் கொள்வார்கள். ஆனால் மாறுவேடமணிந்த சாத்தான்தான் தங்களை நடத்திக் கொண்டுப் போகிறான் என்று அவர்களுக்குப் புரிவதேயில்லை.

*“தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களை கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். (ரோமர். 1:28)” ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ... பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். (2 தெச. 2:11,12)*

பெரும்பான்மையான விசுவாசிகளின் நிலவரம் இதுதான். வஞ்சக ஆவியின் ஆளுகைக்குள்ளாக இருக்கிற விசுவாசிகளிடம், ஊழியக்காரர்களிடம், சபையிடம் வசமாக சிக்கிக்கொள்வார்கள். உணர்வு வரும்போது வெளியே வருகிறார்கள். “நல்ல மாட்டுக்கு ஒரு சூடு” என்பார்கள்; ஆனால் இந்த விஷயத்தில் சிலருக்கு எத்தனை சூடு வாங்கினாலும் புத்தி வருவதில்லை!

“வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்களிடத்தில் இவர்கள்

அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள். (2 பேது. 2:18)"

மீஒலி நம் செவிகளுக்குக் கேட்காவிட்டாலும் அது இருப்பதைத் தெரிந்துகொள்ள தெளிவான வேறு வழிகள் இருக்கின்றன. அதிரும் தகடு ஒன்றை எண்ணெயினுள் முக்கினால், மேற்பரப்பில் 10 செ.மீ அளவிலான குமிழ் எழும்புகிறது, எண்ணெய் 40 செ.மீ. உயரத்திற்குப் பீச்சியடிக்கிறது. 1 மீட்டர் நீளமுள்ள கண்ணாடிக் குழாயை எண்ணெயில் அமிழ்த்தினால்; அதைப் பிடித்திருக்கும் நம் கை சூட்டினால், வெந்து போய்விடும்! மீஒ—களின் ஆற்றல் வெப்ப ஆற்றலாக மாறுவதால், அந்தச் சூடு மரத்துண்டைக் கருக்கிவிடும் ஆற்றல் பெற்றுவிடுகிறது.

சத்தியத்தை அறிந்து கொள்ள மனதில்லாதவர்கள்; இப்படித்தான் சூடு வாங்கிக்கொண்டு ஆறாத புண்களோடு, வடுக்களோடு, வேதனைகளோடு வாழ்கிறார்கள். சாத்தானும் இவர்களை தொடர்ச்சியாக ஏமாற்றிக்கொண்டே வருகிறான்.

சத்தியத்தை அறியாததினால் (வேதத்தை வாசிக்க நேரம் ஒதுக்காததினால், நுனிப்புல் மேய்ந்ததினால், தியானம் பண்ணாததினால்) இந்த நிலைமை தங்களுக்கு நேரிட்டதென்பதை மனதார உணராமலிருக்கிறார்கள். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த கதையாய்... பரிசுத்தமான, பரிபூரணமான வேதவசனம் கையிலிருக்க; கலப்பட உபதேசங்களை நாடிப்போனதால் நிலைமை அதோகதியாகிப்போனது!

வஞ்சக ஆவிகளின் உபதேசத்தின் அஸ்திபாரம் வசனமாக இருக்காது; ஏதாவது ஓர் உலகக்காரியமாக இருக்கும். ஆனால் கேட்க, வாசிக்க மிக நன்றாக, சுவாரஸ்யமாக, தாலாட்டுப்போல, சொறிந்துவிடுவதுபோல சுகமாக இருக்கும். ஆனால் இப்படிப்பட்ட உபதேசங்களினால் விடுதலை கிடைக்காது; அதில் சத்தியம் இல்லாதிருப்பதனால். ஆனால் ஒளியின் தூதன் ஒரு பரவச நிலைக்கு நடத்திவிடுவான்.

*...சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. (1 தீமோத். 6:20)*

மீஒலிகள் கடற்பாசிகளின் இலைகளை அறுக்கிறது, பிராணிகளின் உயிரணுக்களை வெடிக்கச் செய்கிறது, ரத்த உயிரணுவைச் சிதைக்கிறது. ஓரிரு நிமிடங்கள் இந்த மீஒலியலைகளைச் செலுத்தினால் சிறு மீன்கள், தவளைகள் செத்துப் போய்விடும். பெரிய பிராணிகள் சாகாவிட்டாலும் அவற்றின் உடல் வெப்ப நிலை 45 சென்டிகிரேட் டிகிரி வரை உயர்கிறது.

**'Ultra Violet Rays'** அல்ட்ரா வயலட் கதிர்கள் போலவே இந்த ஒலியலைகளும் மருத்துவத்துறையில் பயன்படுகிறது. **X'Ray** கதிர்கள் நுழைய முடியாத ஒரு மீட்டர் தடிமனுள்ள உலோகப்பாளம் ஒன்றிலுள்ள குறைபாட்டைக் கண்டுபிடிக்க மீஒலியைப் பயன்படுத்த முடியும்.

அருகில் நிகழும் எல்லா அதிர்வுகளையும் நம் செவிகள் கேட்பதில்லை. அதிர்வுகள் 16க்குக் குறைவாகவோ, அல்லது 15,000 – 22,000க்கு அதிகமாகவோ இருந்தால் அந்த ஒலிகளை நம்மால் கேட்க முடியாது. (பூமி சுழலும் சத்தம் நமக்குக் கேட்காமல் இருப்பதற்கு இதுதான் காரணம்! அண்டவெளியில் சுழலும் எல்லா கிரகங்களும், நட்சத்திரங்களும் ஓசை எழுப்பத்தான் செய்கின்றன!) (சங். 19) **Satellite, T.V., Radio**, மூலமாகச் சுவிசேஷம் அறிவிக்கப்படும் காரியம் இதில் முன்னறிவிக்கப்பட்டிருந்தாலும்; இந்த விஷயத்திற்கும் இது பொருந்தும்.

கொசு போன்ற சிறுபூச்சிகள் வினாடிக்கு 20,000 அதிர்வுகள் உள்ள சுருதிகளை உண்டாக்குகின்றன. இவை சிலருக்குக் கேட்கின்றன, சிலருக்குக்குக் கேட்பதில்லை. வௌவாலின் கீச்சொலி பூச்சிகளின் முரலலுக்கு (வித்தியாசமான சத்தம்) ஒரு முழு ஸ்தாயி **(Notes)** கீழேயுள்ளது. அதனால் செவிப்புலப்பாட்டு வரம்பு மேலும் கீழே உள்ளவர்களும் இருக்கின்றனர்; அவர்கள் வௌவாலைச் சத்தம் செய்யாத பிராணியாகத்தான் நினைப்பார்கள். நாய்களால் வினாடிக்கு 38,000 அதிர்வுகள் கொண்ட ஒலிகளைக்கூட கேட்க முடிகிறது!

(ஆகவே தான் இரவு நேரங்களில் யாரும் இல்லாத போதும் நாய்கள் குரைக்கின்றன.) ஆனால் நாமோ? (ஏசா. 1:3)

இப்படிப்பட்ட கண்ணியில் மாட்டி இருப்பவர்களுக்குத் தப்பிக்க நடைமுறையில் (practical-ஆக) ஒரு ஆலோசனை. அதிகப்படியான நேரத்தை (Max.) வேதம் வாசிக்க, ஜெபிக்க செலவிட வேண்டும் (2 அல்லது 3 மணி நேரமாவது). பெரும்பாலும் பரிசுத்தாவியானவருடனான நேரடித் தொடர்பே பாதுகாப்பானது. வசனங்களில் சந்தேகம் வரும்போது, புரியாமல் போகும்போது, வியாக்கியான புத்தகங்களைத் தேடுவதைவிட, ஊழியக்காரர்களை தேடிப்போவதைவிட இது நல்லது. அதற்காக அதையெல்லாம் ஒதுக்கிவிட வேண்டும் என்றில்லை; பாதுகாப்பான காரியங்களுக்கு முன்னுரிமை (First preference) கொடுப்பது புத்திசாலித்தனமல்லவா?

*கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங். 1:2)*

*நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ... (மத். 26:41)*

## இது ஏன் நடந்தது ?

*கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். (யோ.12:24)*

“நார்த்தாம்டன்” என்னுமிடத்தில் ஒரு கல்லறைத்தோட்டம்... அதோ தெரிகிறதே, அதுதான் “டேவிட் பிரெய்னாட்” என்பவரின் கல்லறை. அதற்குப் பக்கத்தில் இருக்கும் கல்லறை? அவர் திருமணம் செய்ய விரும்பிய “ஜெரூசா எட்வர்ட்ஸ்” என்ற பெண்ணின் கல்லறை! அவளைத் திருமணம் செய்யுமுன்னதாகவே இளமையில் இறந்து விட்டார். அவர் உயிருடன் இருந்திருப்பாரானால் கிறிஸ்துவுக்காக அநேக காரியங்களைச் செய்திருப்பார். சில செவ்விந்தியர்களைக் குணமாக்கியதைத் தவிர வேறே அதிக வேலைகள் செய்ய அவருக்கு நேரமில்லாமல் (வாழ்க்கையில்லாமல்) போய்விட்டது.

அவருடைய மாமனாராக மாற இருந்த “யோனத்தான் எட்வர்ட்” இயேசுவை அறிந்தவர். அவர் டேவிட் பிரெய்னாட்டின் வாழ்க்கையை ஒரு புத்தகமாக எழுதினார். அந்தப் புத்தகம் தன் இறக்கையை விரித்தது, மேலே எழும்பிக் கடலைக் கடந்தது. கண்ணுக்குத் தெரியாத காற்றின் பக்கங்களில் டேவிட் பிரெய்னாட்டின் சோகக் கதையை எழுதிக் கொண்டே சென்றது. கடைசியில் “கேம்பிரிட்ஜ்” யுனிவர்சிட்டி மாணவராயிருந்த “ஹென்றி மார்ட்டின்” என்பவரின் மேஜையின் மேல் போய் தன் சிறகை மடக்கியது.

அவர் அதை வாசித்தார்... வாசித்தார்... வாசித்தார்... தன் உபகாரச் சம்பளத்தையும், படிப்பையும், கலைஞானத்தையும், சந்தர்ப்பங்களையும் உதறிவிட்டு நாற்காலியைவிட்டு எழுந்தார். இந்தியாவுக்கு வந்தார், இயேசுவுக்காய் ஊழியம் செய்தார், திரும்பினார். சுயதேசத்திற்கு வரும்போது, கருங்கடல் அருகில் ஒரு கொடிய காய்ச்சல் அவரைத் தாக்கியது, அவ்வளவுதான்... இயேசுவுக்காக விதையானார்.

**இந்த இரண்டு வாலிபர்களும் ஏன் இப்படி தங்கள் வாழ்க்கையை வீணாக்கிக்கொண்டார்கள்? இவர்கள் சாதித்தது என்ன? ஏன் இல்லை? இந்தத் தியாக வித்துக்களிலிருந்து ஆயிரமாயிரம் மிஷனரிகள் துளிர்த்தனர்... கோடானுகோடி ஆத்துமாக்களின் பசியைத் தீர்த்தனர்... இவர்களுடைய வாழ்க்கை வீணானது போலத்தான் முதலில் தோன்றியது. விதையை மண்ணுக்குள் புதைத்து மூடிய பிறகு; அது முளைக்கும் வரைக்கும் அந்த இடத்தைப் பார்க்கும்போது; இன்னும் கட்டப்படாத கல்லறையின் ஞாபகம்தான் வருகிறது!**

## கிறிஸ்துவின் சேனைக்கு ஆள் தேவை!:

*இறந்த காலமோ திரும்புவதில்லை... நிகழ்காலமோ விரும்புவதில்லை... எதிர்காலமோ*

*அரும்புவதில்லை... இதுதானே அறுபதின் நிலை! (பிர. 1:4)*

இந்த அறுபதின் நிலை உலக அறுபதுகளுக்குத்தான்; தேவ ஜனங்களுக்கோ என்றும் இருபது!

முதிர் வயதில் புஷ்டியும் செழிப்பும்... உனக்கென்ன வயசாகிப்போச்சி, (screw) நட்டெல்லாம் கழண்டு விழ ஆரம்பித்து ரொம்ப நாளாச்சி என்று மெதுவாக கிசுகிசுத்தபடி சாத்தான் விதை ஊன்றிக் கொண்டிருக்கிறான். அவனை விடுங்கள், நமக்கென்ன குறைச்சல்? புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? ராஜாதிராஜாவின் பிள்ளைகள் (யூத ராஜ சிங்கத்தின்) பிள்ளைகள் நாம்! (சங். 92:15)

அது சரிதான், என்றாலும் (15?), 20 – 35 (40–45!) வரையிலான இளைஞர்களுக்கு கொஞ்சம் விசேஷித்த வேலை இருக்கிறது, வாருங்கள்!

பிரமைகளில் மூழ்கி உங்கள் தனியுலகக் காட்டுக்குள் காணாமல் போய்விடாதீர்கள். உங்கள் பலத்தைப் பேய்களுக்குக் கொடுக்காதீர்கள். (நீதி. 31:3) ஒரு தரிசனக் கண்ணாடியைக் கேட்டு வாங்குங்கள்.

ஆத்துமாக்களைக் குறி வையுங்கள். (நீதி. 11:30) ஒரு பிடி சாம்பலைத் தங்கள் முடிவாக்கிக் கொண்ட முற்பிதாக்களை மறந்துவிடுங்கள்; அவர்களைப் பற்றின சோக நினைவுகள் தரிசனப்பாதையில் தடியை வெட்டிப் போடும்! (1 தெச. 4:13)

இளைய தலைமுறை (Teenagers) தங்களுடைய பருவத்தைச் சாத்தானிடம் கொடுத்துவிட்டு; அவனுக்கு அடிமைகளாக இருந்ததால் அது அவர்களுக்குப் பாரமாகிப் போனது; (நீதி. 7:23) இனிமேலாவது உங்களை இயேசுவுக்காகச் செலவிடுங்கள்; இதுவரை படுத்துக்கிடந்த தரிசனங்களுக்கும் சின்னச்சின்ன சிறகுகள் முளைத்துவிடும். (யோவான். 2:28)

பொதுவாகவே வாலிபர்களுடைய (வாலிபப் பெண்களுக்கும் தான்) பிரச்சனையே வேலி தாண்டும் இரகசிய இதயங்கள்தான். இதனால் முள் கிழித்து வீணான, ஆடைகளும், கல் தட்டி விழுந்து இரணமாக்கப்பட்ட வாழ்க்கைகளும் கணக்கிலடங்காதது. வேலி என்பது நமக்காக நியமிக்கப்பட்டிருக்கும் எல்லைகளில் ஒன்று. ஆபத்து வரக்கூடாது என்பதற்காக தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நியமங்களில் ஒன்று. “கூடாது” என்று முத்திரையிடப்பட்ட எதையுமே ஆராய முற்படுவது மனித இயல்பு; அதிலும் குறிப்பாக வாலிபப்பருவத்தின் இயல்பு. இயேசுகிறிஸ்துவின் ஆளுகைக்குள் வரும்போது இந்தப் பிரச்சனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. (பிர. 11:10)

“நகமும் விரலும் போல இணைந்திருப்போம்” டயலாக் பேசுவான்(ள்) நம்பாதே! நகம் வளர்ந்து விரலில் இருந்து பிரிந்து போய்விடும், நம்மை விட்டுப் பிரியாதிருப்பவர் இயேசு மாத்திரமே! (நீதி. 26:25)

நானும் ஒரு பூவாகத்தான் பிறப்பெடுத்தேன், ஆனால் நான் பூமாலையாகவில்லையே! என்று அரளிப்பூ அழுததாம். தோற்றம் முக்கியமல்ல, அழகு முக்கியமல்ல, அதைத் தீர்மானிப்பது கண்களல்ல, மூளைதான்! கர்த்தருக்குப் பயப்படுகிற நீங்கள்தான் அழகு! (நீதி. 31:30) அழகாக இல்லையே என்ற தாழ்வு மனப்பான்மை (inferiority complex) மிக மிக ஆபத்தானது. அதற்குப் பின்னால் “அகந்தை” superiority complex என்ற முகமூடித் திருடன் ஒளிந்திருக்கிறான்!

## பெருமையுள்ளவனுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். (யாக். 4:6)

இயேசு கிறிஸ்து வாசலருகே... அவர் வாசலைக் கடக்கும் அந்த வினாடி மின்னலைப் போல் இருக்கும். பிதாவுக்கு மட்டும் தெரியும் அந்த வினாடி அகில எல்லையைக் கடக்குமுன் ஆத்துமாக்களைத் தயார் நிலையில் நிறுத்தி வைத்தாகவேண்டும். (மத். 24:27,33)

அந்திக்காற்று சாமரம் ஆடி நெற்றி வேர்வையைத் தொட்டது.

*இலைகளின் சலசலப்பின் நிஷ்டூரத்திற்குள் அவள் மறைந்தாள்! (நீதி.7—ம் அதிகாரம் ஒன்றாம் வசனம் முதல் கடைசிவரை வாசியுங்கள்.)*

அதோ தெரிகிறதே, அந்த மர நிழலில் படுத்துக் கிடக்கும் வாலிபனின் மனதிலோடும் கவிதையின் சில வரிகள் இவை! சினிமா அவனை அந்தப் பாடுபடுத்தி வைத்திருக்கிறது. இளைய விசுவாசிகளே, அவனைத் தாண்டிப் போய்விடாதீர்கள்; நின்று அவனை எழுப்புங்கள், அவனுக்காகவும் இயேசு மரித்தாரே! அவனுக்கும் இயேசுவைச் சொல்லுங்கள், அவனுடைய “வெறிச்” என்ற பார்வையை நேராக்குங்கள், விளிம்புகள் வீங்கி, வறட்சிக் குளங்களாகிப் போன கண்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் ஊற்றுங்கள். அவனையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

இறந்து போன தன்னுடைய குட்டிகளைப் பையில் போட்டுக்கொண்டு வருவதைப் போல நடந்து வரும் இன்னொரு வாலிபனைப் பாருங்கள், அவனுடைய சோகக்கதையைக் கேளுங்கள், செத்த குட்டிகளை எடுத்துப் புதையுங்கள், அவனையும் உங்களுக்குச் (இயேசுவுக்கு) சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

*பூமியின் விளிம்புவரை, தொடுவானம் தொடும் வரை, காலம் முடியும் வரை இயேசுவின் சேனை வீரர்களுக்கு வேலை இருக்கிறது. (மத். 10:23)*

வெற்றுப் பேப்பர்களின் நடுவே கிடைத்த “நாவல்” போல சுவாரஸ்யமானது வாலிபப்பருவம். ஆனால் அதில் கதையெழுதச் சொல்லி பென்சிலைச் சாத்தான் கையில் கொடுத்துவிட்டு சீரழிந்தவர்கள் கோடானுகோடி. இயேசு அவனைச் சிலுவையில் ஜெயித்தார், சுவிசேஷப் பணி செய்து சாத்தானுடைய சோக முடிவை அவன் தலையிலேயே எழுதுவோம், வாலிபர்கள் தான் அதையும் சரியாகச் செய்ய முடியும். (நீதி. 20:29)

## Dress? : ஆடைகள்:

காட்டு மிராண்டித்தனத்திற்கு உலகம் சூட்டியிருக்கும் பெயர் தான் “நாகரீகம்”. அசத்தலான உடை தவறல்ல; அதற்காக இப்படியா அலங்கோலமாக, ஒரு சிலரைப்பார்க்கும்போது “மனிதன் குரங்கிலிருந்துதான் வந்திருப்பானோ” என்று கூடச் சிலருக்குச் சந்தேகம் வருவதற்கு இதுகூட காரணமாக இருக்கலாம். (1 தீமோ. 2:10)

## Friends?: நண்பர்கள்:

நீ மாறும்போது தானும் மாறி, நீ தலையாட்டுகிற போது தானும் தலையாட்டி, நீ ஓடுகிற போது தானும் பின்னாலேயே ஓடிவருகிற ஒரு நண்பன் உனக்குத் தேவையில்லை; அதைத்தான் உன் நிழல் நன்றாக செய்துவிடுமே! நிழல் நீண்டு, மங்கி கடைசியில் இல்லாமல் போய்விடும். நீ தவறு செய்யும் போது கண்டிக்கிற, உனக்காக ஜெபிக்கிற, ஆபத்தில் உதவி செய்கிற, சிக்கலில் ஆலோசனை சொல்கிற நண்பர்களைத் தெரிவு செய், நிழல் நண்பர்களை ஓரம் கட்டு! (நீதி. 17:17)

சம்பள நாளில் எண்ணி வாங்கும் பளபளக்கும் ரூபாய் நோட்டுக்களில் எவரெவர் முகங்களெல்லாம் தெரிகிறதே; என் முகத்தைத் தவிர என்று புலம்பாதே! இயேசு எதற்காக வந்தார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள், தனக்காக அல்ல (உனக்காக) நமக்காக!

அழகிருந்தால் வரவேற்கிறது சாத்தானின் சாம்ராஜ்ஜியம்... (சினிமா உலகம்)

பணமிருந்தால் வரவேற்கிறது சொந்த பந்தங்கள்...

பானையிலே சோறிருந்தால் பூனைகளும் உன்னை வரவேற்கும்!

ஆனால்... எதுவுமே வேண்டாம், நீ மட்டும் போதும் என்று வந்தார் தேவன் இயேசு! (மத். 8:20)

இளைஞர்களே! நன்றி மறக்காதீர்கள். வாழ்க்கையின் முதன்மை (**'Best'**) வாலிபப்பகுதிதான். அதில் கொஞ்சம் கூட மிச்சம் வைக்காமல் இயேசுவுக்குக் கொடுங்கள். தங்கள் வாலிபப்பருவத்தைச் சிதைத்துவிட்டு, நொந்து நூலாகிப்போன வயசான காலத்தைத் தேவனுக்குக் கொடுத்துவிட்டு; ஏங்கி ஏங்கி அழுதாரே உன் அப்பா, அந்தக் கண்ணீரை மறந்துவிடாதே!

*நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; ... (பிர. 12:1)*

உலக நேசத்தை மனதில் கொண்டு தாஜ்மஹாலையே கட்டினான் தேவனை அறியாத மனிதன்!

பரலோக நேசத்துடன் நம்மைக் கைப்பிடித்த (மணவாட்டியாக) இயேசுவுக்கு ஆலயம் கட்ட நாலைந்து செங்கல் எடுத்துக் கொடுத்தவுடன் உன் இலக்கே மாறிவிட்டதே! இதற்காகவா இயேசுவை ஏற்றுக்கொண்டாய்? (2 பேதுரு. 2:22)

சிலுவை முன்னால் இருக்க வேண்டும், உலகம் பின்னால் வர வேண்டும். திரும்பிப் பார்த்தாயானால் இறந்த கால தூரக்காட்சிகள் உன் பழைய ஜென்மத்தை மீண்டும் உன் எல்லைக்குள் இழுத்து வர முயற்சிக்கும். நீ நடக்க நடக்கப் பின்னாகப் போய்க்கொண்டிருக்கும் காலடிச்சுவடுகளால் உனக்கு எந்த பிரயோஜனமும் கிடையாது. கல்லறைக்குள் புதைக்கப்பட்ட காரியங்களை மீண்டும் திறந்து பார்த்தால்; அசுத்தங்களும் அருவருப்புகளும்தான் மிச்சம். கடந்த காலங்கள் நன்றாகத்தான் இருந்தது, மலரும் நினைவுகள் இனிமையானவைகள்தான், ஆனால் அங்கே இயேசு இல்லையே! இயேசு இல்லாத கடந்த காலத்தைப் பார்த்து இனிமையானது என்று சொல்வதே பெரிய பாவமல்லவா? மாயையான கனவுகளையும் கற்பனைகளையும் சேகரித்து வைத்துத் தொலைத்துவிட்டு நிற்கும் இளைஞர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியாது.

*இந்நாட்களைப்பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லாதே; நீ இதைக்குறித்துக் கேட்பது ஞானமல்ல. (பிர. 7:10)*

நித்தியத்திற்கேதுவான காரியங்களை ஒன்றுசேர்த்து (**collect** பண்ணி) தேவனிடம் ஒப்புவித்து விடு. பரலோகத்தில் அதன் பலன் உண்டாயிருக்கும். விதையை விதை, பரலோக சேமநிதியில் விளைச்சல் உண்டாயிருக்கும். (2 தீமோ. 1:12)

உன் வீரபிரதாபங்களை வீணானகாரியங்களில் காட்டுவதால் என்ன பிரயோஜனம்? சூரியனுக்குக் கண்ணிவைக்க முயற்சிக்காதே, இருள் தடுக்கி விழுந்துவிடுவாய். இயேசு உன்னை முழுமையாக ஆளுகை செய்ய அர்ப்பணம் செய்; இதை விட மேலான சாதனை எதுவும்... இதுவரை எதுவும் இல்லை, இனிமேலும் இல்லை... (மாற்கு. 10:49)

இருள் மொய்த்துப்போன கருப்பு இதயங்களை இயேசுவிடம் கொண்டு வாருங்கள்; அதற்குப் புதிய மெருகு கொடுப்பார்.

... கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன். (எசே. 11:19) தோலுரிந்து விட்ட நினைவுகளுக்கும் புதிய வாழ்க்கையைக் கொடுப்பார். சுற்றுப்புறங்கள் உன்னை வெறுப்போடு வரவேற்கலாம்; இயேசுவோ உன்னை தூரத்தில் பார்க்கும்போதே எதிர்கொண்டு ஓடி வருகிறார்.

ஊரெங்கும் இருட்டியிருக்க, பொன் சட்டமிட்ட சதுர வெளிச்ச ஜன்னலருகே வெறித்துக் கொண்டு நிற்கும் வாலிபனே, உன் துக்கத்துக்கும் இயேசுதான் பதில், உன் தூக்கத்துக்கும் இயேசுதான் பதில்! கவலைகளைத் தூக்கத்திற்குள்ளாகப் புதைக்க முயற்சிக்காதே, அதை இயேசுவில் புதைத்துவிடு. படுக்கையில் சிதறிக்கிடக்கும் கனவுகளை அள்ளிக் குப்பைத்தொட்டியில் போடு; அவைகள் இயேசு தரும் தரிசனங்களுக்குச் சற்றும் ஒவ்வாதது. கர்ப்பத்தின் மௌனம் உன் எல்லைகளில் இருக்கவே கூடாது, இயேசுவோடு உலாவவேண்டும்,

தேவதூதர்களின் சிரிப்பொலியைக் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து ஏற்படுத்தியிருக்கும் அழகான ராஜசோலையிருக்க; நீங்கள் ஏன் சருகாக வேண்டும்? விவரங்கள் வேதமாக **(Bible)** உன் கையிலேயே இருக்க ஏன் முட்டி மோதிக்கொள்கிறாய்?

*"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. (சங்.19:7)"*

இது கிருபையின் காலம், தம்பி! தங்கைகளே, சீக்கிரமாக வாருங்கள், வண்டி **(Train)** போன பிறகு இருக்கும் **(Track)** தடத்தினால் பிரயோஜனம் இல்லை. (சங்.134:1) உயிர்ப்பார்வையின்றி அழுது வடியும் ஆத்துமாக்களின் கண்ணீரைத் துடைக்க ஓடோடி வாருங்கள்.

*"...பூமியின் மீதெங்கும் என் ஆடுகள் சிதறித்திரிகிறது; விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை. (எசே. 34:6)"*

முதல் முதலில் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்போது ஒரு வெளிச்சம் இருதயத்தின் அடிவாரம் வரை அடிக்கிறது. இளைஞர்கள் தங்களை உற்சாகமாக ஒப்புக்கொடுத்துக் கரங்களை தூக்குகிறார்கள். ஆனால் அந்த வெளிச்சத்தைக் கண்கள் பழகிக்கொள்வதற்கு முன்பாகவே மறைந்து விடுகிறதே! (பின்மாற்றம்) காரணம் என்ன? ஆத்துமபாரம் இல்லாததுதான், துரிதமான ஆத்தும ஆதாயப் பணியினால் பின்மாற்றத்தைத் தவிர்க்கலாம், நாம் படியேறும்போதெல்லாம் எதிர்கொண்டழைத்தபடி இறங்கிவரும் சாத்தானின் வல்லமைகளை ஒழித்துக்கட்டலாம்!

நனைந்த மரத்தில் முளைத்த காம்பில்லாத குடைக்காளான் போல நீ இருந்தாலும் பரவாயில்லை, உன்னையும் தேவனால் பிரயோஜனப்படுத்த முடியும்.

*"உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். (1 கொரி. 1:28)"*

வாலிபத் தம்பி! தங்கைகளே! சிகரங்களைக் குறிவையுங்கள்; புல்லென்றால் பனித்துளிகள், மலையென்றால் இலைகள், மலையென்றால் முகடுகள், வானமென்றால் மேகங்கள்! அடித்தளங்கள் அவசியம்தான், என்றாலும் அங்கேயே நின்று விடாதீர்கள். நடப்பது இருக்கட்டும்... பறக்க முயற்சியுங்கள்!

"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். (கொலோ. 3:2)" ஆத்துமாக்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள், சாத்தான் துரத்துகிறான், நாமும் துரத்துகிறோம், ஆனால் நோக்கம் தான் வேறு வேறு! அவன் கொல்லவும் அழிக்கவும் வருகிறான், நாமோ ஜீவன் உண்டாயிருக்கவும், அவை பரிபூரணப்படவும் அவைகளைப் பின் தொடருகிறோம்; நம்மில் கிறிஸ்துவின் ஜீவன் இருப்பதால்! (யோவான். 10:10)

வயசாகிப்போய் ஓட முடியாமல் மூட்டுவலியால் உட்கார்ந்துவிட்ட வயதானவர்கள், வெறும் பார்வையாளர்களாக மாத்திரம் இருக்காமல், ஓட்டப்பந்தயத்தில் ஓடிக் கொண்டிருக்கும் இளைய ஊழியர்களுக்காக ஜெபிக்கலாமே! (லூக். 2:37)

இளைஞர்களே, இதற்குப் பிறகும் இயேசுவண்டை வரத் தயங்கிக்கொண்டே நின்றீர்களானால்; நீ திரும்பும் திசைகளிலெல்லாம் புழுங்கிய புலம்பல்கள் தான் ஒலிக்கும்! (பிர. 11:9)

*நடந்தவைகளை நினைத்துக் கண்கள் வடித்த கண்ணீரும்,*

*விழித்திருந்த இரவுகளும் திருப்பித்தரப்போவது எதையுமில்லை.*

*நடக்காத சாத்தியங்களை நினைத்து ஏங்கி நிற்பதால்*

*நிஜங்கள் மாறியதாக வரலாறு இல்லை.*

*பிடித்த விதமாய் முடிவை மாற்ற*

*வாழ்க்கை சொந்தமாய் எழுதும் சிறுகதையில்லை.*

*தோல்வி தந்த காயங்கள் வெறும் சுவடுகளேயன்றி*

*ஆறாத தழும்புகளில்லை.*

*ஏமாற்றங்களால் பக்குவப்பட்ட மனதிற்கு இனிமேல் விழும்*

*எந்த அடியும் வலிக்கப்போவதும் இல்லை.*

*நம்மை உருவாக்கி, நமக்காக ஜீவனைக் கொடுத்து,*

*உயிர்த்தெழுந்து, நம்மை அரியணையேற்றி,*

*தன்னைப்போலவே உருமாற்றி, பரிபூரணப்படுத்தி,*

*நித்திய ஜீவனுக்குள் அழைத்துச் செல்லும் தேவன்*

*இயேசுவைத் தவிர வேறுயாருமில்லை!*

“அவராலேயன்றி (இயேசு) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, ... இரட்சிக்கப்படும்படிக்கு ... வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை ... (அப். 4:12)”

# இயேசு வருகிறார்....

உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள். இந்த e-Books அனைத்தும் புத்தக வடிவில் வெளியிடப்படவும் இன்னும் அநேகருக்கு பயனுள்ளதாய் அமையவும் ஜெபியுங்கள். உங்கள் அநுதின ஜெபத்தில் எங்களையும் எங்கள் ஊழியத்தையும் நினைத்துக் கொள்ளுங்கள். நன்றி!

எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008
தொலைபேசி: +91-461-23 77 88 9
அலைபேசி: +0-9442466250 & +0-9003456506
Email: sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

**Our Address:**

**Sis. LATHA DAVID**

SOVEREIGN JESUS MINISTRIES

**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST) TUTICORIN-628 008**
**Ph.: +91-461-23 77 88 9**
**Mobile: +0-9442466250 & +0-9003456506**
Email: sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com